[illegible]

14 Jan 1931

JL
[illegible]211, NUAB
N31.16.7
182505

6 - FEB 1931

ஆசிரியரின்றி ஆங்கிலந்
தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(மூன்றும் பதிப்பு) விலை ரூபா 2-0-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800-பக்கங்களுக்குமேல் திக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனுமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச்செலவில்லாமலும், வேறெவ்விதக்கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனுல் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியி...சேர்த்து...ருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூ... ...ம்மன்பதை இந்நூல் ...ட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு ...வும் தோழன்' என்று ...ணிவித்தியாசம், அன்னியதேச நாணயமதிப்பு மிகப் பெரிதும் உடைய ...ிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. களுக்குத் தாங்களே கூ... ...லுங்கு பதிப்பு விலை ரூபா 2. கொள்ளவும் இந்நூல் மிகவும்

ஆனந்தபோதினி ஆபீஸ்,
ஆனந்தபோதி... தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின்
# - இரகசியங்கள் -

(மூன்றாம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு
ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்க[…]



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் (?)
பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ൳

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; ே
பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆன
இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்
கையை நல்வாழ்க்கையாக நடத்திப் போன
ளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடை
இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்பே

பிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய பூஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், பூஷ்டிக்காத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டு மென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப் பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

(இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந்திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயுபடிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்) 9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இதுதான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா | | | 2 | 0 | 0 |
| ஐந்தாவது பாகம் மாத்திரம் | ,, | ,, | 1 | 10 | 0 |
| ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் | ,, | ,, | 8 | 0 | 0 |

**பவளத்தீவு 2 பாகம் 3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகிகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

# மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

அற்புதமர்மங்கள் அல்லது

ஆனந்தஸிங்கின் அஷ்டஜேயங்கள் **1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டுவிதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

**அமராவதி 2 பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**இரத்தினபுரி இரகசியம் 4 பாகம் 8 4 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

# நெட்டாஜி சரித்திரம்

(பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவம் எழுதியது.)

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக அவனியில் தோன்றி அவதார புருஷராய் விளங்கிய சிவாஜிக்குப் பக்கத் துணையாய் இந் நெட்டாஜி எப்பொழுதும் நின்று மொகலாயக் கொடுங்கோன்மையினின்றும் தேசத்தை விடுதலை செய்து சிவாஜிக்கு நேரிடயிருந்த பல விபத்துக்களையும் தடுத்து, அவருக்குச் சதிசெய்த பாவிகளின் உயிரைப் போக்கி, அஞ்சா நெஞ்சனாய் அநேக ஆபத்துக்களினின்றும் தப்பி, ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கினன். இதில் யுத்த சம்பந்தமான தந்திரங்களும் வீரர்களின் சாமர்த்தியங்களும் வெகுவாக எழுதப்பட்டு தேசபக்தியைப் புகட்டும் விஷயங்கள் நிறைந்திருக்கின்றது. இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28–2–31 வரை அணா 8.

# கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

தற்காலம் கிராமபோன் என்னும் ஸங்கீதக் கருவியில் பாடிவரும் திருச்செந்தூர் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பைய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், மிஸ் கே. ரங்கநாயகி, மதுரை மிஸ் அ. சுந்தரம், திருநெல்வேலி டி. எஸ். ரங்கம்யாள், சேலம் அம்மாகண்ணு, திருவிடைமருதூர் பவானி, சேலம் கோதாவரி, மிஸ் லோகாம்பாள் இன்னும் பல வித்வத் ரத்னங்கள் பாடிய 300 கீர்த்தனைகளை ஒருங்கு சேர்த்து ராகதாளங்களுடன் அச்சிட்டு நேர்த்தியாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதாபிமானிகளுக்கு இது ஓர் பொக்கிஷம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

**301 கீர்த்தனைகள் கொண்ட 1-ம் பாகம் விலை ரூபா 1.**
**246 கீர்த்தனைகள் கொண்ட 2-ம் பாகம் விலை ரூபா 1.**
**211 பெரிய கீர்த்தனைகளுள்ள 3-ம் பாகம் விலை ரூபா 1.**
**226 பெரிய கீர்த்தனைகளுள்ள 4-ம் பாகம் விலை ரூபா 1.**

நான்கு பாகம் சேர்ந்தது ஒரே கட்டடம் விலை ரூபா ௩—4—0

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன் 2பாகம் | 3 | 4 |
| மதனம்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச் சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் ... | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்தினபுரி ரகசியம் 4-பாகமும் | 8 | 4 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாஸனி ... | 0 | 14 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தஸிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| அர்ஜுனஸிங், சுந்தர் ... | 0 | 2 |
| கைவல்லிய நவநீத வசனம் ... | 1 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் ... | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| விவேகாநந்தர் ... | 4 | 0 |
| தமிழ் மெடீரியா மெடிகா ... | 3 | 0 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாள பகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீதரம்பை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| துயராளன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மி கதை ... | 0 | 10 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளினசுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயண சங்கிரக வசனம் | 2 | 0 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 7 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| மும்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 8 |
| பரசுராமன் ... | 0 | 3 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் தூது வசனம் ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| நாலுமந்திரி கதை ... | 0 | 4 |
| மங்களேசுவரன் ... | 0 | 6 |
| தக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மதிமோச விளக்கம் ... | 1 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மீனுமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணாகானன் ஞானேந்திரி ... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| தாவிகட்ட மறந்த கதை ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


உ

ஓம்

பரப்பிரஹ்மமணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி 16 | பிரமோதூதவரு தைமீ 1உ<br>1931வரு ஜனவரிமீ 14உ | பகுதி 7 |
|---|---|---|


OFFICE OF THE ... 6 – FEB

## கடவுள் வணக்கம்.

இன்னும் பிறப்பதற் கிடமென்னி னிவ்வுடல
மிறவா திருப்ப மூலத்
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண்ட லத்திலுற
வென்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காத சேயென வளர்த்திடப்
பேயேனை நல்கவேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டென்னி னிம்மையே
பேசுகரப் பூரதீபம்
மின்னும் படிக்ககண் டாகார வன்னைபால்
வினையேனை யொப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவுநன் றிவையன்றி
விவகார முண்டென்னிலோ
தன்னந் தனிச்சிறியன் ஆற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே
சர்வபரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதா னந்தசிவமே. (1)

வடிவெ லாநின் வடிவென வாழ்த்திடாக்
கடிய னேனுமுன் காரணங் காண்பனோ
நெடிய வானென எங்கு நிறைந்தொளிர்
அடிக ளேயரு ளேயரு ளத்தனே. (2)

அஞ்சுமுகங் காட்டாமல் ஆறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ. (3)

## அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் உலகியல் விவகாரங்களினின்றும் தம்மை விடுவித்து வீட்டு நெறி கூட்டுமாறு வேண்டுகிறார்.

(இ-ள்.) மேன்மேலும் விருத்தியடையாநின்ற நன்னெறியையுடைய முத்திக்கு முதல்வனே! எல்லாப் பொருள்களிலேயும் நிறைந்த, அகண்ட வஸ்துவாகிய உண்மை அறிவு ஆனந்த வடிவ சிவமே! இனிமேலும் பிறவிக்கு இடம் உண்டென்றால் இச் சரீரம் இறவாதிருக்கும்படி மூலாதாரத்தில் உண்டாகின்ற அக்கினியானது அமிர்தம் ஒழுகாநின்ற சந்திரமண்டலத்தில் பொருந்தும்படி என் தாயாராகிய குண்டலி சக்தியினிடத்தில், பழுதுண்டாகாமல் குழந்தைபோல வளர்த்தற் பொருட்டு பேயை ஒத்த அடியேனைக் கொடுத்தல் வேண்டும். பிறவாவழி எனக்குளதாயின் இம்மையில் புகழப்பெற்ற கர்ப்பூர தீபம்போல ஒளிவிடுமாறு அகண்டரூபம் என்கிற தாயினிடம் தீவினையேனாகிய என்னை ஒப்புவித்து மோட்ச மார்க்கத்தில் சேர்த்திடுதல் மிகவும் நன்மையாகும். இவையன்றி வழக்கு இருக்கிறது என்றாலோ தனியேனாகிய சிறியேன் பொறுத்திலேன் என்பதாம்.

குண்டலி சக்தியை அடையின் அச்சக்தியின் உதவியால் மூலாதாரத்தினின்றும் ஆறாதாரங் கடந்து, மதியமிர்தமுண்டு, பேரொளி தரிசனம் கண்டுய்யலாம். அகண்டாகார அன்னையாகிய பராசக்தியை அடையின் சுத்தாத்துவிதம் பெற்றுய்யலாம். இவ்விரண்டிலும் சேராதிருப்பின் பிறப்பிலும் இறப்பிலும் மொத்துண்டுய்ய வேண்டும்; ஆகலின் அடியேனுக்குப் பிறவியுண்டெனில் குண்டலி சக்தியாகிய தாயினிடத்தில் என்னை ஒப்புவிக்க வேண்டும் எனவும், பிறப்பில்லையேல் அகண்டாகார ரூப அன்னைபால் என்னை ஒப்புவிக்க வேண்டும் எனவும், இவ்வாறு இரண்டிலொன்று செய்யாமல் வைத்திருந்தால் தன்னந் தனிச் சிறியேன் ஆற்றிலேன் எனவும் கூறினார்

(2) இதனால் இறைவனது முதன்மையைக் காணல் அரிது என்று கூறுகிறார்.

(இ-ள்.) பரந்து விரிந்த ஆகாயத்தைப் போல் எங்கும் நிறைந்து விளங்குகின்ற முதல்வனே! இறைவனே! கிருபையுள்ள தந்தையே! பல்வேறு வகைப்பட்ட உருவங்களை யெல்லாம் உன் உருவம் என்று போற்றாமல் கடின சித்தன் ஆகிய அடியேன் உன் முதன்மையினைக் காண வல்லனோ என்பதாம்.

எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் கலந்து நின்று, அவைகளைக் காரியப்படுத்தி அவைகளே என்று சொல்லும் வண்ணம் முதல்வன் சர்வ வியாபியாயிருத்தலின், அவ்வுண்மையினை அறிந்தவரே அம்முதல்வனின் முதன்மையினைக் காணவல்லராகலின் "வடிவெலா நின்........................ ...............காண்பனோ" என்றார்.

(3) பிறர் பயப்படும்படியான கோபக் குறியோடு கூடிய திருமுகத்தினைக் காட்டாமல், யாவருக்கும் ஆறுதலைக் கொடுக்கும்படியான ஆறு முகங்களைக் காட்ட வந்த (முருகக் கடவுள்) செவ்விய அடைக்கல ஸ்தானமாகிய திருவடியை மனதில் வைப்பது எந்த நாளோ என்பதாம்.

# ஆனந்தபோதினி

பிரமோதூத

௵ தைமீ 1௨

## பொருளாதார நிலை.

நமது பாதகண்டம் இயற்கை வளம் செறிந்தது. உலகத்திலேயே தலைசிறந்து விளங்கும் ஜீவநதிகளும், குல பருவதங்களும், செழுமை வாய்ந்த உழுநிலங்களும், பயன் தரும் பருவக்காற்றுக்களும், சமமான தட்ப—வெப்ப நிலைமைகளும் அமைந்திலங்கும் பெருமை, நமது பாதகண்டத்துக்கே உண்டு. இதனாலேயே இதனைப் புண்ணியபூமி—போகபூமி என்று உலகம் புகழ்ந்தது. இது ஒருகாலத்தில் உலகத்துக்கே உண்டியும், உடையும், அறிவும், நாகரிகமும் உதவிய பெருமையையும் சரித்திரம் விரித்துக் கூறுகிறது. இக்காலத்தில் உலகத்தையே ஒரு சில நாட்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வரும் முறையில்—நிலத்திலும், நீரிலும், வானிலும் போக்கு வரவு சாதனங்கள் அமைந்திருக்கின்றன. முற்காலத்தில் இவை இல்லை. அவ்வாறிருந்தும், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள, ஐரோப்பியர் மனங்களையும் நமது நாட்டுச் செழுமை கவர்ந்து நின்றது என்றால், இதைப்பற்றி அதிகமாய் விரிப்பது அநாவசியம் என்றே கருதுகின்றோம். பணத்தை ஆட்கொல்லி என்று கூறும் வழக்கம் ஒன்று உண்டு. பணம் படைத்தவனுக்குப் பயம் அதிகம். அவன் என்றும் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். ஒன்றும் இல்லாதவனுக்கு ஒன்றும் இல்லை. பாரத அன்னை நீர்நில வளங்களிற் சிறந்து, செல்வத் திருமகளாய்

---

சில கோயில் குருக்கள்மார் சிறுபிள்ளைகள் சுண்டலுக்கு வந்து விடுவார்களே என்று பயந்து பூஜை செய்யும்போது மணி ஆட்டுகிறதே யில்லையாம்.

வீறுகொண்டிருந்தமையினாலேயே இப்பொழுது சுதந்தரம் இழந்து வறுமையில் ஆழ்ந்து வாடிக்கொண்டிருக்கின்றாள் என்று கூறவேண்டும். நமது நாட்டில் தோன்றிய மேதாவிகள்—மகான்களின் தொகைக்கு அளவு இல்லை; சாஸ்திரங்களின் சங்கியைக்கு எல்லை இல்லை. அத்தகைய பெரியோர்களின் பரம்பரையில் தோன்றி, தெய்வ மணங் கமழும் சாஸ்திரப் பயிற்சி நிறைந்திருந்த நாட்டிலே வாழும் நாம் இக்காலத்தில் எந்நிலையில் இருக்கின்றோம்? பிறர் கைகொட்டி நகைக்கப் பீடழிந்து நிலைகுலைந்து நிற்கின்றோம்.

இத்தகைய இழிநிலை நம்மைப்பற்றி நிற்கின்றமைக்குக் காரணம் என்ன என்பதை எல்லாரும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். நமது நாட்டில் முதன்மை பெற்று விளங்கிய உழவுத்தொழில் ஒளி மழுங்கியது! கைத்தொழில் கைபற்றுப் போயிற்று! வர்த்தகத் துறை வியர்த்தமாயிற்று. ஆண்டுதோறும் உடைக்கும் பிறவற்றிற்கும் பலகோடிக்கணக்கான ரூபாய்கள் அந்நிய நாடுகட்குச் சென்றுகொண்டிருக்கின்றன. அரசியல் நிர்வாகத்துக்கும் அளவு கடந்த பொருள் வெளியேறுகிறது. இதனால் நாட்டின் பொருளாதார நிலைமை நாளுக்குநாள் அதி பயங்கரமாய்க் கீழ்நோக்கி வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது நாட்டில் தீவிரமாய்ப் பரவி நடைபெற்று வரும் அரசியல் போருக்குக் காரணம் பொருளாதார முட்டுப்பாடு என்பதை மறுப்பவரும் இருப்பரோ?

இந்தியாவைத் தவிர, ஏனைய நாடுகள் எல்லாம் ஒவ்வொரு துறையிலும் வியக்கத்தக்க வண்ணம் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. சென்ற நூற்றாண்டின் மத்தியில் ஊர்—பேர் தெரியாமல் இருந்த ஜப்பானுங்கூட இப்பொழுது மேனாடுகளோடு எல்லா அமிசங்களிலும் போட்டிபோட முன்னணியில் முனைந்து நிற்கிறது. துருக்கி, சீனம் முதலிய நாடுகளும் கண்விழித்து எழுந்து சுறுசுறுப்பாய் வேலைசெய்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தப் போக பூமி—புண்ணிய பூமி மட்டும் அறிவு மழுங்கி, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி ஒடுங்கிக் கிடக்கின்றது. "உயர்ந்தன தாழும், தாழ்ந்தன உயரும்" என்ற ஆன்றோர் வாக்கும் பொய்க்குமோ?

இது நவீன காலம். இக் காலத்தில் ஒவ்வொரு தொழிலும் சாஸ்திரீயமாகச் செய்யப்படுகின்றது. இதனால் அதிகப் பயன் அடைதலும் பிரத்தியக்ஷமே. நம் நாட்டு விவசாயம் இன்னும் பழைய தோரணையிலேயே சென்றுகொண்டிருக்கிறது. அமெரிக்கா முதலிய மேனாடுகளில் விவசாயம் சாஸ்திரீயமாகச் செய்யப்படுகிறது. அதனால் அந்நாட்டார் பாறைகளிலும் பலன் கண்டுவிடுகின்றனர். எத்தகைய நிலத்தையும் உழவுத் தொழிலுக்குத் தகுதி வாய்ந்த

ஒவ்வொருவரும் நாடகத்திற்குச் செல்லும்போது முன் இடத்திலேயே உட்காரவேண்டுமென்று நினைத்தால், ஆகிற விஷயமா, போகிற விஷயமா?



தாகச் செய்து விடுகின்றனர். நம் நாட்டு உழவர்கட்கோ இன்னும் குட்டைக் கலப்பைகளை விட்டுவிட மனம் வரவில்லை. புதிய முறையில் விவசாயம் நடத்துவது ஆகாத காரியம் என்றே நம்மவர் பெரும்பான்மையோர் கருதிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் இத்தகைய மனப்பான்மை கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் பெரும்பாலோர் கடனாளிகளாயிருப்பதும், புதிய முறைகளைத் தெரிந்துகொள்ளாமையுமே யாகும். புதிய கைத்தொழில் முறைகளும் நம் நாட்டு மக்கட்கு இன்னும் நூதனமாகவே இருக்கின்றன. இவற்றின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தாரின் ஆதரவும் இல்லை. சுமார் நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் இத்துறைகளில் இங்கிலாந்தும் கீழ்நிலையிலேயே இருந்து வந்தது. இப்பொழுது உலகத்திலேயே பெருமை வாய்ந்த நாடாகி உந்நதஸ்தானம் வகிக்கிறது. இவ்விங்கிலாந்து வாசிகளாலேயே நூற்றைம்பது ஆண்டுகட்கு மேலாகவே நமது நாடு ஆளப்பட்டு வந்தும் இன்னும் பழைய குருடியாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதன் மர்மம் என்ன? அது சுதந்தர நாடு, இது அடிமை நாடு என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்?

நமது நாட்டிலும் மக்கள் கல்வி கற்று வருகின்றனர். ஆனால் அதன் தன்மை என்ன? பயன் என்ன? இதனால் அவர்கள் எத்தகைய அறிவைப் பெறுகின்றனர் என்பவைகளை யோசிக்கும்போது யாரும் வருந்தாமல் இருக்கமுடியாது. உயர்தரக் கலாசாலைகளுக்கோ, கல்லூரிகட்கோ—இவற்றிற் காதாரமான சர்வ கலாசாலைகட்கோ நாட்டில் பஞ்சம் இல்லை. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளியேறிக்கொண்டே இருக்கின்றனர். நகரங்களில் கல்வி கற்கும்போது மாணவர்களின் ஆடம்பரங்கட்கும், படாடோபங்கட்கும், அந்தஸ்துகட்கும் எத்தகைய குறைவும் இல்லை. பெரும்பான்மையான மாணவர்கள் "எருது வலி காக்கைக்குத் தெரியாது" என்றபடி தாய் தந்தையர்களின் வருத்தம் தெரியாமல் செலவழித்துவிட்டு வருவதிலும் குறைவில்லை. தாய் தந்தையரும் தம் மக்கள் பட்டம் பெற்றுப் பெரிய உத்தியோகத்துக்குப் போய் ஈடேற்றிவிடுவார்கள் என்று மனப்பால் குடித்துக் கொண்டே கடன் வாங்கி அனுப்புவதிலும் பின்வாங்குவதில்லை. ஆனால் பட்டதாரிகள் வெளியே வந்தபின் சாதிப்பது என்ன? அவர்களுக்கு முதன் முதலில் பிரத்தியக்ஷமாவது வேலையில்லாத் திண்டாட்டமே! அரசாங்கம் எத்தனை பேர்களுக்கு உத்தியோகங் கொடுத்துவிடும்? முப்பது ரூபாச் சம்பளத்துக்கு முந்நூறு பி. ஏ. விண்ணப்பங்கள் குவிந்துவிடும் என்பது உயர்வு நவிற்சி அல்ல—உண்மையே

ஒருவன் சென்ற திசையிலேயே நாமும் ஏன் செல்லவேண்டும்? வேறொரு மார்க்கத்தைத் தேடிச்செல்ல லாகாதா? அதனால் வெற்றியும், புகழும், பேரும் உண்டாகாமற் போய்விடுமா?

யாகும். ஏதோ கொஞ்சம் பொருள் படைத்தவர்கள் வக்கீல்களாகவோ, டாக்டர்களாகவோ வர முயற்சிக்கின்றனர். இக்காலத்தில் அவர்கள் சம்பாதிக்கும் வேடிக்கையும் நாடறிந்ததே. தற்காலக் கல்வி முறை நாட்டில் இத்தகைய இழி நிலைமையையே ஏற்படுத்தி விடுகின்றது என்று யாம் பன்முறை குறிப்பிட்டிருக்கின்றோம். இக் கல்வி அடிமை மனப்பான்மையைத் தவிர வேறு ஒன்றையும் உண்டாக்குவதில்லை; விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முதலிய தொழின் முறைகட்கும் மக்கட்கும் சம்பந்தம் இல்லாமலே செய்து விடுகின்றது. இதனால் பட்டம் பெற்று வெளியே வருகிறவர்கள் செய்வதறியாது தெருவில் நின்று திகைக்க வேண்டியவர்களாகிறார்கள்.

நாகரிகம் பெற்ற பிறநாடுகளில் உள்ள கல்வி முறை இவ்வாறு இல்லை. அந்தக் கல்வி மக்கட்குத் தந்நம்பிக்கையையும், சுதந்தர உணர்ச்சியையும் பயக்கின்றது படித்துவிட்டு வெளியே வந்தவுடன் உத்தியோகங்கட்குச் சிபார்சு பிடிக்கும் வேலையில் அந்நாட்டு மாணவர்கள் இறங்குவது இல்லை. ஏதேனும் சுதந்தரத் தொழில் செய்யவே அவர்கள் முனைந்து நிற்பார்கள். அவர்கள் கற்ற கல்வி அவ்வாறு தூண்டுகிறது! பிற நாடுகளில் தொழில் கல்வியைப் பற்றிய சில விவரங்களைக் கீழே தருகின்றோம். வாசகர்கள் ஊன்றிப் படித்து உண்மை உணர்வார்களாக.

1924-ம் ஆண்டில் அமெரிக்கா-ஐக்கிய மாகாணத்தில் தொழிற் கல்வி புகட்டும் கலாசாலைகள் நூறு இருந்தனவாம். அந்தக் கலாசாலைகளில் மொத்தம் 80000 மாணவர்கள் கல்வி பயின்று வந்தார்கள். அங்கு கலாசாலைக் கல்வி பயிலும் மாணவர்களில் இந்தத் தொகை பத்தில் ஒரு பகுதியாகும். ஜெர்மனியில் 1924-25-ல் மொத்தக் கலாசாலை மாணவர்கள் 60,000 பேர். இவர்களில் 10,957 பேர் வர்த்தகம் முதலிய தொழிற் கல்வி கற்று வந்தனராம். இதோடு இந்தியாவின் நிலைமையை ஒப்பிட்டுப் பாருங்கள். இந்திய சர்வ கலாசாலைகளில் மொத்தம் லக்ஷம் மாணவர்கள். இவர்களில் வியாபாரம் முதலிய தொழிற கல்வியில் இறங்கியவர்கள் எத்தனைபேர்? வெட்கம்! வெட்கம்!! இரண்டாயிரத்து ஐந்நூறு பேர்களே! முப்பத்து முக்கோடி மக்கள் நிறைந்துள்ள இந்தியாவில் 14 வர்த்தக கலாசாலைகளே இருக்கின்றன. இவற்றிற்கும் போதிய ஆதரவு கிடையாது. அரசாங்கத்தார் வெறும் கலாசாலைப் படிப்புக்கு ஏராளமாகச் செலவழிப்பதை மட்டுப்படுத்தி நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்ப ஏற்பாடு செய்யவேண்டும்,

---

குழந்தை ஆயிற்றே என்று ஒரு அழகான பொம்மையைக் கையில் கொடுப்பதற்கு ஆசையில்லை; கொடுத்த மறுநிமிடம் பொம்மை சிரச்சேதம் செய்யப்படுகிறது.



இந்தியாவின் பொருளாதார நிலை வளர்ச்சி பெறும் முறையைக் குறித்து பம்பாயில் ஒரு வர்த்தக கலாசாலை ஆண்டுவிழாவின்போது ஸர். விசுவேசுரையா குறிப்பிட்ட யோசனைகள் இங்கே கவனிக்கத் தக்கன. அவையாவன:

"பொது ஜனக் கல்வியை விருத்திசெய்து வர்த்தக விவசாயத் தொழிற் கல்வி அளிக்கவேண்டும். கைத் தொழில்களை விரைவாக விருத்தி செய்து போக்கு வரவு வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டும். விவசாய விளைபொருள்களை விருத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். குடியேற்ற நாடுகளில் உள்ள மாதிரி காப்பு வரி ஏற்படுத்த வேண்டும். குடியேற்ற நாடுகளைப் பின்பற்றி வர்த்தகத்தை விருத்தி செய்யவேண்டும். கானடா மாதிரி வர்த்தக, கைத்தொழில், விவசாயப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், முறைப்படுத்தி வைக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். தேசப் பொருளாதார நிலைமையைப் பற்றி ஒரு சர்வே நடத்தவேண்டும். நாணய மாற்று விகிதத்தை ஒரே படியாக நிர்ணயம் செய்யவேண்டும். உறுதியான பாங்குகள் ஸ்தாபனமாகவேண்டும். சர்வதேசப் பொருளாதாரச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும்." என்பனவாகும். ஸர். விசுவேசுரையா பெரிய மதியூகி, பொருளாதார ஆராய்ச்சி நிபுணர். மேனாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்த அநுபவம் வாய்ந்தவர். பெரிய ராஜ விசுவாசி. இவர் கூறிய ஆலோசனைகளையேனும் அரசாங்கத்தார் காரியத்தில் நிறைவேற்றிவைக்கக் கடமைப்பட்டவர்களல்லரா என்று கேட்கின்றோம்.

இந்தியாவின் பொருளாதார மூலங்கள் வளர்ச்சி பெறத்தக்க காரியங்களை அரசாங்கத்தார் செய்யவேண்டும் என்று நீண்ட நாட்களாகவே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதற்காக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெற்ற கமிஷன்களும், மேனாடுகளில் உள்ள ஏற்பாடுகளைப் போன்று இந்நாட்டிலும் வியாபாரக் கல்வி, தொழிற் கல்விகளைப் போதிப்பதற்குரிய கல்லூரிகளையும், கலாசாலைகளையும், சர்க்கார் ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்கள், நாட்டுக்குப் பயன்படுமாறு தொழிற்சாலைகள் ஸ்தாபிக்க ஆதரவு செய்யவேண்டும் என்றும் சிபார்சு செய்து வற்புறுத்தியிருக்கின்றன. பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை யாதலால் யாம் மேற் குறிப்பிட்ட காரியங்கள் நடைமுறையில் வரும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். எல்லாம் வல்ல திருவருள் முன்னிற்பதாக. சுபம்.

ஓம் தத் ஸத்.

---

விலையுயர்ந்த பவுண்டன்பேனாவாக விருந்திடினும், நிக்கல் கிளிப்பு ஒன்றில்லாமற் போனால் மட்டபேனா மாதிரியே தோன்றுமாம்.




# வீரமா நகர்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

இலங்கையின்மீது பகைவர் படையெடுத்து வந்தபோது, தமையனுய இலங்கை வேந்தனைத் துறந்து மாற்ருருடன் சேர்ந்த விபீஷணனை, மேகநாதன் மனமார வெறுத்தான். அரக்கரது மாயத்தை அயோத்தி வீரனிடம் அறிவித்து நிகும்பலை வேள்வியை நிறைவுருமற் செய்த சிறிய தந்தையின் சிறுமையை நினைந்து சீற்ற முற்ருன். இராவணன் செய்த பெரு நன்றியை மறந்து. உறவினர் என்னும் பாசந் துறந்து அரக்கர் குலத்திற்கு அழிவு சூழ்ந்த விபீஷணனை நிகும்பலைப் போர்க்களத்திற் கண்டபோது மேகநாதனது கண்களில் தீப்பொறி பறந்தது. நெஞ்சம் துள்ளித் துடித்தது. மானமாய அணியிழந்து மாற்ருரது அடிபணிந்து வாழக் கருதிய விபீஷணனை நோக்கி, வில்லின் செல்வனுய மேகநாதன் கூறும் மொழிகளில் வீரமும் மானமும் விளங்கித் திகழக் காணலாம். நிருதர் குலத்திற் பிறந்து நிருதரை யெல்லாம் நீருக்கக் கருதிநின்ற அறிஞனை நோக்கி,

"நீருளதனையும் உள்ள மீனென நிருத ரெல்லாம்
வேருளதனையும் வீவார் இராவணனேடு மீளார்
ஊருள தொருவன் நின்ருய் நீயுனை யுரைய நின்னேடு
ஆருளர் அரக்கர் நிற்பார் அரசு வீற்றிருக்க வையா"

என்று மேகநாதன் கொதித்துக் கூறினன். "ஐய? இலங்கைமாநகரில் வாழும் அரக்கரெல்லாம் இலங்கேசனுக்குத் துணையாய் நின்று அமர்க்களத்தில் ஆவி துறப்பது திண்ணம். இவ்வாறு இலங்கை வேந்தனும் அரக்கர் குல மடங்கலும் அழிந்துபட்டபோது நீ எவர்க்கு அரசனுய் இலங்கையை ஆள இருக்கின்ருய்," என்று மேகநாதன் கூறும் வீர மொழிகளில் அரக்கரது வீரம் அழகுற இலங்கக் காணலாம். இன்னும் யானை யிருந்து ஆணை செலுத்திய ஆசனத்தில் பூனை யிருந்து அரசாளக் கருதிய பான்மைபோல் வீரனுய இராவணன் வீற்றிருந்த அரியணையில் அமரும் உரிமைபெறக் கருதிய விபீஷணனது சிறுமையை மேகநாதன் விளங்கக் கூறினன். ஐய! தேவரிற் சிறந்த திருமாலை வென்று, கண்ணுதற் பெருமான் வீற்றிருக்கும் கைலையை யசைத்து எத்திசையும் புகழ் மணக்க, இனிதிருந்த இராவணன் புரந்த இலங்கையை நீ அயலார் பலங்கொண்டு ஆளுதல் எழமை யன்ருே? என்று மேகநாதன் கூறும் மொழிகள் வீரமணம் கமழ்வன வாகும்.



"முந்தை நாள் உலகந்தந்த மூத்தவா னேர்கட் கெல்லாம்
தந்தையார் தந்தையாரைச் செருவிடைச் சாயத்தள்ளி
கந்தனர் தந்தையாரைக் கையிலையோடு ஒரு கைக்கொண்ட
எந்தையார் அரசு செய்வது இப் பெரும்பலம் கொண்டேயோ"

என்று தன் பலமின்றி அரசாளுந் தகவின்மையை மேகநாதன் இடித் துரைத்தான். இன்னும் இலங்கையின் இணையற்ற செல்வத்தை விரும்பி, மானத்தை நீத்து, பொன்விலங்கு பூண்டாற் போன்று மற்ருெருவனுக்கு அடிமையாய் வாழும் மானமற்ற வாழ்க்கையை மேகநாதன் மனமார வெறுக்குந் திறம் அறிதற் குரியதாகும்.

"பனிமலர்த் தவிசின் மேலான் பார்ப்பனக் குலத்துக் கெல்லாம்
தனிமுதல் தலைவனுன உன்னைவந்து அமரர்தாழ்வார்
மனிதருக் கடிமையாய் நீ இராவணன் செல்வம் ஆள்வாய்
இனியுனக் கென்னேமானம எங்களோடு அடங்கிற் றன்றே"

என்று மேகநாதன் கூறும் வீரமொழிகள் கற்போர் கருத்தைக் கவர்வனவாம். புலத்தியன் மரபிற் பிறந்த அரக்க வீரர்கள், அஞ்சாது போர்புரிந்து புலையுறு மரண மெய்திப் பொன்ருப் புகழ் பெறுவராதலால் அவரோடு மானமு மடங்கி மாய்ந்து விடும் என்று வில்லின் செல்வனுய மேகநாதன் கூறும் மொழிகள் மானமாய மணங் கமழ்ந்து மாண்புற விளங்குவனவாம். இன்னும் அரக்கர் குலத்தைப் பலவாருகப் பழித்தும் இழித்தும் மானபங்கப் படுத்திய, மாற்ருர் அடிபணிந்து அவர்க்கு ஆட்செய்தல் அழகாமோ என்று மேகநாதன் வினவும் முறை அறிந்து போற்றத் தக்கதாகும்.

"சொல்வித்தும் பழித்தும் நங்கை மூக்கினைத் துணிவித்தோரார்
எல்வித்தும் படைக்கை யுங்கள் தமயனை எங்களோடும்
கொல்வித்தும் தோற்றுநின்ற கூற்றினர் குலத்தை யெல்லாம்
வெல்வித்தும் வாழும் வாழ்வின் பெருமையே விழுமிதன்ருே"

என்று மேகநாதன் விபீஷணனை நோக்கி வினவினன். அரக்கர்கோன் தங்கையை மூக்கரிந்து, அரக்க வீரர்க்கு ஆருத உலை வைத்து, காலனது குலத்தைக் களிப்பித்த பகைவனைத் தொழுது வாழும் பெருமை விழுமிய தன்ருே என்று உலகெலாங் கலக்கி வென்ற வீரன் வினவினன். இன்னும் இலங்கை வேந்தனுய இராவணனது பொன்னர் திருமேனி போர்க்களப் புழுதியில் தோயும் காட்சியை இளைய தந்தையின் கண்ணெதிரே எழுதிக் காட்டும் மேகநாதனது மொழிகள் உள்ளத்தை உருக்குவனவாம்.

"எழுதி ஏர் அணிந்ததிண்டோள் இராவணன் இராமன் அம்பால்
புழுதியே பாயலாகப் புரண்டநாள் புரண்டு மேல்வீழ்ந்து
அழுதியோ நீயும்கூட ஆர்த்தியோ இவனை வாழ்த்தித்
தொழுதியோ யாதோ செய்யத் துணிந்தனை விசயத் தோளாய்"

என்று மேகநாதன் கொதித்துக் கூறினன். வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும் இராமனது அம்பால் அடியுண்டு விழுந்து புழுதியே பாயலாகப் புரளும் பொழுது, ஐயனே, நீ தமையனது மேனியைக் கண்டு தளர்ந் தழுவாயோ? அன்றி ஒன்ஞருடன் சேர்ந்து உள்ளக் களிப்பால்

துள்ளி மகிழ்வாயோ? மன்னனைக் கொல்வித்த மாற்றார் வீரத்தை மனமார வாழ்த்தித் தொழுவாயோ? யாது செய்வாய் ஐயா! என்று வீரன் கூறும் விழுமிய மொழிகள் சோகம் நிறைந்தனவாம். ஆகவே உற்றாரென்றும் உறவினரென்றும் பாராது, மானமென்றும் ஈனமென்றும் எண்ணாது, செய்ந்நன்றியறித லென்னும் செம்மை சான்ற அறத்தினைச் சிதைத்து, மாற்றாரது அடிபணிந்து அரசாளக் கருதிய ஆசை அருவருக்கத் தக்கதென்பது மேகநாதனது அடிப்படையான கருத்தாகும்.

இவ்வாறு மானமே உயிரின் மணமென்று கருதிய மேகநாதன், விண்ணிலும் மண்ணிலும் புகழ்பெற்ற தன் வீரத்தாதையை உயிரினும் உயர்வாகப் போற்றினான். வரத்திலும் வலிமையிலும் ஒப்புயர்வற்று இலங்கிய இலங்கேசன் புகழொளி பரப்பி இப் பூவுலகில் பல்லாண்டு வாழ்ந்திருக்க வேண்டுமென்று, வீர மைந்தன் கருதினான். இலங்கையில் வாழ்ந்த அரக்கரது வாழ்க்கை இராவணன் வாழ்க்கையொடு இரண்டறக் கலந்திருந்த தன்மையை இனிதறிந்த மேகநாதன், வீரத்தாதையின் முன்னே குறுகி நின்று, சீதையைச் சிறைவீடு செய்யுமாறு இரந்து வேண்டும்முறை அறிந்து இன்புறத் தக்கதாகும். நிகும்பலைப் போர்க்களத்தில் மாற்றார் புய வலிமையை மாண்புறத் தெரிந்த இம் மைந்தன் அம்பு செறிந்த மேனியோடு அரண்மனையை நண்ணி, அங்கு ஆரியாசனத்தி லமர்ந்திருந்த அரக்கர்கோனை நோக்கி ஐயனே,

"நிலஞ்செய்து விசும்பும் செய்து நெடியவன் படை நின்றானை
வலஞ்செய்து போவதானால் மாற்றினி வலியதுண்டோ
குலஞ்செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டோம்
சலஞ்செயின் உலக மூன்றும் இலக்குவன் முடிப்பன்தானே"

என்று மாற்றாரது பெருமையை மறையாது எடுத்து உரைத்தான். ஓங்கு புகழால் உலகளந்த மேகநாதன் இவ்வாறு தன் எளிமையை எடுத்துரைத்தபோது இலங்கேசனது உள்ளத்தில் வீரமும் மானமும் பொங்கி யெழுந்தது. மண்ணுலகப் பகைவரை யெல்லாம் வென்று விண்ணவர் தலைவனையும் வெம்பாசத்தாற் பிணித்த வீரமைந்தன், இப்போது மாற்றார் புயவலிகண்டு மனம் துளங்கினா னென்று மன்னவன் நினைத்தான். மன்னனது மனத்தில் நிகழ்ந்த கருத்தை அவனது முகத்தினா லறிந்த மைந்தன் வணங்கிய சென்னியனாய் வாய் புதைத்துக் கூறும் மொழிகள் வீரமொழிகளாய் விளங்கக் காணலாம்.

"ஆதலால் அஞ்சினேன் என்றருளலை ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாயின் ஆனையவர் சீற்றந் தீர்வர்
போதலும் புரிவர் செய்த புன்மையும் பொறுப்பர் உன்மேல்
காதலா லுரைத்தே னென்றான் உலகெலாம் கலக்கி வென்றான்"

என்று கம்பர் அருளிய கவியின் சுவை அறிந்து இன்புறத் தக்கதாகும். வீரமே உருவா யமைந்த இலங்கைநாதன் முன்னே நின்று, "ஐயனே, பகைவரது பெருமையை நான் பாரித் துரைத்தமையால் பகைப் புலத்திற் கஞ்சினேனென்று கருதிவிட லாகாது. சீதைபால் வைத்த ஆசை ஒன்றையும் விடுவாயாயின் மாற்றவர் சீற்றந் தீர்வர். நமது நகரினின்றும் நீங்குவர். நாம் செய்த தீமையும் பொறுப்பர். உன்பால் வைத்த ஆராத அன்பினால் இவ்வாறு கூறினே னன்றி அச்சத்தால் உரைத்தே னல்லேன் என்று வீர மைந்தன் கூறிய பொருளுரை மன்னனது செவியில் சுடுசரம்போற் பாய்ந்தது.

# "ஓரிரவு"

(S. சையத் அஹமது.)

இப்போது இளஞ் சிங்கங்கள் எவ்வாறு தமது பொறுப்பைச் சிரமேல் தாங்கி இப்பேருலகமெனும் ரதத்தை முன்னேற்றமெனும் பாட்டையில் ஊக்கமெனும் புரவியைப் பூட்டி ஓட்டிச் செல்ல முன் வருகின்றனரோ, அவ்வாறே யாவற்றினும் உயர்ந்து பரந்து விளங்கும் வானத்தை அரசுபுரிய சந்திரனெனும் இளைஞன் நக்ஷத்திரங்களெனும் மந்திரி பிரதானிகளோடு தோன்றினான். பகலெல்லாம் அரசுபுரிந்து களிப்படைந்த மேன்மை தங்கிய பகலரசன் சந்திரனிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்துவிட்டோ அன்றி சந்திரனுக்குப் பயந்து விட்டு விட்டோ எல்லாம் வல்ல இறைவனை யடைவான் வேண்டி தன்னை அழைப்பதைப் போல் வெகு தூரத்தில் மேற்கே விளங்கிய மலைத் தொடர்களுக்குச் சென்று தவம் புரியலானான். அனுபவசாலியான சூரிய ராஜனை வெருட்டி விட்டு இன்னும் வயது நிறையப் பெறாத சந்திரன் எங்ஙனம் திறம்பட செங்கோலோச்சுவான் எனும் எண்ணம் சிறிதுநேரம் என்னை திகைப்புறச் செய்தது. மூக்கில் விரல் வைத்த வண்ணம் வானத்தை நோக்கினேன். அடுத்த நிமிடமே "ஏ! மாநுடா எமது சந்திரராஜனுக்கா திறமையில்லை? எமது ராஜனால் இயலாத காரியமும் உண்டோ?" என. என்னை வினவி கண்களைச் சிமிட்டி எள்ளி நகையாடும் குறும்புத்தனமுள்ள நக்ஷத்திரங்களைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தேன்.

பச்சைப் பசேலெனக் கண் குளிர விளங்கும் புற்றரைமீது வீற்றிருக்கின்றேன். என்முன் அழகிய சிறு குளமொன்று திகழ்கிறது. அதன் அலைகள் குழந்தைகளைப்போல் குளத்தின் மடிமீது ஓடியாடி விளையாடிக் கொண்டும் இரவாகியும் வீடுநோக்கிச் செல்லும் எண்ணமின்றி உட்கார்ந்திருக்கும் என்னைக் காண ஆவலுடன் நவீனவஸ்து வொன்றைக் காணவரும் சிறார்களைப் போல் தள்ளிக்கொண்டு வந்து பார்த்தும் சென்று கொண்டிருக்கின்றன. நான் அவைகளைக் கண்டு மகிழ்வெய்தி புன்னகை பூத்தேன். இளங்காற்று மரங்களை ஆட்டி யசைத்து விளையாடிக்கொண் டிருந்தது. மரங்களின் கிளைகள் ஒன்றின் தோள்மீது மற்றொன்று கைபோட்ட வண்ணம் உல்லாசமாயிருந்தன. அசைந்தாடும் இலைகள் செவிக்கினிய கீதத்தை பாடிக்கொண்டிருந்தன.

ஓரிரண்டு தென்னை மரங்கள் இதர மரங்களினூடே உயர்ந்து வளர்ந்திருந்தன. உயர்ந்தோரெனத் தம்மை நினைத்துக் கொள்வோர் எங்ஙனம்

---

நாலுகாசு கையிலிருக்கும்போது தலைகால் தெரியாமல் குதிக்கக் கூடாதாம்! அக்காசு போய்விட்டால் தலையும் நோயெடுக்கும் காலும் முறிந்து போகும்.

தாழ்ந்தோரெனக் கருதியுள்ளவர்களோடு ஓரிடத்தில் சேர்ந்திருக்க நேரிடினும் அவர்களோடு வார்த்தையாடுதலும் கௌரவக் குறைவெனக் கருதுகின்றனரோ அங்ஙனமே அவைகளும் வாளாவிருப்பதைப் போல் தென்பட்டன.

எதிரேயுள்ள நீரின் மீது நிலவு நடனமாடிக்கொண்டிருந்தது. குளக்கரை மீதிருந்த மரங்கள் தமது அழகைத் தண்ணீரில் உற்றுநோக்கிக் கொண்டிருந்தன. சந்திரன் நீரில் பிரதி பிம்பித்துக்கொண்டிருந்தான். அலைகளால் நடுநடுங்குவதைப்போல் தென்பட்டான். கூர்ந்து நோக்கினேன். சந்திரன் பாரதத் தாயைப்போலவும் அடிமைத்தனமெனும் குளத்திலமிழ்ந்து கரையேற இயலாது சமூகவாதங்களெனும் அலைகளால் தடுக்கப் படுவதைப் போலவும் புலப்பட்டான். பெருமூச்செறிந்து சிறிதுநேரம் வரை அப்பரிதாபக் காட்சியைப் பார்த்தவண்ணமிருந்தேன். பிறகு வானத்தை நோக்கினேன். சந்திரனின் பிரகாசமான அழகிய குளிர்ந்த வடிவம் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அப்படியே பறந்துசென்று சந்திரனை இருகரங்களாலும் பற்றி ஒரு முத்தம் கொடுத்து வரலாமாவென நினைத்தேன். ஆ! அது முடியாது போயிற்று.

என் கண்கள் கண்டு களிப்புறும் இவ்வழகிய இயற்கைத் தோற்றத்தை விட்டு வீடுநோக்கிச் செல்ல மனமொப்பவில்லை. சந்திரனைக் கூவி யழைத்துக் கீழ்காணுமாறு வார்த்தையாடலானேன்.

"பிரம்மாண்டமான நீலநிறச் சிம்மாதனத்தில் வீற்றிருந்து என்னைக் கூர்ந்து நோக்கும் ஏ! சந்திரா! உனது தரிசனத்தால் நான் அள்ளிப்பருகும் ஆனந்தத்தேனின் இனிமையை என்னென்பேன்! நான் பூலோகத்தில் இருக்கிறேனோ அன்றிச் சுவர்க்கலோகத்தில் தான் இருக்கிறேனோ என்னும் சந்தேகம் உண்டாகிறது. உன்னிடம் வரவேண்டுமென்னும் ஆசை என் இருதயத்தில் துள்ளிக்குதிக்கிறது.

ஏ! சந்திரா! உன்னிடம் வரும்பாக்கியம் மானுடர்களாகிய நமக்குக் கிடைக்குமா? ஏன்! ஒருநாள் நாங்கள் உன்னிடம் வந்தே சேருவோம். வருவதற்காக வேண்டிய ஆராய்ச்சியைச் செய்து கொண்டுதானிருக்கிறோம். எங்களால் இயலாதெனக் கருதாதே. எங்களை அவ்வளவு கேவலமாக நினைத்துவிடாதே! உன்னையும் அடக்கி ஆளும் நாள் வெகு விரைவில் வந்துகொண்டிருக்கிறது. ஒருகாலத்தில் பஞ்சபூதங்களையும் வணங்கி வந்த நாங்கள் இதுபோது அவைகளை அடக்கி எம்மை வணங்கும்படி செய்துவிட்டதை நீ யறிவாயன்றோ? நாங்கள் இலகுவில் வர இயலாதபடி செய்வதற்காகவே எமக்கு ஆவசியகமாகிய பஞ்சபூதங்களையும் உன்னிடம் இல்லாது செய்து விட்டனையோ? இருக்கட்டும்! இவ்வளவு செய்தவர்கள் அதற்கு வேண்டியனவற்றையும் செய்து கொள்ள மாட்டோமா?

(குளிர்கால மானதால் இத்தருணம் குளிர்ந்தகாற்று வீசுகிறது.)

---

வட்டிக்குப் பணங் கொடுப்போரின் மனது எப்போதும் சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருக்குமாம்! வட்டியை மாத்திரம் கொடுப்பானோ, அல்லது அசல் மாத்திரம் கொடுப்பானோ, அப்படியுமின்றி இரண்டையும் கொ... படி மோசஞ்செய்து விடுவானோ என்னும் திகிலே முக்கிய காரணமாம்.



ஏ! சந்திரா! நீ என்னதான் மனதைப் பரவசப்படுத்தினாலும் குளிரையன்றோ உன்னோடு அழைத்துக்கொண்டு வந்து விடுகின்றாய்! மேன்மை தங்கிய பகலரசன் செங்கோலோச்சும்போது இருந்த உஷ்ணம் இல்லையே எனத் துணுக்காகக் கூறினேன்.

இதுவரை மௌனமாய் கேட்டுக்கொண்டிருந்த சந்திரன் தனக்கு விரோதமாய்ப் பேசுவதைக்கேட்டு சுருக்கெனத் தைத்ததோ என்னவோ சரேலென மேகத்தில் மறைந்து விட்டான்.

"ஏ! சந்திரா! கோபித்துக் கொள்ளாதே! உன்னோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது உன் அழகில் ஈடுபட்டுள்ளபோது இங்ஙனம் மறைந்து கொள்வது அழகாமோ?" என்றேன். அவன் வெளியே வரலாமா வேண்டாமாவென யோசிப்பதைப்போல் தென்பட்டான். ஏ! சந்திரா! வெளியே வர மாட்டாயா? இதோ நான் போகிறேன் எனக்கூறி எழுந்திருப்பதைப்போல் பாவனை செய்தேன். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. சொன்னதை "வாபஸ்" வாங்கிக் கொண்டால் வருவேன் எனக்கூறுவதுபோல் தெரிந்தது. "சரியப்பா! நான் சொன்னது தப்பிதந்தான்," என ஒப்புக்கொண்டேன். சந்திரனும் தான் வெற்றி பெற்றதை உன்னிப் புன்முறுவல் பூத்தவனாய் மேகத்தைவிட்டும் வெளி வந்தான்.

இனிமேலும் சந்திரனுக்கு விரோதமாய்ப் பேசினால் கோபித்துக்கொள்வானோ என்னவோவென நினைத்துக் கீழ்காணுமாறு வார்த்தை யாடலானேன்.

ஏ! சந்திரா குளிரைத் தாங்கமுடியாது போனது என் குறையேயாகும். மானுடராகிய நாங்கள் இயற்கை வாழ்வைவிட்டுச் செயற்கை வாழ்வி லீடுபட்டுச் சிறிதும் இயற்கையின் சம்பந்தம் இல்லாமல் செய்து கொண்டோம். வெய்யில், காற்று, குளிர் முதலியவைகளோடு தாராளமாய்ப்பழகி அவைகளைப் பொருட்படுத்தாத விதமாக உடம்பைப் பழக்கிக் கொள்ளாமலும் சீதோஷ்ண ஸ்திதியைக் கவனியாது வெய்யில் காலத்திலும் காற்று உடம்பில் புகாவண்ணம் இறுக்கமான ஆடையை அணிந்துகொண்டும், அற்பக் குளிரிலும் பெரிய கம்பளிகளணிந்துகொண்டும், வேண்டிய வெய்யில் உடம்பில் படாமல் சிறு குளிரையும் தாங்கமுடியாமல் உடல் வளர்ச்சி குறைந்து, தேகம் வெளுத்து, அவயவங்கள் குச்சிபோலாகிச் சக்தியிழந்து, வாணாளை வீணாளாக்கிக்கொண்டிருக்கிறோம். அது எமது குற்றமே யாம்.

இதோபார்! பிரவேசக் கட்டணமின்றி இயற்கை யன்னை அளிக்கும் ஆனந்தக் காட்சியைக்காண யார் அதிகமாக வருகிறார்கள்? படக்காட்சி சாலைகளில் இதுபோது எத்தனைபேர் காசுகொடுத்தும் சுவாசிக்க நல்ல காற்று கிடைக்காமல் "கம்" மென அடைபட்டுக் கிடப்பர்? இயற்கைத் தோற்றத்தைக் கண்டு மகிழ்வோருக்கு எவ்வளவு தூய எண்ணங்கள் உண்டாகின்றன? இருவர் கட்டியணைந்து முத்தமிட்டு ஆனந்த சாகரத்திலாழ்வதையும், ஒரு பெண்ணை அபகரித்துச் செல்லுவதையும், பல மாடர்கள் ஒன்றுகூடித் துராலோசனை புரிவதையும், ஒருவனைத் துன்பத்துக் குள்ளாக்குவதையும், பெண்கள் அருவருக்குத்தக்க முறையில் ஆடையணிந்து நடனமாடுவதையுமே அநேகமாக நிறைந்த மேனாட்டுக் காக்ஷிகளைக் காணுவோரின் உள்ளத்தில் எவ்வளவு

பரிசுத்த எண்ணங்கள் உதிக்குமென்பதைக் கூறவும் வேண்டுமோ? என ஒருவாறு கூறி முடித்தேன்.

வெகுநேரமாகிவிட்டதாலும் இடும்பைகூர் என்வயிற்றை திருப்திப்படுத்த வேண்டியிருந்ததாலும் அரை மனதோடு புற்றரையைவிட்டு வீடுநோக்கிச் செல்லும் பாட்டைக்கேகி நடக்கலானேன். பாட்டையின் இருபுறமும் உயர்ந்து வளர்ந்த மரங்கள் அழகிய காட்சியைக் கொடுத்தன. நான் வருவதைக்கண்டு கௌரவிப்பதற்காக போலீஸ்படை அணிவகுத்து நிற்பதைப் போல் அவை விளங்கின. நானும் கெம்பீர நடைநடந்து வீடுவந்து சேர்ந்தேன்.

## நேயர்களுக்கு அறிக்கை.

1931 ஆம் வருஷம் ஜனவரி முதல் தேதியிலிருந்து, வி. பி. யில் அனுப்பப்படும் கடிதங்கள், பார்சல்கள், புத்தக பத்திரிகைள் முதலியவைகள், அவை அனுப்பப்பட்ட அல்லது அவற்றைத் தருவித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டபின் மூன்று நாட்களுக்கு மேல் தபாலாபீஸ் இருப்பில் வைத்திருக்க முடியாதென்றும், அப்படி வைத்திருக்க விரும்புவோர் எத்தனை நாள் அவ்வாறு வைத்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதற்கு நாள் ஒன்றுக்கு இரண்டு அணு வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி மனுச்செய்து கொள்ளவேண்டுமென்றும், அப்போதும் 10 நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாதென்றும், மனுச் செய்துகொள்ளாவிட்டால் சாமான்களை நான்காவது தினமே அனுப்பியவருக்கே திருப்பியனுப்பிவிடப்படுமென்றும் தபால் இலாகா டைரெக்டர் ஜனரல் அறிவித்துள்ளார்.

ஆதலின் நமது மாத, வாரப் பத்திரிகைகளின் சந்தாதாரர்களும், நமது கம்பெனியிலிருந்து பலவித சாமான்களை வி. பி. மூலம் வாங்கும் இசர நேயர்களும் இவ்வுத்திரவை ஞாபகத்திற்கொண்டு தங்களுக்கு இண்ட்டிமேஷன் அதாவது வி. பி. வந்திருக்கிறதென்னும் தகவல் கிடைத்த மூன்று நாட்களுக்குள் வி. பி. யைப் பெற்றுக்கொண்டுவிடவேண்டுமென ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

மானேஜர்.

---

வந்திருக்கிறதோ தீராத வியாதி! அதை மருந்து சாப்பிட்டும், பத்தியமிருந்து மன்றோ தீர்த்துக் கொள்ளவேண்டும்! அப்படிக்கின்றி எப்போதும் போலவே பலகார பக்ஷணங்களுடன் போஜனம் செய்யவேண்டுமென்றால்?




### பக்தி விளக்கம்

(சிவானந்தசாகர யோகீஸ்வரர்.)

வேத வைதிக நூல்களாலே புகழப்பட்ட பக்தி யென்பது வஞ்சகமற்ற மெய்யான அன்பேயாம். அன்பென்பது ஒரு பொருட் கண் விருப்பம் நிகழ்ந்துழி உண்டாகும் ஒருவகை உள்ளக் கிளர்ச்சியாம். அன்பெல்லாம் பக்தியெனப் படுவதில்லை. எப்பொருளினிடத்துப் பயம்மரியாதைகளுடன் கூடி நிகழுமோ அவ்வன்பே பக்தியென வியந்து கூறப்படுவது.

பயபக்தி விசுவாசமென வடநூலாருங் கூறுவர். சிரத்தை யென்பதும் அதற்கோர் அங்கமாம். அது மாதா, பிதா, குரு, தெய்வம் முதலியவர்களிடம் நிகழ்வதாம். மற்றையோரிடத்தும் இதர ஜீவர்களிடத்தும் இரக்கம் தயை முதலிய காரணமாக வுண்டாகு மன்பு அத்துணைச் சிறப்பின்று. பொருளாசையினாலும் அச்சத்தாலும் காமத்தாலு முண்டாகு மன்பு அதமமாம்.

இங்கே யாம் கூறவந்தது தெய்வபக்தியே யாகும். பூத பௌதிக முதலிய சாஸ்திரங்களிலும் இலக்கிய இலக்கணங்களிலும் மற்றுமுள்ள நூல்களிலும் வல்லவனாயினும் இந்திர ஜால மந்திர ஜால முதலிய மயக்க வித்தைகளிலே தேர்ந்தவனாயினும், உலகமெல்லாந் தன் குடை நிழலிலொதுங்க அரசு புரியினும் புஜபல பராக்கிரமங்களிலே சிறந்த வீரலக்ஷ்மியை ஏவல் கொள்ளினும் குபேரனு மழுக்காறெய்தச் செல்வச் சிறப்பெய்தி ஜெகம் புகழப் பெறினும் அவனைப் பொருளென மதியார் தெய்வபக்தி என்னும் மெய்யன்பு கைவரப் பெற்ற உத்தம சற்குண ஞானசீலர்கள். அத்தகைய மெய்யன் பெய்த முயற்சி செய்வதே மானிட யாக்கையாலாகும் பயனென்றுணர்க. முதலில் நாம் பயனை விரும்பக்கூடாது.

பயனுண்டென்றும் இல்லையென்றும் நம் மறிவாற் காண்பது கூடாதாகையினால் எல்லாம்வல்ல கடவுளை முன்னிட்டு நாம் முயற்சி செய்வோமாயின் அது பயனளியாமற் போகாதென்பது துணிபு. ஆதலால் எவ்வகையினும் முயல்க. ஒருவன் தன் வல்லமை தக்கதாயினும் அல்லதாயினும் அதனைக் கடைப்பிடித்து முயற்சி செய்து வருவதும் அவன் தன் முயற்சிக்குத் தக்கவாறு பயன் பெறுதலும் காண்கிறோமாதலால் அதுபற்றியேனுந்

---

வாய்ச் சுளுவாக மூர்மார்க்கட்டிற்குச் சென்றால் எந்தச் சாமானையும் பாதி விலைக்கு வாங்கி விடலாம் என்று கூறுகின்றனர். ஆனால் அங்கு சென்றாலோ கடைக்காரர்கள் கூறும் விலைக்குப் புதிய சாமானையே வாங்கிவிடலாமென்று தான்றும்.

துணிக. பெண்காமமுற்ற காமுகன் பெண்ணை விரும்பியும் தனம் காமுற்றோன் தனத்தையும் கல்வி விரும்பினோன் கல்வியை விரும்பியும் பலவாறு முயற்சி செய்கின்றனர். முடிவில் எவ்வகையிலேனும் கைகூடி வருதல் நிச்சய மாதலும் கண்டுகொள்க.

இத்தகைய பெரும் செல்வத்தைப்பெற விரும்பு மொருவன், கைக்கொள்ள வேண்டிய விதிகள் பல. அவைகளுட் சில வருமாறு—

ஊக்கமுடைமை, பொய்யாமை, கள்ளாமை, வெகுளாமை, அழுக்காறின்மை, வஞ்சகமின்மை, மடியின்மை, நெடுந்துயிலின்மை, பேருண்டி வெறுத்தல், ஜீவகாருண்யம், அடியார் வணக்கம், பெரியார் நேசம், தந்தை தாய்ப்பேணல், குருவடி பணிதல், நல்லோர் சகவாசம், ஆஸ்திக புத்தி, சாந்தம் முதலிய பலவாம்.

நாஸ்திகர் உறவு, தீயோர்நட்பு காமப்பெருக்கம். கண்டதை விரும்பல், வெறுங்கதை கேட்டல், வீண்வம்பு வளர்த்தல், பேராசை, அடக்க மின்மை முதலியகுணங்க ளொழித்துவிடத் தக்கனவாம்.

இவ்விதம் பல விதி விலக்குகளை உணர்ந்து கொள்ளத்தகுவனவற்றைக் கொண்டு, விலக்கத்தகுவனவற்றை விலக்கி மேலோர் சென்ற வழி யொழுகி இடையறாத அன்பி னிலைபெற்றுச் சதாகாலமும் சிந்தித்திருக்கும் மெய்யன்பரே, மனவாக்குகளுக் கெட்டாத பரம்பொருளை யடைந்து பேரின்ப சாகரத்தில் மூழ்கிக்களிப்பா ரென்க.

இவ்வாறு கஷ்டப்பட்டுக் கடைமுடிவிற் பெறும்பயன் யாதோவெனில் அது முற்கூறப்பட்ட பேரின்பமுத்தி பெறுதலேயாம். முத்தி யென்பதற்கு விடுபடுத லென்பது பொருள். இது வடமொழி. தென்மொழியிலும் வீடு என வழங்கப்படுகின்றது. எதினின்றும் விடுபடுதலெனின். ஜனன மரண துக்கங்களுக்காதாரமான ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுதலேயாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என நூல்களாலே புகழ்ந்தோதப்பட்ட புருஷார்த்தம் நான்கனுள் ஒன்றாய், 'இல்லற மல்லது நல்லற மன்று' எனவும், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' எனவும் பல்லோராலும் புகழ்ந்து கூறப்பட்டதும் ஏனைய வருத்தங்களை விளக்க வெழுந்த நூல்களைப்போலவே இன்பத்தை விளக்கும் நூல்களுமுளவாகவும் அதனைப் பந்தமென்று கூறியதும் அதினின்று விடுபடுதலே முத்தியென்றும் கூறியதேனோவெனில் நன்று கூறினாய். அறம், பொருள், இன்பம், வீடு என வகுத்துக் கூறிய முறைபற்றிச் சொல்லின் அது தெள்ளிதிற் புலப்படும்.

அறங் காரணமாகப் பெறத் தகுவது பொருள். பொருள் காரணமாக நுகாத் தகுவது இன்பம். அவ்வின்பத்தை விடுதலே வீடு, முத்தி, மோக்ஷம் எனப் படுவது. மூன்று சொற்களுக்கும் விடப்படுவ தென்பதே பொருளாதல் காண்க.

---

அவர்கள் வீட்டு கலியாணத்திற்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரவே மென்று தம் வீட்டில் வயிற்றைக் காலிசெய்து வைத்துக் கொள்கின்ற அங்கு சென்றாலோ இரண்டொரு கவளம் அன்னத்தைப் புசித்ததும் வ பெருத்துப் போகிறது.

# ஆனந்த சந்திரோதயம்

தமிழாசிரியர் S. V. வரதராஜையங்கார்

"ஈச்வர குடும்பத்திற்கு என்னை இருந்து கரையச் சொல்லுகிறயோ" ஈச்வர பாதந்திரர்களை பகவான் என்றும் எது பற்றியும் கைவிடுவதில்லை. கைவிடுவதுபோல் கடைசிவரையில் அடியார்களைச் சோதனைகளுக்கு உள்ளாக்குவதும், ஆற்றில் ஆழத்தில் விழுந்து நீச்சறியாமல் நினைவு தடுமாறி மூன்று வாய் நீருங் குடித்து முழுதுந் தருவாய் வரையில் வாளாவிருந்து, பிராணன் இனிப் போய்விடு மென்று நேரும் அத் தருணத்தில் உறுதியாகக் கை கொடுப்பதும் அவனுடைய திருவிளையாடல். ஸ்ரீரங்கநாத புத்திரரான பட்டர் சீலாத்மராக வளர்ந்து தமது இளவலான ஸ்ரீராமப் பிள்ளையோடு வேத வேதாங்கங்களை யெல்லாம் அப்பியசித்துச் சகல வித்யா பாரங்கதராய் விவாகத்திற்குரிய பருவத்தை யடைந்தார். குடும்ப விஷயங்களில் பர்த்தாவைக் காட்டிலும் பத்னிக்கு மிகுந்த கவலை யுண்டு. கணவன் எவ்வளவு வியாபகனு யிருந்தாலும், எத்துணை சத்வகுணனு யிருந்தாலும், யுக்தமான காரியங்களை அவ்வப்பொழுது கால தேச வர்த்தமானங்களுக் கொப்ப எடுத்துரைத்து முடிக்கும்படி தூண்டுந் தன்மை குடும்ப பாரத்தின் முக்காற் பங்கிற்கு உரியவளான நல் மனைவிக்கே இருக்கக் காண்கின்றோம். பெண்கள் விவாகத்திற்குரிய பருவத்தை யடைந்திருக்கும்போது, அவர்களுக்கு மணவினை செய்யக் கணவனை மனைவிமார்களே துரிதப்படுத்துகின்றனர். இதுமட்டினு மின்றி ஒவ்வொரு கர்மானுஷ்டானத்திலும் ஆடவரைத் தூண்டுவது பெண்பாலரே. உதாரணமாக தீபாவளிப் பண்டிகையைக் கவனிப்போம். நள்ளிரவிலேயே எழுந்து நீராடி மற்றைய காரியங்களையும் முடித்து, உண்டி தயாரித்து வைத்துவிட்டு, ஆடவர் நீராடுவதற்கு வேண்டியவற்றைத் தயாரித்து வைத்துப் பிறகு தூங்கிக் கொண்டிருக்கும் அவர்களை எழுப்பி ஸ்நானம் செய்வித்து, உணவளித்துப் பண்டிகை கொண்டாடுபவர் பெண்பாலரே யன்றோ? எங்கு பார்த்தாலும் நிர்வாண சங்கங்களை ஸ்தாபித்துக் கொண்டு மனுஷ கதியிலிருந்து கீழான மிருக கதியின் செயல்களையும் நிலையையும் மனுஷ கதியினும் சிறந்தன வென்னும் பிரமை மேலீட்டால் தழுவித் தலைகால் தெரியாது திரியும் இந்நாளில், அந்த நாடுகளுக்கிடையே உயிரினும் சிறந்த மதானுஷ்டானங்கள் நம் நாட்டில் சீர்குலையாமல் நிற்கும் பாக்கியத்தைப் பெற்றிருப்பது எவர் செய்த தவப் பயனோ வென்று எண்ணவேண்டாம். அவை நின்று நிலவுவது நம் தேயத்து மாதராலேயே. பட்டருக்கும் சீராமப் பிள்ளைக்கும் விவாகம் செய்துவிட வேண்டுமென்ற எண்ணம் அவரது அன்னை ஆண்டாளின் உள்ளத்தில் உதயமாயிற்று. ஆழ்வானைப் பார்த்து "இவர்கட்கு விவாகம் செய்விக்க வேண்டாவோ?" என்று விண்ணப்பித்தாள். 'ஆம்; சரி' என்று ஆசார்ய பாதந்திரரான ஆழ்வானும் கேட்டு, உடையவரிடம் சென்று விண்ணப்பஞ் செய்தார். உடையவரும் 'தடை யென்ன?' லென்றுகூறி, தமது ஆசார்யரான பெரியநம்பியின் உறவி

னரைத் தேர்ந்து உரைத்து அனுப்ப, ஆழ்வான் புறப்பட்டுச் சென்று பெண் கேட்டார். அவர்கள் முதலில் கொடுக்க ஒப்பினர்; பின்னர் நூதன சம்பந்தமென்று இசையாதிருந்தார்கள். இங்ஙனம் சில நாட்கள் கழிந்தன. ஆழ்வானும் அவ் விஷயத்தில் ஆழ்தலின்றி இருக்கக்கண்டு, ஆண்டாள் மறுபடியும் அவரைத் தூண்டினாள். அவர் எம்பெருமானையே முற்றும் நம்பியவர். நம்பியவரைக் கைவிடுவது என்றும் எங்கும் பகவத் லக்ஷணத்திலில்லை. ஒருசமயம் ஆழ்வானும் ஆண்டாளும் உணவின்றி யிருக்கும்போது வாத்ஸல்ய வசனமாக ஆண்டாள் கூறிய வசனங்களைக் கேட்டு அரங்கமா நகருளான் அவர்கள் அருந்தும்படி அரவணை அனுப்பி வைத்தார். அவ்வனுக்கிரகத்தால் ஆண்டாள் திருவயிற்றி லவதரித்த பட்டரை, தமது தேவியாரான ஸ்ரீரங்க நாச்சியாரைக் கொண்டு, தம் சந்நிதித் திருமணத் தூணருகே தொட்டி விடுவித்து சீராட்டி வளர்த்து வந்தார். இப்படி ஆழ்வானுடைய குடும்பம் ஈச்வர குடும்பமாகி விட்டது. அப்படி யிருக்க பட்டர்பிரானுக்குத் திருமணம் செய்விப்பது யாருடைய கடன்? இவ்விஷயத்தில்தான் ஆழ்வான் உண்மையாக ஆழ்ந்திருந்தார். அதனால் ஆண்டாள் தம்மை மறுமுறையும் தமது புத்திரரின் விவாக விஷயமாகத் தூண்டிய பொழுது அவர் "ஈச்வர குடும்பத்துக்கு என்னை இருந்து கரையச் சொல்லுகிறாயோ?" என்று கேட்டார்.

"மாதவ சூரி"—அன்றிரவு ஆழ்வான் வழக்கம்போல் திருவரங்கப் பெருமானைத் திருவடி தொழுது திரும்பும்பொழுது "புதல்வர்களுக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்கிறார்களே!" என்று விண்ணப்பிக்க, எம்பெருமான் "அதற்கு நீரோ கடவீர்! நாமே தகுதியாகச் செய்விக்கின்றோம்" என்றருளி, பெரிய நம்பியின் சம்பந்திகளுக்குப் பெண் கொடுக்குமாறு சொப்பனங் காண்பித் தருளினார், பெருமாள் கட்டளையை சிரமீ தேற்று அவர்களும் தாமே வந்து பெண் கொடுப்பதாகக் கூறித் தங்கள் குமாரிகளை பட்டருக்கும் சீராம பிள்ளைக்கும் கன்னிகாதானம் செய்து வெகு சிறப்பாக விவாகத்தை நடத்தினார்கள். இங்ஙன மிருந்து வருநாளில் பட்டரின் வேதாந்த உபந்யாசத்தைக் கேட்ட உடையவர் உளமிக வுவந்து அவருக்கு 'வேதாந்தாசாரியர்' என்ற சிறப்புப் பெயர் சூட்டினார். இவ்வாறு ஸ்ரீபாஷ்யக்காரரும் பட்டரும் வடமொழி தென்மொழி மறைமுடிவுகளை உலகுய்ய வியாக்யானஞ் செய்து வருகிற காலத்தில், அவர்கள் தரிசன சேவையில் திருவுள முவந்த ஸ்ரீரங்கநாதன் "ஆசார்யாதிபத்தியத்தில் உடையவருக்குப் பட்டாபிஷேகமும், பட்டருக்கு யுவ ராஜ்ய பட்டாபிஷேகமும் செய்யுங்கள்" என்று தம்மடியார்களுக்கு அர்ச்சகமுகமாக ஆஜ்ஞாபித்து, திருப்பரியட்டம் திருமாலை முதலிய சகல வரிசைகளையும் அனுப்பி யருளினார். அவ்வாறே அடியார்களனைவருங்கூடி வைபவமாக ஸ்ரீபாஷ்யகாரரையும் பட்டரையும் பிரம்ம ரதத்தில் ஏற்றித் திருவரங்க நகரைவலம் வந்து, அழகிய சிங்காதனங்களில் எழுந்தருளச் செய்து,

"சங்கினம் தவழ்கடல் எழில் தந்தன
சிங்கலில் அருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலிய கலந்த நீரினால்"—(கம்ப ரா.பால.கடிமண-48.)

மந்திர பூர்வமாக மங்கல மஞ்சனம் செய்து, முன்பு திருவயோத்தியி லிருந்தவர்கள் ஸ்ரீராமபிரானுக்கும், பரதாழ்வானுக்கும் பட்டாபிஷேகம் செய்தது

அறந் தழைத்தால் ஆட்சி தழைக்கும்.



போல உடையவருக்கு ஆசார்யாதிபத்ய பட்டமும், பட்டருக்கு இளவரசுப் பட்டமும் செய்து ஆனந்தித்தார்கள். கொஞ்ச காலமான பின், சகல வைபவங்களையும் கண்டானந்தித் திருந்த பட்டருடைய பிதாவான ஆழ்வான் பரமபதித்தார்.

இங்கு இவ்வாறாக, மேல்நாட்டில் திருநாராயணபுரம் என்ற ஒரு திவ்ய தேசமுண்டு. அங்கு அக்காலத்தில் மாதவ சூரி என்பவர் மிகப் பிரசித்தராயிருந்தார். அவர் இளமை முதல் பல ஆசார்யர்களை அடைந்து அவர்கள் பால் சகல சாஸ்திரங்களிலும் பயின்று வித்வானாகி, பல ராஜ சபைகளையும் அடைந்து தர்சனவாதம் (தத்துவவாதம்)செய்து, அநேக வித்வான்களை தமது தார்க்கீக வல்லமையால் வென்று சன்மானங்களும் வரிசைகளும் பெற்று, வேதாந்தத்தில் தமக்கிருந்த மிகுந்த பாண்டியத்தால் வேதாந்தி என்னும் ஓர் சிறப்புப் பெயரும் படைத்து கங்கோரை என்னு மூரில் நிரந்தர வாஸம் செய்து வந்தார். அவர் தாம் ஆறு சாஸ்திரங்களையும் கரைகண்டதற்கு அறிகுறியாக அந்தந்த சாஸ்திரங்களின் பெயர் தீட்டப்பட்ட ஆறு ஆஸனங்களை ஒன்றின்மே லொன்றாக இடுவித்து, அதன்மீது வீற்றிருந்து, சிஷ்யர்கள் புடைசூழ, வருகின்ற வித்வான்களை யெல்லாம் வாதப் போரில் வென்று பிரசித்தராய் விளங்கி யிருந்தார்.

ஆழ்வானுக்கு கிரியைகள் யாவும் சம்பிரதாயப்படி நடைபெற்றன. அப்பால், உடையவர் பட்டரை ஒருநாள் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு சென்று ஸ்ரீரங்கநாதனை சேவிக்கச் செய்து, அவர் கையைப் பிடித்து எம்பெருமான் திருவடிகளில் ஒப்படைத்தார். பெருமாளும் விசேஷ கடாக்ஷம் செய்து, "ஆழ்வானை இழந்தோமே என்று வருந்த வேண்டாம்; நம்மையே இனி ஆழ்வானாக நினைத்திரு" என்று அர்ச்சகமுகமாக ஆவேசித்துக்கூறி அவருக்கு வேதாசார்ய பட்டர் என்று மற்றொரு திருநாமமும் அருளினார். அதன்மேல், உடையவர் எம்பெருமானுடைய வீர சரித்திரமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தைக் கேட்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, பட்டரையும் சீராமப் பிள்ளையையும் அழைத்துத் தம் முன்னிலையில் ஆதிகாவ்யத்தைப் படிக்கும்படி நியமிக்க, முன்பு "மிதிலைச் செல்வி திருவயிறு வாய்த்த மக்கள், செம்பவளத் திரள் வாயால் தன் சரிதை கேட்ட 'இராமபிரானைக் களிப்பித்ததுபோல, பட்டரும் ஸ்ரீராமப் பிள்ளையும் குயிலினு மினிய தமது குரலால் வாசிக்க உடையவர் கேட்டு இன்புற்றார். இராமநுஜர் விர்த்தாப்பிய தசையையடைந்து திருமேனி தளர்ச்சி யுற்றவராய்ப் பரம பதத்தை யடையக் கருதி, அடியார்களனைவரையும் ஒன்றுகூட்டி பட்டரைக் காட்டியருளி 'இவரை நம்மைப் போலவே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று நியமித்தார். அப்பால் பட்டரை யழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கநாதன் சந்நிதிக் கெழுந்தருளி அவருக்குத் தீர்த்த பிரசாதம் முதலியன வழங்கச் செய்து "மேல் நாட்டில் வேதாந்தியென்று ஓர் பெரிய வித்வான் இருப்பதாகத் தெரிகிறோம். நீ அங்கே சென்று அவரைத் திருத்தி ஸ்ரீவைஷ்ணவ சமய பிரவர்த்தகராக்க வேண்டும்" என்று கூறிப் பரம பதித்தார், மாதவ சூரி யென்னும் அவ் வேதாந்தியை பட்டர் தம் சமய சேவையில் திருப்பிய வரலாற்றை அடுத்த இதழிற் கூறுவோம்.

குறிப்பு:—இராமாநுஜாசார்யருக்கு, ஸ்ரீபாஷ்யகாரர், எம்பெருமானார், உடையவர், முதலான வேறு திருநாமங்களுண்டென்ப தறிக.

அறச்சிறப்பாளர் அவ்வைக்கழகாவர்.

# நகைப் பித்து.

(ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை.)

நகைப் பித்து! அதை நினைக்கும்போதே நகைப்புத்தான் உண்டாகின்றது! இப் பாரத நாட்டில்—சிறப்பாக இத் தென்தமிழ்த் திருநாட்டில்—இந்நாளைய பெண்மணிகளிடையே காணப்படும் நகைப்பித்தை என்னென்பது! உச்சிமுதல் உள்ளங்கால் வரை பொன் காய்த்த மரங்கள் போன்று தங்களைப் பலவகை ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொள்வது என்பது, இக்காலத்தில் மட்டுமன்று—முற்காலத்திலும் பெண்மணிகளின் பெருவிருப்பமாகவே இருந்து வந்திருக்கின்றது.

ஆனால், இக்காலத்தில் காணப்படும் நகைப்பித்தைப்போல், அளவுக்கு மீறியதாக அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அக்கால நிலை வேறு; இக்கால நிலை வேறு. 'போர் என்ன வீங்கும் பொருப்பன்ன பொலன் கொள் திண்டோள்' வாய்ந்த அஞ்சா நெஞ்சர்களாய வீரசிகாமணிகளும் கொடையில் தலைசிறந்த வள்ளல்களும் நிரம்பியிருந்த முற்காலத் தமிழ்நாட்டிலே—வாணிபமும் வேளாண்மையும் செழித்தோங்கிச் சிறந்திருந்தமையால் வறுமைப்பேயின் கொடுமையை மக்கள் உணராது எல்லா வகைப்பட்ட சிறப்புக்களோடும் இன்புற்று வாழ்ந்திருந்த அக்காலத் தமிழ் நாட்டிலே—பொன்னும் பொருளும் மக்கள்பால் மலிந்துகிடந்த பண்டைத் தமிழ்நாட்டிலே—பெண்மணிகள் மட்டுமன்று, ஆடவருங்கூட ஆபரணங்களால் தம்மை அலங்கரித்துக் கொண்டிருந்தது பொருந்துவதே. அந்நாளில் தமிழன்னை புன்னகை பூத்த இன்முகமும், மணிமுடி மன்னிய சென்னியும், அன்பின் பெருமையை உணர்த்தும் அழகிய செங்கோலும், அச்சம் எனும் பேய் அணுக அஞ்சுமாறு அணிந்த வீரக்கழலும் உடையவளாய்ச் சுதந்தர தேவியாய் அரியாசனத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தாள். அந்நிலையில், அவளது புதல்விகளும் தம்மைப் பல்வகைக் கலன்களாலும் அழகுபடுத்திக் கொள்வது பொருத்த முடைத்தே. ஆனால், இந்நாளிலோ அன்னையின் நிலை இருந்தவாறு என்னே! என்னே!!

இந்நாளில், அன்னையின் சென்னியில் மணிமுடி இல்லை; அவளது கூந்தல் அழுக்கடைந்து சிக்குண்டு அவிழ்ந்து தொங்குகின்றது. அவளது முகத்தில் அகக்களிப்பைக் குறிக்கும் குறு நகையைக் காணோம்; அஃது அளவிடற்கரிய துயரால் வாடி வதங்கிச் சோர்ந்து காணப்படுகின்றது. அவளது விழிகள் மகிழ்ச்சியால் ஒளிபொருந்தியனவாகக் காணப்படவில்லை; தனது அடிமை நிலையை நினைந்தும், தனது தற்காலப் புதல்வர்களது பேதமையையும் பேடித்தன்மையையும் எண்ணி எண்ணியும் மனம் உடைந்த அவளது விழிகளில் நீர் வழிந்து கொண்டிருக்கின்றது. அவள் அமர்ந்திருந்த அரியாசனத்தையும் தாங்கியிருந்த செங்கோலையும் காணோம். வீரக்கழல்கள் விளங்கிய அவளது

வெறுத்துப் பேசினாலும் பொறுத்துப் பேசு.



அடிகளிலே, இன்று அடிமைத்தளைகளே அமைந்திருக்கின்றன. உள்நாட்டுக் கைத்தொழிலும் வாணிபமும் பெரிதும் சுருங்கி, வெளிநாட்டுப் பொருள்களின் வியாபாரமே மேலோங்கி, வேளாண்மையால் உண்டாகும் விளைவும் பலவகைக் காரணங்களாலும் மிகவும் சுருங்கி, பொது மக்களிடை வறுமைப் பேய் பெரிதும் தலைவிரித்தாடும் தற்காலத் தமிழ்நாட்டிலே—பொன்னும் பொருளும் மலித்திருந்தது போய் உண்ணும் உணவுக்கும் உடுக்கும் உடைக்குமே பெரிதும் உழன்று நிற்கவேண்டி வந்த இக்காலத் தமிழ்நாட்டிலே—நடுத்தர வகுப்பினரும் ஏழைகளும் பார்த்து அவாவும் அழுக்காறும் கொண்டு, அதன் பயனாகத் தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் பற்பல அல்லல்கட்கு உட்படுத்திக்கொள்ளுமாறு பணச்செருக்கால் பல்வகைக் கலன்களாலும் செல்வச் சீமாட்டிகள் தம்மை அலங்கரித்துக் கொண்டு திரிவது பொருந்துவது ஆகாது. தமிழன்னையின் தற்கால நிலையைச் சிறிதளவும் சிந்தியாது, தமிழ்நாட்டுப் பெண்மணிகள் பெரிதும் நகைப்பித்துடையவர்களாயிருத்தல் வருந்தத் தக்கதே.

வறுமையின் துயரம் சிறிதளவும் உணராது, வீட்டு வேலைகளையும் வேலைக்காரர்களிடம் ஒப்புவித்துவிட்டு, நினைத்தபோதெல்லாம் நினைத்த இடங்கட்குச் செல்லக்கூடிய செல்வச் சீமாட்டிகள், விலையுயர்ந்த நகைகள் பலவற்றையும் அணிந்துகொண்டு கோயில்கள் முதலிய பொது இடங்களில் வருவதைக் காணும் நடுத்தர வகுப்பினராய நாரீமணிகள், அந்நகைகளின் மீது நாட்டம் செலுத்தியவர்களாய், அவற்றின்பேல் பெருமோகம் கொண்டு அதுவே நினைவாய் அந்நினைவே பித்தாகித் தத்தம் கணவன்மாரையும் தந்தைமாரையும் அவைபோன்ற நகைகளைத் தமக்கு வாங்கித் தந்திடுமாறு அடிக்கடி வற்புறுத்தத் தொடங்கி விடுவதும் உண்டு. குடும்பத்தின் நிலை எத்தகைத்தாயினும் அதுபற்றி அவர்கட்குக் கவலை இல்லை. கணவனோ தந்தையோ 'அதற்கு இப்பொழுது சௌகரியமில்லை' என்று மறுத்துவிட்டாலோ, உடனே அவர்களை அப்பேதைப் பெண்டிர் வெறுத்துப் பழிக்கவும் முகத்தைச் சிடுசிடு என்று வைத்துக்கொண்டு எதற்கெடுத்தாலும் வெடுவெடு என்று எரிந்து விழவும் தொடங்கிவிடுவர். தந்தை மறுப்பின் குறைப்பட்டுக் கொள்வதோடு நின்றுவிடும் அப்பெண்டிர், கணவன் மறுப்பின் உணவு இடுவது முதல் உறங்கச் செல்வது வரை எதற்கும் அவன் மனம் கசந்து நிற்குமாறு செய்துவிடுகின்றனர். அந்தோ! நகைப்பித்தால் நேரும் துன்பம் என்னே!

ஒவ்வொரு நாளும் காரியாலயம் போந்து, மேஜையின் எதிரில் பேனாவும் கையுமாக எழுதிக்கொண்டிருந்து மேலதிகாரிகள் எங்கு கடிந்து கொள்வார்களோ என்னும் அச்சத்துடன் வேலை செய்துகொண்டிருந்துவிட்டு மாலையில் வீடு திரும்பும் உத்தியோகஸ்தர்கட்கு, மனையிலேனும் மன ஆறுதல் கிடைப்பது அவரவர் மனைவிமாரைப் பொறுத்ததாக உளது. அம் மனைவிமார் நகைப்பித்து மிகுந்தவர்களாக இருந்து, நாளுக்குநாள் தினுசுதினுசாக உண்டாகும் 'புதுமோஸ்தர்' நகைகளின்மீது மோகங்கொண்டு நிற்பவர்களாக இருந்துவிட்டால், அவர்களது கணவன்மார் படுந் துயரைக் கூறவுங் கூடுமோ? எவ்வளவு நகைகள் இருப்பினும், 'இருப்பதில் திருப்திப்பட்டு நிற்பது' என்பது, நகைப்பித்து மிகுந்தோர்க்கு இல்லவேயில்லை; இதை அழித்து அதைச்

நோய் மிஞ்சினாலும் வாய் மிஞ்சலாகாது.

செய்யலாமா, அதை வாங்க இதை விற்றுவிடலாமா என்று சஞ்சலப்பட்டுக்கொண்டே நிற்பது நகைப் பித்தர்களின் இயல்பாகிவிட்டது. அச்சஞ்சலத்தினால் தட்டார்களும் தரகர்களும் அவர்களை மயக்கி, அவர்களறியாமலே பொருளைக் கிடைத்தவரையிலும் சுரண்டிக்கொண்டு போய்விடவும் நேர்ந்துவிடுவதுண்டு. அத்தகைய நகைப்பித்தினால், கணவர்கட்குத் தெரியாமலே இரகசியமாக வீட்டுப் பொருள்களை வந்தவிலைக்கு விற்றுவிடும் கூத்துகளும், வட்டிக்குப் பணம்விட்டு அந்தரங்கமாக லேவாதேவி செய்யும் கூத்துகளும், தினசரி குடும்பச் செலவதனில் சிக்கனம் செய்து பணம் சேர்த்திடும் கூத்துகளும், பிறவும் விரித்துரைக்கவும் கூடுமோ? இத்தகைய செயல்களினால், தத்தம் கணவன்மாரது ஐயுறவுக்கும் வெறுப்புக்கும் உரியவர்களாகித் துன்பம் அனுபவிப்போர் பற்பலர் ஆவர். கணவர் கண்களிக்க காரிகைமார் கலன்கள் அணிந்த காலம் போய், கணவர் மனம் சலிக்க—வெறுக்க—மனைவியர் கலன்கள் அணியுங் காலமும் வந்ததே!! அந்தோ நகைப்பித்தே! இச் செந்தமிழ் நாட்டைவிட்டு நீ அகன்றொழியும் நாள் எந்நாள்? அந்நாளே நன்னாள்.

நகைகள் அணிந்துகொள்வது எதன்பொருட்டு? உடல் வளத்தின் பொருட்டா? உயிர் நலத்தின் பொருட்டா? அந்தோ! இரண்டுமில்லையே! ஒவ்வொரு உறுப்பிலும் விலை உயர்ந்த விதம்விதமான நகைகளை அணிந்து உலவும் நகர்ப்புறத்து நாகரிகப் பெண்மணிகள் போதிய உடல்வளம் உடையவர்களாய் ஆரோக்கிய வாழ்வினராய் நிலவுகின்றார்களென்றும், மானத்தை மறைக்கும் சேலையையன்றி ஆபரணங்கள் எவையும் அணியாத நாட்டுப்புறத்துப் பெண்மணிகள் உடல்வளம் சுருங்கி அனாரோக்கிய வாழ்வினராய் உலவுகின்றார்களென்றும் நிரூபித்துக்காட்ட எவராலேனும் இயலுமா? இருவருள் வைத்தியர் உதவியை அடிக்கடி நாடி நலிந்து நிற்போர் எவர்? நகர்ப்புறத்துச் சீமாட்டிகளே யன்றோ! உயிர் நலத்திற்கு—அதாவது—ஆன்மநலத்திற்கு ஆபரணம் அணிதல் எவ்விதத்திலும் உதவுவது அன்று என்பதை உரைக்கவும் வேண்டுமோ? இரண்டுக்கும் இல்லையென்றால், கணவன்மாரைக் களிப்பூட்டுவதற்காக என்றாவது கூறமுடியுமா?

இனி, கௌரவத்தின் பொருட்டு—அந்தஸ்தின் பொருட்டு—பெருமையின் பொருட்டு ஆபரணம் அணிகின்றோம் என்று சில சகோதரிகள் சொல்ல முன் வரக்கூடும். அத்தகைய சகோதரிகள், முதலில்-உண்மையான பெருமை தனக்குத்தானே தேடிக்கொள்வது அன்று என்பதையும், அது தமது ஒழுக்க உயர்வால் வெளியிலிருந்து தானாகவே வரவேண்டியதொன்று என்பதையும் கருத்தில் இருத்திக் கொள்வார்களாக. செல்வச் சீமாட்டிகள் சேர்ந்துள்ள இடத்தில், விலை உயர்ந்த நகை அணிந்தோர்க்கு மதிப்பு அதிகப்படக்கூடும். ஆனால். அவ்வாறு அணிந்தோர் நடுத்தர வகுப்பினர் முதலியோர் எதிரில் காணப்படும்போது, அவர்களது அகத்தில் பொறாமை வயிற்றெரிச்சல் ஆசை முதலியவற்றையே தோற்றுவிக்கின்றனர். பாவம் அது அவ்வளவில் நின்றுவிடாது நாளுக்குநாள் முதிர்ந்துவரத் தலைப்பட்டு நகைப்பித்தாக மாறி, குடும்ப வாழ்க்கையையே இன்பமற்ற கலவர வாழ்க்கையாக ஆக்கிவிடுகின்றது. ஒரு சிலரது கொண்டாட்டம் பற்பலரது திண்டாட்டமாக மாறிவிடுகின்றது. விலை உயர்ந்த ஆபரணங்களை அணிவதனாலேயே ஒருவித கௌரவம் உண்டாவதானால், அத்தகைய கௌரவம் எப்பயனும் இல்லாததொன்றே. அஃது செல்வச் சீமாட்டிகள் சம்பந்தப்பட்ட அளவிலேயே நிற்கும். ஏனையோர் அவ்வாறு எண்ணார். விலை உயர்ந்த நகைகளை அணிந்து மினுக்குவதன் வாயிலாக, தங்கட்கு இவ்வளவு செல்வச் சிறப்புண்டு என்று விளம்பரப்படுத்திக் கொள்வோர், மானத்தை மறைக்கக் கந்தைத் துணிக்கும் கதியற்றுப் பரிதவிக்கும் நமது ஏழைச் சகோதரிகளின் நிலையைச் சிறிதளவேனும் சிந்தித்துப் பார்த்திருப்பரோ?

சக்கரத்துக் கெதிரில் சுக்கிரனும் நில்லான்.



இனி, ‘அழகை முன்னிட்டு ஆபரணம் அணிகின்றோம்’ என்று கூற முன்வரும் பெண்மணிகள் பலர் இருக்கக்கூடும். இயற்கை யழகில்லாத ஒருத்தி எவ்வளவு உயர்ந்த நகைகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டாலும், உண்மையில் அக்குறையை நீக்கிக்கொண்டுவிட முடியாது; சில வேளைகளில் அது பரிகாசத்திற்கும் இடமாகிவிடும். செயற்கை முறையால் அழகை வலிந்து உண்டுபண்ணிக் கொள்ள முயல்வது பேதைமையே. இயற்கையில் அமையாத அழகு, நகைகளால் மட்டும் எய்திவிடாது. ஒரு பெண்ணின் கழுத்தில் பலவித தங்க மாலைகளும் கைகளில் டஜன் கணக்கான வளையல்களும் செவிகளில் வைரத்தோடுகளும் விளங்கினாலும், அவ்வம்மையின் திருமேனி ‘புளூபிளாக்’ நிறமாயும் பற்கள் சற்று முன்வந்தும் உடல் மிகப் பருத்தும் இருப்பின், ‘அழகு’ எனுந் தேவி அவர்களைச் சார்ந்து விடுவளோ? கருமையையும் வடுக்களையும் மறைக்க முகத்தில் பூசும் ‘டாய்லட்’ பொடி, அவர்களை வேஷதாரிகளாகவே காட்டும். இயற்கை அழகை உடையோர்க்கு நகைகள் பின்னும் சற்று அழகை உண்டாக்குவதாகக் காணப்பட்டாலும், அத்தகையோர் நகைகளின்றி இருப்பினும் அழகிற் சிறந்தோராகவே இலங்குவர். அழகினுக்கு அழகு செய்வதேபோல், தம்மை நகைகளால் அலங்கரித்துக்கொள்ளும் இயற்கையாகவே சிறந்த அழகுடையோர், உண்மையில் அந் நகைகளுக்கே தாம் அழகுசெய்வோர் ஆகின்றனர். சிறந்த சுந்தரிகளின் அவயவங்களை அடைந்த நகைகள், அவர்களால் அழகு பெறுகின்றனவே யன்றி, அவர்கட்கு அவை இல்லாத புதிய அழகை எய்துவிக்கின்றன என்பதில்லை.

தத்தம் குழந்தைகட்குப் பலவித நகைகளைப் பூட்டி அலங்கரித்து, அதைக் கண்டு ஆனந்தமடையும் அன்னைமார், சற்று அஜாக்கிரதையாக இருப்பினும் அவற்றைப் பறிகொடுக்க நேர்வதுடன், அதனால் குழந்தைகட்கே ஆபத்து நேர்ந்துவிடுவதும் உண்டு. விலை உயர்ந்த நகைகளை அணிந்திருப்போர் வெளியிற் செல்ல நேரும்போது; அவற்றால் பெரிதும் கவலை கொண்டு நிற்பதும் உண்டு. நகைப்பித்து, உயிர்க்கே பகையாய்விட்ட சங்கதிகளும் பற்பல.

தமிழ்நாட்டின் தென் மூலையில்—திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில்—‘தொங்கும் தொள்ளைக் காதுகள் எப்படித்தான் அவற்றைத் தாங்கிக்கொண்டிருக்கின்றனவோ’ என்று காண்போர் பெரிதும் வியக்குமாறு பத்துப் பதினைந்து நகைகள்—இல்லை—பொன் உருண்டைகள் அணிந்தவர்களாகக் காணப்படும் பெண்மணிகளைப் பார்க்கும்போது, எவர்க்கும் சிரிப்பு விளைவது இயல்பே.

ஔவை வாக்கைச் செவ்வையாகக் கொள்.

பெண்களை மட்டுந் தான் நகைப்பித்துப் பிடித்திருக்கின்றது என்பதில்லை. வைசியர்கள் முதலிய ஆடவர்களையும்—ஏன்?—கிழவர்கள் சிலரையுங்கூட அது பிடித்தாட்டுகின்றது என்றால், அதன் ஆற்றலை என்னென வியப்பது? தலை நரைத்தும் பற்கள் வீழ்ந்தும் மேனி தளர்ந்தும் காணப்படும் கிழவர்களிலும் கிழவிகளிலுங்கூட, பொற்சங்கிலிகள் அணிந்து குலுக்குவோரும் வைரத் தோடுகளும் கம்மல்களும் அணிந்து மினுக்குவோரும் பருமை வாய்ந்த பட்டைக் காப்புகள் அணிந்து பகட்டுவோரும் மீண்டும் குமரர்களாகவும் குமரிகளாகவும் மாறிவிட முயல்வோரும் சிற்சிலர் உளர். பொன்னாசையை ஒழிக்க வேண்டிய கிழப்பருவம் வந்தும், நகைப்பித்து நீங்கப்பெறாத கொள்ளையை நினைத்து என்னெனச் சிரிப்பதோ!

நகைப்பித்தே! தற்காலத் தமிழ்நாட்டுப் பெண்மணிகளைப் பிடித்தாட்டும் பெரும் பேயே! இன்பமயமான இல்லற வாழ்வையும் அமைதி இல்லாத துன்பவாழ்வாக்கிவிடும் கொடும்பேயே! நடுத்தர வகுப்பினரைக் கலங்கி நிற்கச் செய்யும் கடும் பேயே! குழந்தைகளுக்குச் 'செல்லம்' கொடுத்து அவர்கள் கல்விப் பயிற்சியில் சிரத்தை கொள்ளாது வீணே திரிந்து நாளடைவில் ஒழுக்கங் கெட்டு நின்று வருந்தி நிற்குமாறு செய்துவிடும் கெடும்பேயே! செல்வத் திமிரால் தம்மெதிரில் அலங்கரித்துக் கொண்டு தோன்றும் சீமாட்டிகளைப் பார்க்கும் ஏழைப் பெண்கள் மனத்தைச் சுடும் பேயே! நாகரிகப் பித்தர்களையும் கர்நாடகப் பற்றுடையோரையும் ஒருங்கே பிடித்தாட்டிவைக்கும் பேயே! கிழவர்களையுங்கூட ஆட்டிவைக்கும் வலிய பேயே! இந்நாளை தமிழ்நாட்டின் நிலை எவ்வாறிருக்கின்றது என்பதை நீ அறிவாயே! தமிழ்நாடெங்கணும் பரவியுள்ள தற்கால வறுமையை நீ உணர்வாயே! உன்னைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன், தயைசெய்து தற்காலத் தமிழ்நாட்டுப் பெண்மணிகளது அகத்தினின்றும் அகன்று செல்வாயே! இன்றேல், தமிழ்த் தாயின் கொடிய சாபத்திற்கு ஆட்பட்டு அழிவாயே!

தமிழ்நாட்டுப் பெண்மணிகாள்! செல்வச் சீமாட்டிகாள்!! நகைப் பித்தில் பற்றுவைத்துக் களிப்பதற்கும் கவல்வதற்கும் இது காலமல்ல. புற அழகைப் புறக்கணித்து அக அழகை வளர்க்க வேண்டிய காலம் இது. வடநாட்டில், தியாக வடிவினராய பெண் தெய்வங்கள் பற்பலர் சிறைச்சாலைகளில் தவங்கிடக்கின்றார்கள். பாரத மக்களின் இக்காலத் தெய்வம்—சாந்த மூர்த்தி—ஆன்மசக்தியால் சிறிதும் எதிர்பார்த்திராத பற்பல அற்புத வினைகள் நிகழுமாறு செய்துவிட்ட தலைவர் பெருமகன்—காந்தியெம்பெருமான் சிறையில் உறைகின்றார். இந்நாளில், நீங்கள் நகைப்பித்தில் கருத்துச் செலுத்தி நிற்பது நன்றேயோ? அப்பித்தை இன்றே—இன்னே—உங்கள் அகத்தினின்றும் அகற்றிவிடுங்கள்; ஒவ்வொருவரும் இனியேனும் தூய கதரே உடுத்த உறுதி செய்துகொள்ளுங்கள். தமிழ்த்தாயின் நலம்நாடி உண்மையன்புடன் ஆண்டவனை நோக்கி வேண்டுங்கள். அன்னை திருவருள் பொழிக.



# இளையான்குடி மாறனார்.

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

சோழவள நாட்டிலே இளையான்குடி என்னும் இயற்பெயர் வாய்ந்த ஓர் பழம்பதி யுளது. ஆண்டு ஒப்பில்லாத வள்ளற் பெரியாராகியிருந்த வேளாண் மரபினர் ஒருவர் உழவரசரா யுறைந்தனர். அவரது பெருஞ்செல்வம், வள்ளற்றன்மை, தெய்வபக்தி, சிவனடியாரை ஆதரிக்கும் ஆர்வம், முதலிய அரும்பெரும் பண்புகளை வியவாதாரும் போற்றாதாரும் இலர். இக்காரணம் பற்றியே இப்பெரியாரை மாறனார் என் உபசார வழக்கால் அழைத்தனரோ? அல்லது பாண்டியன் என்பதைக் குறிக்கும் மாறனார் என்பதே அக்காலத்து வழக்கில் வந்த குடிப்பெயரோ? என்பதை நாம் அறியக்கூடவில்லை. இவ்வாறு கொள்ளாமல் மாறன் என்பதே இவரது இயற்பெயராக இருத்தல் கூடுமென எண்ணுவாரும் உளர். இனி இளையான்குடி என்னும் பதிகள் வேறு இரண்டு உளவென்றும் நாம் அறிகிறோம். அவற்றுள் பாண்டியநாட்டில் உள்ள இளையான்குடியில் இச்சரித்திர சம்பந்தமான குறிப்புக்களோ, நாயனார்க்கு திருக்கோயிலோ முதலிய தொன்றுமிலை. பிறிதொன்றும் அத்தன்மையதே. சோழநாட்டில் திருநள்ளாற்றிற் கணித்தாயுள்ள இளையான்குடியில் நாயனார் அரையிரவில் எய்திய அடியாரை அமுது செய்விப்பதற்காக அன்று பகலில் தாம் விதைத்து வந்த முளைநெல்லினை வாரியதாகச் சொல்லும் குறிப்புக்கிணங்க பதியின் அருகேயுள்ள வயல்களினிடையே இன்றும் முளைவாரிப்பள்ளம் என்னும் பெயருடன் ஒரு தளையிளிர்கின்றது. நாயனாருக்கும் அவரது மனைவியாருக்கும் ஆலயம் அமைந்து நித்திய வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. தவிர நாயனாரின் ஆலயமும் வேளாண் மரபினர் வீதியிடையே ஒரு இல்லம்போல் காணக்கிடக்கின்றமையால் அக்காலத்து நாயனார் குடியிருந்த திருமனையே தற்போது திருக்கோயிலாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனச் சென்று காண்போர்க்குக் காட்சி வழங்குகின்றது. சொற்கட்டிடம் கற்கட்டிடம் இரண்டில் சொற்கட்டிடத்தை மனம்போல் மாற்றவும் திருத்தவும், இடைச்செருகிப் புதுவது புனையவும் ஒரு சிலர் முயலக் கூடுமானாலும் கற்கட்டிடத்தை அங்ஙனம் இலேசாக மாற்றி யமைக்க முடியாதவாறே முன்னோர் அரிதின் முயன்று சிறப்புற அமைத்துள்ளார். அத்தகைய அரும் சான்று நமது இளையான்குடிக்கண் திகழ்வதே நமக்கு உண்மை பயக்கின்றது. அவர்கட்கு அமைந்துள்ள ஆலயத்தில் நாயனாரது வள்ளன்மையை உலகிற் கறிவிக்க விருத்த வேடங்கொண்டு அரையிரவில் எழுந்தருளிய கண்ணுதற்பெருமானின் வேடமும் சிலாரூபத்தில் இலங்குகின்றது. தாற்றுக்கோல் நிமிர்ந்தால் அல்லது, வணிகர் துலைக்கோலும், அரசர் செங்கோலும், அந்தணர் பலாசக்கோலும்

நிமிர்ந்து நிற்க முடியாது வீழ்ந்து படும். ஆதலினால், ஏனைய மூன்று குலத்தினர்களின் செழிப்புக்கு ஆதாரமாகவும் அஸ்திவாரமாகவும் காரணராகவும் விளங்குவோர் இவ்வேளாண் மரபினரே என்பது மறுக்க முடியாத மறைமொழி போன்ற தொன்றாம். அதுவுமன்றி ஸத்தியத்திலும் பரோபகாரத்திலும் வேளாண் மரபினரே மேம்பட்டவர் என்பதும் சரித்திர உண்மை.

இத்தகைய புண்ணியம் அமைந்த கண்ணிய மரபில் உலகுய்யச் சைவம் சிறக்கச் சமயம் ஓங்க அவதரித்தருளிய மாறனாரின் சரிதச் சுருக்கமும் அச்சரித வரலாற்றினால் விளக்கமுறும் இல்லறமாண்பும் பெண்மையின் பெருமையும் பிறவும் நாம் அறிந்து போற்றும் குறிப்புக்களே இக்கட்டுரையின் உள்ளுறைப் பொருள்களாகும்.

இனி சரித்திரத் தலைவராகும் நமது நாயனாரின் இயல்பினை யாராயுமிடத்து அவரது பழம் புண்ணிய மிகுதியால் அடியார்களின் பசிப்பிணியையகற்றி மகிழ்விப்பதே தமது மகிழ்ச்சியாகத் துணிந்தொழுகி வந்தார் என்பது வெள்ளிடைமலை. விரிந்த மனதிற்கேற்ப பரந்த செல்வமும் நிறைந்திருந்தது. இதனை நமது புலவர்பெருமான் சிவபெருமானின் தோழன் என்னும் வழக்குடன் அளகாபுரியில் வாழும் குபேரனுக்கு இணையாகிய செல்வப்பெருக்கில் வாழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். செல்வக் கடலில் திளைத்து விளங்கும் மாறனார் தமதெண்ணப்படி அனையாஅட்டிற் சாலையும், அடையாத் திருக்கதவும் உடையராயிருப்பதற்கு முட்டுப்பாடு எவ்வழியிலும் இலதாயிற்று. செல்வப் பெருக்குடையார் அறம் செய்வதினால் உலகிற் புகழ் சிறப்பதில்லை. அறம் செய்வோர் தம் உள்ளநிலையும் உணர்தல் முடியாததே. தவிர செல்வர் அறம் செய்வதில் வருத்தமும் இன்று. பலர் பிறர் தம்மை வியக்கும் பொருட்டும் செய்வதுண்டு. இக்காரணங்களினால் நமது மாறனாரின் கருணை குடிகொண்ட கனிந்த மன நிலையினையும் அவரது வாழ்க்கைத் துணைநலமாக அமைந்த கற்புடை மனைவியாரின் பெரும்பண்பையும் உலகினருக்கு அளந்துகாட்ட அவரது உள்ளத்தில் என்றும் குடிகொண்ட இறைவனார் நாளடைவில் இவரது குபேர சம்பத்தும் சிறுகிச் சிறுகித் தேயுமாறு திருவுளம் பற்றினர். கண்டோர் வியக்கும்படி கணிக்க முடியாத மாறனாரின் செல்வம் முழுதும் மறைந்து கரைந்தது. இது போழ்தும் தமது மனம் சுருங்காது தமது திருப்பணியில் முன்னையைவிட ஊக்கம் கொண்டவராயினர். இதனை தெய்வப்புலவர்

"இன்னவா றுவளஞ் சுருங்கியும் எம்பிரான் இளையான்குடி
மன்னன் மாறன் மனஞ்சுருங்குதலின்றி உள்ளன மாறியும்
தன்னைமாறி யிறுக்கவுள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னைமாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த சிந்தைய ராயினர்"

எனத்திறம்பட அமைத்தருளிக் காட்டினர். "மனமுண்டேல் வழியுண்டு" எனும் ஆங்கிலப் பழமொழியும் இம் முறைக்குச் சான்று பகரும். நமது மாறனாரின் மனம் சுருங்காமல் பின்னும் பரந்தபெற்றி குறித்தே வளம் சுருங்கிய ஞான்றும், மன்னன் என்று விதந் தோதினர். செல்வத்தின் நிறைவு மனத்தின் அளவே யென்பர் அறிஞர் பிறரும். மாறனார் சிறிதும் சலியாது

---

உலகத்திற் கெளியவன் உயர்குணமில்லாதான்.



தம்மால் உள்ளனவாய, பண்டங்கள், ஆபூர்வ வஸ்துக்கள் ஆகிய அனைத்தையும் விற்றும், தம்மையே மூழ்குவிக்கும்படியான அதிகமான கடன்கள் வாங்கியும் தம்மனத்திற் குவப்பான மகேசுவர பூசையை முட்டின்றி அகமகிழ்ந்து ஆற்றி வந்தனர்.

இத்தகைய நிலைமையும் குன்றியது. அதுகாலை இனியும் அன்பரை அல்லலில் மூழ்குவிக்கத் தரியாராய் ஆட்கொள்ள விரைந்து இறைவனார் ஓர் நாள் நள்ளிருளில் அடைமழையில் மிகப் பசித்துக் களைத்த விருத்த வேடத்தினராய் மாறனார் இல்லம் நண்ணினர். கீளார் கோவணவுடையினராய், திருநீறிலங்கி ஒளிதவழ்ந்த திருமுகத்தினராய், வாடித் திரைந்து தளர்ந்த மேனியராய், மிகப் பசித்த குறிப்பினராய் நனைந்த மேனியுடன் போந்த பெரியாரை வரவேற்ற மாறனார் பெருமகிழ் சிறந்து தமது மனதைக் கவர்ந்த அவரது பொலிவினைப் போற்றி வணங்கி ஈரமுற்ற மேனியை வேறு உலர்ந்த ஆடையாற் றுவட்டி குளிர் குறைய அடக்கமான இடம் அளித்து இளைப்பாற விடுத்து, அப்பெரியாரை அமுதூட்டுவிக்கும் ஆசையினராய், ஒப்புவமையற்ற கற்பருங்கலமாகிய தமது இல்லக்கிழத்தியை அணுகித் தம் விருப்பத்தினை வெளியிடலானார். தாம் வெளியிடப்போகும் செய்தி தமக்கே நேர்மையில்லாததென மாறனார் மனதிற் பட்டது என்னும் குறிப்பினையும், அப்படிப் பட்டும் வேறு விதியின்றி, இல்லத் தலைவியும் வாழ்க்கைத் துணைநலமும் ஆகிய தம் பெண் தெய்வத்தினிடம் அணுகிக் கருத்தை வெளியிடும் சங்கடமான நிலைமையையும் வெகு வெகு அழகாக இயற்கைப் படம் பிடித்தது போல் சேக்கிழார் பெருமான் பாக்கள் அமைத்தருளிய அழகினை எம்மொழி கொண்டு போற்றவல்லேம்? அப்பாடல் வருமாறு

"நமக்கு முன்பிங் குணவிலை ஆயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு மற்றிங் கடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ஙனேயணங் கேயென

இதனால் ஏற்கெனவே தங்களிருவருக்கும் அன்று உணவின்றிப் பட்டினியிருக்க நேர்ந்த நிலைமை விளங்குகின்றது. நமக்கே உணவமைக்க முடியாத இடர்ப்பாட்டில் விருந்தோம்புதலை எந்த மனைவிதான் அங்கீகரிக்கக்கூடும்? அது நீதியன்றென்பது தமக்குப் புலனாகியும் அடியாரை அமுதுண்பிக்கும் ஆசைப் பெருக்கினால் மனைவியை நோக்கி "அணங்கே!" (தெய்வப் பெண் போன்றவளே) என விளித்து உபாயம் கூறமாட்டுவையோ என இரக்கத்துடன் கேட்பது கவனிக்கத் தகும்.

இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை என்றபடி எப்பொருளையும் இல்லையென்று கூறியே மேன்மேலும் சேகரித்து வைப்பதும் அவசரத்திற்குதவும்படி அடியோடு செலவிடாமல் ஒரு சிறு பாகம் மனையில் ஒதுக்கி வைப்பதும் பெண்பாலார்க்கு இயல்புக்குண மாதலினால் மாறனார் மனைவியோடு சிந்தித்தல் நியதியாயிற்று. குடும்ப நிர்வாகங்களில் மனைவியின் சூட்சுமமான சமயோசித உபாயங்கள் இல்லத் தலைமகனால் சிந்திக்கவுமுடியாத தென்பது

---

ஈனர் சகவாசம் இறுதியில் தெரியும்.

எவரும் மறக்கமுடியாததாகும். அத்தகைய சாதனங்களில் ஒரு சிறிது மாறனார் மனைவியாரிடம் உளதெனின், தாம் பட்டினி யிருப்பினும் நாயகரைப் பட்டினி யிருக்கவிடமாட்டார். ஆகவே அந்நிலைமையும் இல்லாதவழி கற்புடை மடந்தையாதலினால் நாயகன் ஆவலைத் தணித்து மகிழ்விக்கும் உபாயமாவது சொல்லக்கூடும் என்னும் குறிக்கோளை உட்கொண்டு நமது பெரியார் அணங்கேயென்று மதிப்புற விளித்து உசாவினர். அவ்வுரைகேட்ட மனைவியார் சிறிது திகைத்து நாயகர் விரும்பும் வண்ணம் விருந்தினரை யுண்பிக்கின்றேன் என இல்லத் தலைவியாகிய தாம் தேறுதல் கூறும் புண்ணியம் அமையப் பெறாதது குறித்து வருந்தினரேயன்றி பொருந்தாவுரை புகன்றார் என நொந்தாரில்லை. பெண்பாலார் பெண்பாலாரிடைக் கடன் பெறுதல் என்பதும் உண்டாதலின் அத்தகைய கடன்கேட்டு உணவுப் பொருள்களைச் சேகரிக்கலாமெனில், அதற்கும் மார்க்கமில்லாமல் ஏற்கெனவே கொடுக்கக் கூடியவர்களிடமெல்லாம் கடன் பெற்றிருப்பதுடன் இவைகளை மீட்டும் திருப்பிக் கொடுக்க முடியாதிருப்பது குறித்து "ஏதிலாரும் இனித் தருவாரில்லை" என்றும் வருந்திக் கூறினர். வேறு அயலில் உள்ள அறிமுகமுள்ளாரை யடுத்துக் கேட்பதென்றாலும் இரவாய்விட்டது. இரவில் பண்டக் கடன் கொடுக்க எந்தப் பெண்டிரும் உடன்படார் என்பது தோன்ற "போதும் வைகிற்று போமிடம் வேறில்லை" எனவும் புகன்றார். மாறனார் எண்ணத்தையும் பொறுத்த கடவுள் மனைவியாரின் மாசற்ற மென்மையுள்ளம் வருந்துவது தரியாராய் அவர் உள்ளத்தில் ஓர் உபாயம் தோன்றச் செய்தனர். அவ்வாறு தோன்றிய அருள் ஒளியை உடனே கணவர்பால் வெளியிட்டமையை ஆசிரியர்

> செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
> மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
> வல்லவா றமு தாக்கலும் ஆகும்

என்ற செய்யுளால் விளக்கியுள்ளார்.

அன்று பகலில் விதை நெல்லை முளைவித்து வயலில் விதைத்துவந்தமை அம்மையார் நினைவிற்கு வந்தது. பெய்யும் பெரு மழையில் அம்முளைகள் பூமியில் அழுந்தாமல் மிதக்குமாதலின் அவைகளை வாரிக் கொடுவந்தளித்தால் கைவன்மையினால் (அடிசில் அமைக்கும் பழக்கத்தால்) அன்னம் அமைக்கலாமென ஓர் உபாயம் தோன்றவே அதனைக் கணவரின் கவலை மறைய உரைத்தனர். இந்த உரை மாறனார்க்குப் பெரு நிதி கிட்டியதுபோன்ற பெருமகிழ் வளித்தது. உடனே தாமதியாது எழுந்து இறைக்கும் மிடாவினை யெடுத்துத் தலையிற் சுமந்து தமது வயலினைக் காலின் பழக்கத்தினால் வழி கண்டு நாடிச் சென்றடைந்து மழைத்தண்ணீரின் போக்கில் மிதந்து ஒதுக்கப்பட்டுத் தேங்கும் நென்முளைகளைத் தடுத்து இரு கரங்களாலும் வாரி வாரி கிட்டியமட்டும் இறை கூடையில் இட்டுக்கொண்டு பெறாத செல்வம் பெற்றவர்போல் மனை நோக்கி வந்தனர். நடு நிசியில்-நள்ளிருளில்-அடை மழையில்—நாயகன் தனிமையில் வெளிச் சென்றாரே எனும் கவலை யொருபுறமும், பெரியவர் அறப் பசியால் மெலிகின்றனரே எனும் இன்னல் மற்றொருபுறமும் மனதை

இதவார்த்தையானாலும் மிதமாகப் பேசு.



அரிக்க அதனால் அம்மையார் அமைதி குலைந்து உள்ளே யிருக்கப் பொருந்தாமல் கடைவாய்தலின்கண்ணேயே நின்றிருந்து நாயகனார் கொடுவந்த முளை நெல்லிட்டமிடாவைக் கரத்தே வாங்கினர். மேலே கூறிய செய்யுளில் "செல்லல் நீங்க" என்ற செம்மொழி எண்ணுந்தோறும் இன்ப மூட்டுவதாம்.

செல்லல் என்பது விருந்தினர்க்கு அமுதமைக்க முடியாதமையால் ஏற்பட்ட துன்பம் எனவும், வறுமையினால் இனி வருந்தாமல் வாழ்வு நடாத்தலாமென எண்ணிப் பகலில் விதைத்த செந்நெல் எனவும், மாதா உதரத்திற்குள் இனிச் செல்லும் செலவைத் தடுத்து அழியா முத்தியில் அடையச் செய்ய வல்லதாகிய செந்நெல் எனவும் பொருள் தருகின்றமை பெருநயம் பயப்பதாகும்.

இவ்வாறு கைவந்த முளை நெல்லை அம்மையார் மகிழ்ச்சியுடன் அவற்றோடு படிந்திருந்த சேற்றினை யலம்பி யூற்றிக் கணவனாரால் திருமனைமேல் வேயப்பட்டிருந்து அறுத்து வீழ்த்தப்பட்ட உலர்ந்த அலகினால் தீமூட்டி வெளிவந்த முளை உள்ளே சுருங்கும் பதத்தில் வறுத்துக் குற்றி அரிசி யெடுத்து உலையிற் பெய்து அமுதமைத்தபின் அம்மையார் திருவமுதுக்கு உறு துணையாய கறியமுதிற் கென்செய்வதெனக் கணவனாரை வணங்கிக் கேட்டனர். நமது வள்ளற்பெரு மாறனார் வீட்டுக் கொல்லையில் சமீபத்தில் விதைத்து முளைத்து ஈரிலை விரிந்திருந்த குழியும் நிரம்பாத முளைக்கீரையைப் பறித்துக் கொடுவந்து மாதரசியார்பால் அளித்தனர். அதனை அவரும் ஏற்றுச் சுவை பயக்கத்தக்க வகையில் வெவ்வேறு கறி வகைகளாகப் பாகம் செய்து முடித்துப் பெரியாரை அமுது செய்விக்கலாமென உணர்த்தி நின்றார். மனைவியார் புகன்ற மொழி கேட்ட மாறனார் மிக விரைந்துசென்று பொய்த்துயில் புரியும் புனை தவவேடம் பூண்ட பெரியாரை அணுகித் துயிலெழுப்பினர். உண்மைத் துயிலினரை எழுப்பலாமன்றி கள்ளத் துயில்கொண்ட கண்ணுதற் பெருமானை எவரே உணர்த்தவல்லார். பெரியார் பசியினாற் களைத்தாரென அன்பர் பரிவுற்று மீண்டும் எழுப்ப முயன்றபோது உலகுய்யச் சைவம் சிறக்க அன்பர் களிக்க ஆட்கொள்ள எழுந்தருளிய எமதையன் மாதொரு பாகராய் மழவிடை மேற்கொண்டு அந்தார் மலர்மழை பொழிய யோகியரும் காணாத அருட்கோலம் காட்டியருளி மாறனாரை நோக்கி

> "அன்பனே அன்பர்பூசை புரிந்த நீ அணங்கினோடும்
> என்பெரும் உலகமெய்தி யிருநிதிக்கிழவன்றானே
> மன்பெரு நிதியமேந்தி"

வணங்கிப் பணிகேட்கும் நித்திய வாழ்விற் றிளைப்பீராக எனத் திருவாய் மலர்ந்து மாறனாகியிருந்த நாயனாரையும், அவர்தம் மனைவியாரையும் உடன்கொண்டு மீளாச் சிவலோகத் தமர்வித்தனர் என்பது இளையான்குடிமாற நாயனாரின் சரித வரலாறு.

இதனால் இல்வாழ்வானும் கடமை தவறாது தனக்கென வாழ்வுதவாது பிறர்க்கென வாழும் பெற்றி மேற்கொள்ளின் துறந்தார் எய்தும் பதவியை எய்தலாமென்பது பெறப்படுகின்றது.

தவிர மனமொத்த மனைவியின் ஒத்துழைப்பு இலதேல் இல்வாழ்வான் எவ்வறமும் முட்டின்றி முடித்தல் முடியாதென்பதும் விளங்குகின்றது. இவ்

இல்லறத்துக் கவசியம் இல்லாளின் ஒற்றுமை.

வாறின்றி நற்குணமில்லாள் மனையாளாக வாய்ப்புறின் இல்லறம் விடுத்துத் துறத்தலே பொருத்தம் உடையதாம். இதனை, மூதாட்டியாரும்

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யேயாகில்
எத்தாலும் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பளே ஆமாகிற்
கூறாமற் சன்னியாசம் கொள்" என்ற

வெண்பாவினால் அநுமதித்தனர்.

நமது நாயனார் மனைவியாரிடம் வன்கண் உடையராய் ஏதேச்சாதிகாரம் புரிந்து தம் கொள்கையைப் பூர்த்தி செய்து கொள்ளவில்லை. தரிக்க முடியாத வறுமையிலும் இருவரும் இனித்த மெய்யன்புடையராய் இலங்கினார்களென்பது நன்கு விளங்குகின்றது. நாயனார் மனைவியாரின் பெரும் பண்பை மதித்து அணங்கேயென விளித்தது போலவே ஈசனும் "நீ அணங்கினோடும்" என உபசரித்தமை குறிப்பிடத் தக்கது. கற்புடைய மங்கையர் கடவுளும் மதிக்குத் தேவமாதரே யென்பது ஈண்டு நிலைபேறுகின்றது. மூளையோடிருந்த சேற்றினை சிந்தையில் விரும்பி மனைவியார் நீரினால் அலம்பினாரென்பது அவர்க்கு மாகேசுவர பூசையில் இருந்த அதிதீவிரமான ஆர்வத்தைக் காட்டுகிறது.

நாயனாரின் திருமனையைச் சேக்கிழார் பெருமான் அந்தமில் மனை என்று உபசரித்தனர். அவ்வருள் வாக்கு பழுதுறாமல் அவர் வாழ்ந்த நன்மனை பிற்காலத்து திருக்கோயிலாகவே திகழ்கின்றது. இச்சரித்திரத்தினால் செல்வம் மிகுத்துள்ளபோது அறம் செய்வோர் சிந்தை நிலையினும், செல்வம் அற்றபோதும் திரியா நிலையில் அறம்புரிவதன் அருமை சிறந்து தெளியப்படுகின்றது என்பது தேற்றம்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

ஆபத்தில் தெரியும் அன்பன் நேசம்.

## கனவின் பலன்

(வி. சங்கர ஐயர்.)

(352-ம் பக்கத் தொடர்ச்சி)

69. புலி, சிங்கம், முதலை, கரடி, மான், காட்டுப் பன்றி, முள்ளம் பன்றி இவைகளைக் கண்டால் சத்துரு நாசம்.

70. தேசத்தை ஆளும் அரசன் எந்த ஜாதியோ அந்த ஜாதியாரைக் கனவு கண்டால் அபிவிருத்தி.

71. பிரேதத்தைப் பார்த்தால் போஜன சௌக்கியம் புதிய வஸ்துக்கள் கிடைக்கும். அதிக போக முண்டாகும்.

72. தாய் தந்தை குரு முதலிய பெரியோரைக் காண்பது இஷ்டசித்தி.

73. சிறு குழந்தைகள், அப்ஸர ஸ்திரீகள் இவர்களைக் கண்டால் தனலாபம்.

74. குழந்தைகளின் பிரசவத்தைப் பார்த்தால் சுக ஜீவனம்.

75. சினேகிதர்கள் இறந்ததாகக் கண்டால் சந்தோஷ சமாசாரம் கேட்பான்.

76. கலியாணத்திற்குத் தான் சகாயம் செய்வதாகக் கனவு கண்டால் ஜயம். மங்களகரமான சங்கதிகள் கேட்கலாம்.

77. சுவர்க்கத்தைக் காண்பதாகவோ அங்கு தான் இருப்பதாகவோ கனவு கண்டால் தனலாபம்.

78. விரோதிகள் தன்னை நமஸ்கரிப்பதாகக் கனவு கண்டால் ஜயம்.

79. இஷ்ட தேவதைகளையோ இறந்த பெரியோர்களையோ கனவிற் காண்பது காரியசித்தி.

80. இறந்தவர்களுடன் பேசினதாகக் கண்டால் கீர்த்தியுண்டாகும்.

81. தான் தாழ்ந்த ஜாதியில் பிறந்ததாகக் கண்டால் அதிகலாபம்.

82. பைத்தியக்காரனைக் காண்பதும் அவனோடு சம்பாஷிப்பதும் ஐசுவரிய லாபம்.

83. தான் குதித்ததாகக் கனவு கண்டால் ஸர்வசித்தி.

84(a) தன் கைகள் முன்னிருந்ததைவிட அதிக புஷ்டியானதாகக் கனவு கண்டால் பெரிய உத்தியோகம் கிடைக்கும்.

(b) வலது கையினால் வேலை செய்துகொண்டிருந்தால் அதிர்ஷ்டமுண்டாகும்.

அடுத்துக் காட்டாத படிப்பு எடுத்துக் காட்டாது.

85. தனக்குக் கொம்பிருப்பதாகக் கனவு கண்டால் உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும்.

86. தன் சிரசு பெரிதானதாகவோ உயரமானதாகவோ கண்டால் புகழும் அதிகாரமும் பலன்.

87. பக்ஷிகளுடைய தலையைத் தான் வெட்டினதாகக் கண்டால் தனலாபம்.

88. சிங்கம், புலி, சிறுத்தை முதலிய மிருகங்களின் தலையைப் போல தனக்கு சிரசு இருப்பதாகக் கண்டால் ஜயம்.

89(a) தன் தலையைச் சீவிக்கொண்டிருப்பதாகக் கண்டால் காரிய சித்தி.

(b) தலைதேய்த்து—அழுக்குப்போக தேய்த்துக்கொண்டிருப்பதாகக் கண்டால் ஆபத்துகள் நிவர்த்தியாகும்.

90. கர்ப்பம் கலைந்துபோனதாகக் கண்டால் கஷ்ட நிவர்த்தி

91. தாடி நீளமாகயிருந்தால் குணம்.

92. முகம் வாடாமலிருந்தால் தனலாபம்.

93. பற்கள் நோவதாகக் கண்டால் தனக்குக் கிடைக்கவேண்டிய உத்தியோக விஷயமாக உள்ள வர்த்தமானம் கிடைக்கும்.

94. நந்தவனத்திலிருப்பது உலாவுவது சௌக்கியம்.

95. கடலிலிருப்பது தனலாபம்.

96. ஊண் உறக்கமின்றி மழை வெய்யில் பாராமல் தவம் செய்வதாகக் கண்டால் லோகோபகாரி யாவர்.

97. தான் யாரையாவது கோபித்ததாகக் கண்டால் அவனோடு அதிக சிநேகம் உண்டாகும்.

98. அன்னியர் தன்னை கோபிப்பதாகக் கண்டாலும் அதிக சிநேகமுண்டாகும்.

99. தன்னை ஒருவர் அடிப்பதாகக் கண்டால் சத்துருக்கள் சிநேகிதராவார்கள்.

100. ஒருவரைத் தான் அடித்ததாகக் கண்டால் மற்றவர்களால் துதிக்தக்கவனாவான்.

101. தனக்கு ஆபத்து சம்பவித்ததாகக் கண்டால் நலம்.

102. ஒரு ஸ்திரீயை மார்பில் வைத்துக்கொண்டு படுத்திருப்பதாகக் கண்டால் அநேக கிராமங்களுக்கு மேலதிகாரி யாவான்.

103. கிழத்தனமான பெண்ணை விவாஹம் செய்ததாகக் கண்டால் தனலாபம்.

104. நூதனமாக விவாஹமான ஒரு ஸ்திரீ, தன் புருஷன் இறந்ததாகக் கண்டால் தீர்க்க சுமங்கிலியாகக் குழந்தைகளுடன் சுகமாகயிருப்பாள்.

---

அண்ணன் என்பவனுக்கு அதிகப் பொறுப்பு.



105(a) ஜீவித்திருக்கிற தன் மனைவி இறந்ததாகக் கனவுகண்டால் இரட்டைப் பிள்ளை பிறக்கும்.

(b) கருப்பிணி ஸ்திரீயோடு சம்போகம் செய்வதாகக் கண்டால் இரட்டைப் பிள்ளை பிறக்கும்.

106(a) வியாபாரம் செய்ய நினைத்து அதற்காகப் பல பிரயத்தினங்கள் செய்தும் தான் முடிவில் செய்யாமலிருந்தால் காரியசித்தி.

(b) எதையோ பார்த்து பயந்தால் காரியசித்தி.

(c) அழுவதாக கண்ட கனவும் நல்லதே.

(d) வாதிடுவது, சண்டையிடுவதும் நன்றே.

(e) தலைவாரிக் கொள்வதும் காரியசித்திக்கு அடையாளம்.

107. இளைத்துப் போனதாகக் கண்டால் குடும்ப விருத்தி.

108. தான் வியாதியாயிருப்பதாகக் கண்டால் நல்லது. வியாபாரிகளுக்கு லாபம்.

109. தனக்கு அம்மை வார்த்தால் தனலாபம்.

110. குறட்டைவிட்டுத் தானாவது, வேறு யாராவது தூங்கிக்கொண்டிருப்பதாகக் கண்டால் சுகஜீவனம் உண்டாகும்.

111. தான் இறந்ததாகக் காண்பது நன்றே.

112(a) பந்துக்கள் சிநேகிதர்கள் இறந்ததாகக் கண்டால் அவர்களுக்கு நல்லது.

(b) அவர்களைத் தான் கொன்றதாகக் கண்டால் தன்னால் அவர்களுக்கு நன்மை.

(c) அவர்கள் தன்னைக் கொன்றதாகக் கண்டால் தனலாபம்.

113. மற்றவர்கள் விவாஹத்தைப் பார்த்தால் சுபம்.

114. தன்னையோ, இதரர்களையோ தூக்குப் போடுவதைக் கண்டால் நலம்.

115. தான் சிறையிலிருப்பதாகக் கனவுகண்டால் மிகவும் நலம். புகழ் கிடைக்கும்.

(தொடரும்.)

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

---

அடக்கமுடையவன் பொருளுக்கு ஆபத்தில்லை.

# சீதையின் சீலம்.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.

இந்நிலவுலகில் காணும் இயற்கையின் வனப்பெலாம் திரண்டுரு வெடுத்த ஒரு பெரும் அழகுநிலையமே பெண் என்று கூறுவர் பெரியோர்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்"

என்ற தமிழகத்தின் தனிப்புலவராம் வள்ளுவர் பெருமான் அருளியிருப்பதும் நோக்கத்தக்கது. பெண்ணின் பெருமை யெல்லாம் அவர் தம் நிறையுடைமையில் அமைந்துள்ளது என்பதை மறுப்பவர் ஒருவருமிலர். உலகம் போற்றும் உயரிய நூலாம் இராமகாதையில் இலங்கும் காப்பியத் தலைவியான சீதையின் சீலம் இவ்வளவினது என்று அளவிட்டுரைக்கும் ஆற்றல் படைத்திலேனாயினும், நானறிந்தமட்டில் கம்பர் கவிநலத்தில் சீதையின் சீலம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்நிலவுலகில், நிறைதவரு நீர்மையுடையராய் வாழ்ந்த பெருமக்கள் பலருள்ளும், தலைசிறந்தவராகக் கருதப்படுபவர், அருந்ததி யென்பதை அறியாதார் ஒருவருமிலர். தமிழக மக்கள் கற்புடைத் தேவியாம் அருந்ததி யம்மையை இன்னும் விண்மீனென மதித்துப் போற்றும் பெற்றி யொன்றே போதுமான சான்றாகும். இன்னும் இக்கற்பினுக்கரசியை உரையாணியாகக் கொண்டு வில்லிபோன்ற நல்லியற் புலவர் பலரும் "வசிட்டன் நல்லற மனைவியே அனையாள்" என்று தம்தம் காப்பியத் தலைவியரைப் போற்றும் முறை நாம் கண்டு மகிழ்வதற்குரியதாகும். ஆனால் கவியரசர் கம்பரோ, மற்ற புலவர்களையொப்ப "அருந்ததி யெனத்தகைய சீதை" என்று கூறியதோ டமையாது இப்புலவர்களை யெல்லாம் கடந்து நின்று இந்த அருந்ததிக்கும் மேலான சிறப்பு வாய்ந்தவளே தனது காப்பியத் தலைவியாம் சீதை யென்பதை "சீலமின்னதென்று அருந்ததிக்கு அருளிய திருவே" என்னும் செம்மை சான்ற சொற்களில் அழகாக எடுத்துரைக்கின்றார்.

நிற்க, "காந்தையருக் கணியனைய ஜானகியின் பேரழகை" கவியரசர் கம்பர் போற்றாத இடம் இராம காதையிலேயே யில்லை யென்றே கூறலாம்.

"ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லால் மதனற்கு எழுதவொண்ணாச் சீதை"

என்று கவிகூறும் கற்பனையை உற்று நோக்குங்கள். காதற் கடவுளாம் காமனும் சீதையின் உருவைச் சித்தரிக்க விரும்பி அமுதத்தையே அதற்குரிய ஓர்

பிறர்க்கெனவாழப் பிறந்தனர் மக்கள்.



வண்ணமாகக் கொண்டு, தனது தூரியக்கோலை அதனில் தோய்த்து, சித்திரம் தீட்டப் புகுந்தவன் திகைத்து, நின்ற நிலையிலேயே நிற்கின்ற காட்சியைச் சித்தரித்துக் காட்டும் கம்பரது சித்திரம் எத்துணை அழகுடையதாய்த் திகழ்கின்றது! இவ்வாறு காமனும் கண்டு கலங்கும் வண்ணம் அமைந்த தையல் இவ்வுலகத்தவளே யாயினும், அவளது உருவம் யாவர்க்கும் எழுதவொண்ணாத பெருமை வாய்ந்ததாய் அமைந்துள்ளது என்பதையும் கவியரசர் பலவிடங்களிலும் எடுத்துரைக்கின்றார். "ஓவியத் தெழுதவொண்ணா உருவத்தளாய்" அழகே உருவெடுத்தென்ன நின்ற அணங்கன்னாளை, மற்றும் பணிகளால் அவள் தன் சேடியர் அழகு செய்வதைக் கண்ட கவியரசர்,

"அமிழ்தினைச் சுவை செய்தன்ன அழகினுக்கு அழகு" செய்வாருமுண்டோ என்று அச் சேடியர் ஏழை மதிக்காக இரங்கும் பெற்றி நாம் போற்றத் தக்கதோர் இடமாகும்.

"சொன்னலங் கடந்த காமச் சுவையையோர் உருவமாக்கி
இன்னலந் தெரிய வல்லார் எழுதியது என்ன நின்றாள்"

என்று கம்பர் பிறமகளிரைப் புனைந்து கூறும் சிறப்பெல்லாம் சீதைக்கே உரியனவாகும்.

இன்னும் இவ்வுலகியலுக்கு மாறுபட்ட முறையாகப் பகைவரும் போற்றும் பான்மையுடைய மங்கையாய் இலங்கிய பெருமை நம் சீதைக்கே உரியதாகும் என்று கூறின் மிகையாகாது.

"காமரம் முரலும் பாடல் கள்ளெனக் கனிந்த இன்சொல்
தேமலர் நிறைந்த கூந்தல் தேவர்க்கும் அணங்கா மென்னத்
தாமரை யிருந்த தையல் சேடியாந் தரமு மல்லள்"

என்று சூர்ப்பநகை கூறும் செம்மை சான்ற சொற்கள் சீதையின் அழகிற்கே ஒரு வரம்பு காட்டுவதாகும்.

"ஈசனார் கண்ணின் வெந்தா னென்றுமிஃ திழுதைச் சொல்லிவ்
வாசகா றோதி யாளைக் கண்டனன் அல்ல வாற்றால்
பேசலாந் தகைமைத் தல்லாப் பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன் அவ்வுருவம் அம்மா."

என்று சூர்ப்பநகையின் கூற்றாக கம்பர் கூறும் கற்பனைக் கட்டுரை கற்றார் உளத்திற்கு களிபேருவகை தருவதாகும். காதற் கடவுளாம் காமன் தனது உருவிழந்து நலிந்த கதையை நாம் கர்ண பரம்பரையாயும், புராண பூர்வமாயும் அறிந்தது ஒருபுறமிருக்க, அவன் அநங்கனாய் அழிந்து தேய்ந்ததற்குக் கவியரசர் கூறும் காரணம் சாலவும் அழகுடையதாய் அமைந்துள்ளது. இச் சீதையின் அழகையும் அவள் தன் தலைவனாய் அமைந்த இராமனது அழகையும் மாந்தி மாந்திக் களிப்புற்ற கவியரசர், கடைசியாக,

"கருதின் மற்றினி வேறில்லை கமலத்துள் கடவுள் தானே
ஒருதிறத்து உணர நோக்கின் உருவினுக்கு உலக மூன்றில்
இருதிறத் தார்க்குஞ் செய்த வரம்பு இவ்விருவர்"

என்று கூறி அழகின் எல்லை கண்ட தலைவனும் தலைவியுமாய் இராமனும்

மனத்தை யறிந்து மணவினை பேணுக.

சீதையும் அமைந்துள்ளார் என்று போற்றி யுரைக்கின்றார். என்னே! கம்பர் கவிநலம்!!

இதுவரை "தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய்த திரு"வின் அழகினை எடுத்துரைத்தோம். இனி அவள் தன் சீலத்தை ஒன்றிரண்டு குறிப்புக்களால் எடுத்துக் காட்டி இக் கட்டுரையை முடிக்க விரைகின்றேன். மிதிலைமா நகரில் ஜனகனது காதற்றிருமகளாய் இலங்கிய காலத்தும், பின்னர் தன் தலைவனும் இராமனை மிதிலைமா நகரில் கண்டு, காதல் கொண்டு, அவனை மணந்து அயோத்தியில் வாழ்ந்த காலத்தும், சீதையின் சீலம் நலமுடையதாகவே அமைந்துள்ளது எனினும், இச் சீதையை அரசர் தம் புகழ் விழுங்கிய அரக்கர்கோன் கவர்ந்து சென்று தனது அசோக வனிதையில் சிறை வைத்திருந்த காலையில்தான் சீதையின் சீலம் அழகுடையதாய்த் திகழ்கின்றது. சிறையிருந்த செல்வியாம் சீதை, நாயகனைப் பிரிந்து உயிர்தாங்க மனமற்றவளாய் இருந்தும் தன் நாயகனை என்றைக்காவது காணலாம் என்ற ஓர் நம்பிக்கையையே கொழு கொம்பாகக் கொண்டு, அவள் உயிர் தாங்கி நின்றாள் என்பதைக் கம்பர் அழகாக எடுத்துரைக்கின்றார்.

"நாணெலாந் துறந்தேன் இல்லின் நன்மையின் நல்லார்க் கேய்ந்த
பூணெலாந் துறந்தேன் என்றன் பொருசிலை மேகந் தன்னைக்
காணலாம் என்னும் ஆசை கடுக்க என்னாவி காத்தேன்
ஏணிலா உடலி னீங்கல் எனக்கெளி தெனவுஞ் சொன்னாள்"

என்பது கம்பர் தன் கவியாய் இலங்கக் காண்கின்றோம். இந்த நிலையில் தன் நாயகனைக் காணலாம் என்ற ஆசை ஒன்றினாலேயே உயிர்தாங்கி நின்ற சீதை பின்னும் தன் தலைவன் தன்னைச் சிறையினின்றும் விடுவியாது, தானுந் தன் தலைவனைக் காணாதே உயிர்விட நேரிடினும் மீண்டும் இவ்வுலகில் பிறந்து தன் தலைவனது ஆகந் தோய்வதே தன் பெரும் பாக்கியம் யென்பதையுணர்ந்து அதற்கே இறைஞ்சி நிற்கின்றாள். அசோக வனத்தின் தன்முன் தோன்றி தனக்கு வாழ்வளித்த வள்ளலாம் அனுமனிடம்,

"ஈண்டு நானிருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டுவந்து பிறந்து தன் மேனியைத்
தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டினள் தொழுதென்று விளம்புவாய்"

என்று சொல்லும் சோகந்ததும்பிய சொற்களில் சீதையின் சீலம், பிறப்பென்னும் வரையிகந்த பெரும் பொருளாய் அமைந்துள்ளது போதரும். இவ்விடத்தே

"மன்னவனே இப்பிறப்பில் கண்டு மணந்திலனேல்
இன்னம் ஒரு பிறப்பி லானாலும் ஏழையேன்
தன்னந் தனியே யிருந்து தவமாற்றியுமுன்
பொன்னகலம் உள்ளுருகப்புல்லா தொழிவேனோ"

என்று கானகத்தே தன் காதலனைப் பிரிந்து வருந்திய சமயந்தியின் சொற்களாய் அமைந்த நைடதத்தாரது வாக்கையும் ஒப்பிட்டு நோக்குங்கள்.



இன்னும் இச் "சோகத்தளாய நங்கை" தான் அசோக வனத்தில் தன் தலைவனைப் பிரிந்து வருந்தும் தன் நிலைக்காக ஒரு சிறிதும் வருந்தாது அப்போழ்து தன் தலைவனான இராமன் அக் கானகத்தே என்ன நிலையில் எவ்வாறு வருந்துகின்றானோ என்று எண்ணி எண்ணி ஏங்கி நெஞ்சம் புண்ணாய் உலைகின்றாள்.

"அருந்து மெல்லடகு யாரிட அருந்தும் என்ற ழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்"

என்று கவியரசர் கவி கூறுந்திறன் சீதையின் சீலத்தைப் பெரிதும் விளக்குவதாகும் அன்றோ?

இம்மட்டன்று, "தேவர்க்கும் தெரிவரிய தெய்வக் கற்பின் பேர் மகளாய்" இலங்கிய சீதை அனுமனிடம்,

"அல்லல் மாக்கள் இலங்கை யதாடுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினாற் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்"

என்று கூறும் நயஞ்சான்ற மொழிகளில் சீதை தானடைந்திருக்கும் நிலையைவிட தன் தலைவனின் புகழ் குன்றாத பெரு வாழ்வையே பெரிதும் மதித்துள்ளாள் என்பது புலனாகும். என்னே! சீதையின் சீலம்!

இக் "கற்பினுக் கரசியைப், பெண்மைக் காப்பினைப் பொற்பினுக்கு அழகினைப் புகழின் வாழ்க்கையை"த் தேடிவந்து அசோக வனத்திடை அமர்க்களம் நிறுவி அரக்கர்கோனைப் போருக்கழைத்து, அவனது படையையும் படைத் தலைவரையும் அழித்து நின்ற அனுமனை இந்திரசித்தன் கட்டிச்சென்று அரக்கர்கோன் முன்புவிட அவன் இவனது வாலில் துணிசுற்றி நெய்யூற்றித் தீயேற்ற அதனால் எரியுண்ணும் நிலையில் அமைந்துள்ளனன் அனுமன் என்பதை உணர்ந்த சீதை,

"நீயே உலகுக்கு ஒரு சான்று நிற்கே தெரியும் கற்பு அதனில்
தூயேனென்னில் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல்"

என்று அக்னி தேவனை வேண்ட அவள் விரும்பியவாறே எரியும் அவனைச் சுடாதிருந்தது என்பர் கவியரசர். அனுமனும் இவ்வுண்மையை உணர்ந்தவனாய்த் தன்னைத் தீ சுடாதது கண்டு "இது ஜனகன் பாவை கற்பினால் இயன்றது" என்றே கருதி அவளது சீலத்தை நினைந்து நினைந்து மகிழ்கின்றான். இன்னும் போர் முடிந்து இராவணன் மாண்டு மடிந்தபின், இவன் தன் நிறையின் திறத்தை உலகுக்கு அறிவிக்க வேண்டி, இராமன் இவளை எரியுள் மூழ்கச் செய்தபோதும் தீயுள் பாய்ந்த நங்கையை அக்கினி தேவன் ஒன்றுஞ் செய்யாது தன் கரத்தே ஏந்திவந்து இராமனிடம் தந்து,

"என்னை இவ்வன்னை கற்பென்னும்
பொங்குவெந் தீசுடப் பொறுக்கிலாமையால் இங்கணைந்தேன்"

என்று கூறியதாய் கவியரசர் அமைத்துள்ள செம்மைசான்ற சொற்கள்

---

அடங்கா மனத்தன் அன்றே மணக்க.

"கற்புடைத் தேவியைக் கனலும் அஞ்சும்" என்னும் பண்டைத் தமிழகத்தின் பழமொழியைப் புதுக்குவதாகும்.

இன்னும் இச் சீதையின் கற்புடைமையைப் போற்றி யுரைக்கும் உரைகள் பல காவிய முழுதும் நிறைந்திருக்கின்றன. இலங்கை சென்று திரும்பிய அனுமன்,

"விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீரிலங்கை வெற்பில்
நற்பெருந்தவத்தளாய நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை யென்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களி நடம்புரியக் கண்டேன்"

என்றே இராமனிடம் சீதையின் சீலத்தைப் போற்றி யுரைக்கின்றான். மற்றும் "தென்னிலங்கைத் தெய்வமாய்" இலங்கிய மண்டோதரியும் இத் "தவஞ் செய்த தவமாம் தையலி"ன் கற்பின் திட்பத்தை யுணர்ந்தவளாய்,

"பஞ்செரி யுற்றதென்ன அரக்கர்தம் பாவையெல்லாம்
வெஞ்சின மனிதர்கொல்ல விளிந்ததே மீண்டதில்லை
அஞ்சினேன் அஞ்சினேன் இச்சீதையென் றமிழ்தாற்செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையனன்றோ"

என்று இராவணன் சீதையின் கற்பென்னும் கனலியால் அழிந்துபோகும் உண்மையினை உணர்ந்து இரங்கும் பெற்றி நலஞ்சான்றதாகும். இன்னும்,

"உண்ணாதே யுயிருண்ணா தொரு நஞ்சு
ஜனகி யெனும் பெருநஞ்சுன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர் நீயும் களப்பட்டாயே

என்று விபீடணனது சோக மொழிகளில், சீதையின் சீலம் இவ்வளவினதெனக் காணலாகும்.

ஆகவே இ"நிலம் பொறையிலதென நிமிர்ந்த கற்பின"ளாகிய சீதையின் சீலம் அவள் தன் நிறையுடைமையில் பெரிதும் விளங்குவதாகும். "காந்தையருக் கணியனைய ஜானகியார் பேரழகும் அவர் தம் கற்பும்" என்றும் நின்று நிலவும் பெருமையுடையதாய்த் திகழ அமைத்த பெருமை கவியரசர் கம்பருடையதே யாகும் என்பதே எனது தாழ்மையான கருத்தாகும் என்று கூறி என்பணி முடிக்கின்றேன்.—திருவருள் முன்னிற்க—சுபம்.

---

மனைவி:—நாதா! நான் பாட ஆரம்பிக்கும்போதெல்லாம் தாங்கள் தெரு வாசலில் போய் நின்றுவிடுகிறீர்களே! அதென்ன? தங்களுக்கு என் பாடல் பிடிக்கவில்லையா?

கணவன்:—சீ; கண்மணி; அப்படியல்ல. நான் என் மனைவியை அடிக்கவில்லை யென்று அக்கம் பக்கத்தார் அறிந்துகொள்ளட்டுமென்றே அவ்வாறு வாசலுக்குப் போய்விடுகிறேன்.

---

திறனிலார்க்கில்லை மனையறத்தின்பம்.




## வேதாந்த சூடாமணி வசனம்

(பண்டிதர். பூ. ஸ்ரீநிவாசன்.)

### அந்தக்கரணத்தின் தொழில் முதலியவை

அந்தக்கரணத்தின் தொழில்களாவன:—"செப்பிய கரண நான்கின் செயல்களா நினைத்த லந்தப் பொய்ப்பொரு டுணிதல் மானம் புரிதல் சிந்தித்தல்"

மனம்—புத்தி—அகங்காரம்—சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்கினுள் மனத்தின் தொழிலாவது சராசர வடிவமாகவுள்ள பொய்ப்பொருள்களை நினைத்தலாம்; புத்தியின் தொழில் நிச்சயித்தலாம்; அகங்காரத்தின் தொழிலாவது அபிமானங் கொள்ளுதலாம்; சித்தத்தின் தொழிலாவது சிந்தித்தலாம்.

அந்தக்கரணத்தின் அதிதேவதைகளாவன:—"திங்கள்—திப்பிய நான்முகன் கேத்திரி புராந்தகன் தே வன்றே"

மனத்திற்குச் சந்திரனும், புத்திக்குப் பிரமனும், அகங்காரத்திற்கு விஷ்ணுவும், சித்தத்திற்குச் சிவனும் அதிதேவதைகளாம்.

அந்தக்கரணத்தி னிடங்களாவன:—"இக்கரணங்கள் தானமிதயம்"

இவ்வந்தக்கரணத்துக்கு ஸ்தானம் இதயமாம். (மனத்திற்குக் கண்டமும், புத்திக்கு நெற்றியும், அகங்காரத்திற்கு சர்வாங்கமும், சித்தத்திற்கு நாபியும் ஸ்தானங்களா மென்பர்.)

### ஞானேந்திரியங்களின் தொழில் முதலியவை

தொழில்களாவன:—"ஞானேந்தியங்கட் — குய்க்குறுந் தொழிலாங் கேட்ட லுறல்காண்ட லுண்டல் மோத்தல்"

சுரோத்திரம் (செவி)—துவக்கு (மெய்)—சட்சு (கண்)—சிங்நுவை (வாய், நாக்கு)—கிராணம் (மூக்கு) என்னும் ஞானேந்திரியங்களைந்தனுள் சுரோத்திரத்தின் தொழில் கேட்டல்; துவக்குவின் தொழில் ஸ்பரிசம்; சட்சுவின் தொழில் காண்டல்; சிங்நுவையின் தொழில் சுவை யறிதல்; கிராணத்தின் தொழில் வாசனை யறிதல்.

அதிதேவதைகளாவன:—"திக்குமா ருதமோகன்மித் திரனுயர் வருணனேடு-தக்கசுவினியாந் தெய்வம்"

---

மினுக்கிடும் பூண்கள் குணத்தினு மாண்போ.

சுரோத்திரத்திற்குத் திக்கும், துவக்குவிற்கு வாயுவும், சட்சுவிற்குச் சூரியனும், சிங்நுவைக்கு வருணனும் கிராணத்திற்கு அசுவினி தேவர்களும் அதிதேவதைகளாம்.

இடங்களாவன:—"தானம்காதாதியாமே." ஞானேந்திரியங்களின் ஸ்தானங்கள் காது முதலியவையாம்.

(சுரோத்திரத்திற்குக் காதும், துவக்குவிற்கு உடம்பும், சட்சுவிற்குக் கண்ணும், சிங்நுவைக்கு நாவும், கிராணத்திற்கு மூக்கும் ஸ்தானங்களென்பர்.)

(ஞானேந்திரியங்கள் வெளியாகவுள்ள சத்தம் முதலியவற்றை யறிதல் போல தேகத்திற் குள்ளிருக்கும் சத்தம் முதலியவைகளையு மெனல்.)

"புத்தியிந் திரியங்க டாமுணரும் விடயம் புறமெனவே யுள்ளு முணர்ந்திடும்"

ஞானேந்திரியங்கள் புறத்திலேயுள்ள சத்தம் முதலிய விஷயங்களை யுணர்வது போலவே சரீரத்திற்குள்ளே யிருக்கும் சத்தம் முதலிய விஷயங்களையு முணர்வனவாம். எங்ஙனே யெனின்:

(1) சுரோத்திரம்:—"செவிகள் புதைப்பி—னுய்த்தபிராணாதி யொலி கேட்கை"

காதுகளை மூடினால் உள்ளிருக்கும் பிராணவாயு முதலியவற்றா லுண்டாம் சத்தத்தைக் கேட்கும்.

(2) துவக்கு:—அன்னாதிகளை யுண்ணும்போ தழல் குளிர்ச்சி யறிதல்."

அன்னபானாதிகளை யுண்ணும்போது உள்ளே யுண்டாகும் சீதோஷ்ணங்களை யறியும்.

(3) சட்சு:—"விழிமூடின்—மெத்துமக விருளறிதல்" கண்களை மூடிக் கொண்டால் அது உள்ளிருளையு மறியும்.

(4-5) சிங்நுவை—கிராணம்:—"உட்காராதிகளின் விளங்குசுவை கந்தமறிந்திடல் முறையே"

ஏப்பம் விடும்போதும் வாந்தி யெடுக்கும்போதும் உள்ளே தோன்றும் சுவையை சிங்நுவையும் அவற்றின் வாசனையை கிராணமு மறியும்.

## கருமேந்திரியங்களின் தொழில் முதலியன

தொழில்களாவன:—"வைத்த கருமேந்திரியத் தொழிலுரைத்தல் நடத்தல் வழங்கல்விட லானந்தித் திடுதலென வறியே"

வாக்கு—பாதம்—பாணி—பாயுரு—உபஸ்தம் என்னும் கருமேந்திரியங்களுந்தனுள் வாக்கின் தொழில் வசனித்தல்; பாதத்தின் தொழில் நடத்தல்; பாணியின் தொழில் கொடுக்கல் வாங்கல்; பாயுருவின் தொழில் மலஜலம் விடுதல்; உபஸ்தத்தின் தொழில் ஆனந்தித்தல்.

அதிதேவதைகளாவன:—"அங்கிமக பதியிரவியுடன் மிருத்யு பிரசா பதி தெய்வம்"

---

உய்யும் நெறிக்கே யுறுதுணை மனைவி.



வாக்கிற்கு அக்கினியும், பாதத்திற்கு இந்திரனும், பாணிக்கு சூரியனும், பாயுருவுக்கு யமனும், உபஸ்தத்திற்கு பிரஜாபதியும் அதிதேவதைகளாம்.

இடங்களாவன:—"வாய்முதலாங் கோளகங்கள் தானம்"

வாய் முதலிய கோளகங்களே அறிவின் ஸ்தானமாம்.

(வாக்கிற்கு வாயும், பாதத்திற்குக் காலும், பாணிக்குக் கையும், பாயுருவிற்குக் குதமும், உபஸ்தத்திற்குக் குய்யமும் ஸ்தானங்களா மென்பர்.)

## ஆத்தியாத்மிகம் முதலியன

ஆத்தியாத்மிகம்:—"இங்கிவையு ளுட்கரண மிருவகை யிந்திரிய மென்னவரு பதினன்கு மாத்தியான் மிகமாம்"

மேற்கூறியவற்றுள் அந்தக்கரணம் நான்கு—ஞானேந்திரிய மைந்து—கருமேந்திரிய மைந்து என்னும் இப்பதினான்கும் ஆத்தியாத் மிகமாம்.

ஆதிபௌதிகம்:—"தங்குமிவற் றுறுவிடய மாதிபௌதிகமாம்" மேற்கூறிய பதினான்கினால் அறியப்படும் விஷயங்களே ஆதிபௌதிகமாம்.

ஆதிதெய்விகம்:—"தருமதிதே வதையாதி தெய்விக மாம்"

அவற்றின் (அப்பதினான்கின்) அதிதேவதைகளே ஆதிதெய்விகமாம்.

## இந்திரியாதிகள் ஈசுவரனுக்காதல்

"இப்புங்கவரே யிந்திரியம் விராட்புருடற்கு"

மேலே கூறப்பட்ட இந்திரியங்களின் அதிதேவதைகளே விராட் புருஷனுக்கு இந்திரியங்களாம்.

"அது மெய் பொன் கருப்பற்கு."

அதிதேவதைகளாகிய அவ்விந்திரியங்களின் கூட்டமே இரணிய கருப்பனுக்குச் சரீரமாம்.

"அது மறைப்பா மந்தரியா மிக்கே."

அந்தச் சரீரமே அந்தரியாமிக்கு (தமோ வடிவத்தால்) ஆவரணமாம். (விராட்டு—இரணியகருப்பன்—அந்தரியாமி என்பன ஈசுவரனது நாமங்களாம். ஜீவன் வியஷ்டிஸ்தூல சரீரத்தை யபிமானிக்கும்போது விசுவனென்றும், வியஷ்டி சூட்சும சரீரத்தை யபிமானிக்கும்போது தைசதனென்றும், வியஷ்டி காரண சரீரத்தை யபிமானிக்கும்போது பிராஞ்ஞனென்றும் பெயர் பெறுவன் என்றும், அப்படியே ஈசுவரன் சமஷ்டி ஸ்தூல சரீரத்தை யபிமானிக்கும்போது விராட்டென்றும், சமஷ்டி சூட்சும சரீரத்தை யபிமானிக்கும்போது இரணியகருப்பனென்றும், சமஷ்டி காரண சரீரத்தை யபிமானிக்கும்போது அந்தரியாமி யென்றும் பெயர் பெறுவன் என்றும், (விராட்டு=நானாவித பிரகாசம் பொருந்தியவன். இரணியகருப்பன்=பொன் போன்ற பிரகாச முடையவன்) வியஷ்டி (ஒரு) சரீர அபிமானி ஜீவன், சமஷ்டி (எல்லா) சரீர அபிமானி ஈசுவரன் என்றும் முன்னர் கூறி யிருப்பதை அன்பர்கள் நினைவு கூரவேண்டும்.

---

குணமும் நாணும் குலமகட் கினிமை.

"விராட்டு (சகல பிராணிகளின் சரீரத்தில் "நான்" என்கிற அபிமானத்தை வைப்பதினால் ஈசுவரன் "வைசுவானரன்" என்று சொல்லப்படுகிறான். இந்த வைசுவானரன் அநேக விதமாய்ப் பிரகாசிக்கிறபடியால் "விராட்டு" என்று சொல்லப்படுகிறான்), ஹிரண்ய கர்ப்பன், ஈசுவரன் (சகல ஜீவர்களுக்கும் கர்மானு சாரமாய்ப் பலத்தைக் கொடுப்பதால் ஈசுவரன் என்று பெயர் வந்தது.), தத்பத லக்ஷியமான ஈசுவரசாக்ஷி இந்நான்கும் பிரஹ்மத்தின் பாதங்களாம். விசுவன், தைஜசன், பிராஞ்ஞன், துவம்பத லக்ஷியமான ஜீவசாக்ஷி இந்நான்கும் ஆத்மாவின் பாதங்களாம். ஜீவசாக்ஷிக்கே துரியமென்னும் பெயர்.

(1) சமஷ்டி ஸ்தூலப்பிரபஞ்சசகித சேதனத்துக்கு விராட்டென்று பெயர்.

(2) வியஷ்டி ஸ்தூல அபிமானிக்கு விசுவனென்று பெயர். விராட்டுக்கும் விசுவனுக்கும் உபாதி ஸ்தூலமா யிருத்தலால் விசுவன் விராட்டு ரூபமே; விராட்டினும் வேறல்லன் என்று ஸ்ரீ விசாரசாகரம் கூறுவது மீண்டறியத் தக்கதாம்.

## பிராணாதி வாயுக்கள்

பிராணன்—அபானன்—சமானன்—உதானன்—வியானன்—நாகன்—கூர்மன்—கிருகரன்—தேவதத்தன்—தனஞ்சயன் என்னும் தச (பத்து) வாயுக்களுள்,

(1) பிராணவாயு:—"நின்றிதயந் தனை யடைந்து பிராணனுசு வாச நிசுவாச மியற்றும்"

இதயத்தை இடமாகக் கொண்டுநின்று உசுவாச நிசுவாசங்களை (காற்றை உள்ளுக்கிழுத்தல் உசுவாசம்; வெளிவிடுதல் நிசுவாசம்) செய்து கொண்டிருக்கும்.

(2) அபானவாயு:—"அபானன் குதத்தினுற்றுச்—சென்றொழிய மலசலங்க ளொழித்த லுறும்"

குதத்தி லிருந்துகொண்டு மலசலங்களை வெளியில் தள்ளுதலாகிய தொழிலைச் செய்யும்.

(3) சமானவாயு:—"சமானன் சேர்ந்துந்தி யன்னரச முறுப்பனைத்தும் பகுக்கும்"

நாபியி (நாபி=கொப்பூழ்) லிருந்துகொண்டு உட்கொள்ளும் அன்னம் முதலியவற்றின் ரசத்தை எல்லா வுறுப்புக்களுக்கும் பகுக்கும்.

(4) உதானவாயு:—"என்று முதானன்களமுற் றுற்சாரம் புரியும்."

கண்டத்தை இடமாகக்கொண்டு வாந்தி செய்விக்கும்.

(5) வியானவாயு:—"இருந்தங்க மெங்கும்வியா னன் பரிக்கு முடம்பை."

சரீர முழுதும் வியாபித்துச் சரீரத்தை நிலைபெறச் செய்யும்.

---

மங்கல மனையே மாதவச் செல்வம்.



(6) நாகவாயு:—"குன்றுதலில் நாகன் சோம்பாவித்தல் விளைக்கும்."

சோம்பலையும் கொட்டாவியையு முண்டாக்கும்.

(7) கூர்மவாயு:—"கூர்மனால் விக்கலொடு தேக்குவரு மன்றே."

விக்கலும் ஏப்பமும் வருவிக்கும்.

(8) கிருகரவாயு:—"தும்மலுட னிருமல்வருங் கிருகரனால்." தும்மலையும் இருமலையும் வருவிக்கும்.

(6) தேவதத்தவாயு:—"நகுதல் சொல்லுதலாம் தேவதத்தனால்." சிரித்தலையும் பேசுதலையு முண்டாக்கும்.

(10) தனஞ்சயவாயு:—"சோகமோக மிம்மைதருந் தனஞ்சயன்."

சோகமோகங்களைத் தரும். மேலும்,

"அத் தனஞ்சயனும் வாயு இறந்தவைந்து நாள்காறு மிருந்து நனிவீங்கி-மெய்ம் முழுதும் வெடித்திடச் செய்தகலும்"

அந்தத் தனஞ்சயனென்னும் வாயுவானது இறந்த (பிராணன் நீங்கின) பின் ஐந்துநாள் வரையில் உடலிலிருந்து அவ்வுடலை மிகவும் வீங்கச் செய்து பின்பு, தலையை வெடிக்கச் செய்து பின்பு, நீங்கும்.

"நாகாதி விளம்புபுற வாயுக்கள் தாங்கருமேந் தியங்கடம்மைமிக
இயக்கலுறும் பிராணாதி வாயுத்
தாமியக்கும் விடாமல்ஞா னேந்திரியங்களையே"

நாகன் முதலிய பின்னைந்து வாயுக்கள் புற(வெளி) வாயுக்களென்று சொல்லப்படும். (உபவ்வாயுக்களென்றும் இவை அழைக்கப்படும்.) இவை கர்மேந்திரியங்களை மிகுதியும் இயங்கச் செய்யும். உள்வாயுக்களென்னும் பிராணாதி வாயுக்களைந்தும் ஞானேந்திரியங்களை விடாமல் இயங்கச் செய்யும்.

## ஜீவசம்பந்த வாயுக்கள்

(கருமேந்திரியங்களையும் ஞானேந்திரியங்களையும் இயக்கும் மேற்கூறிய வாயுக்களைத் தவிர அந்தக்கரணங்களை இயக்கும் மற்றொருவகைப்பட்ட வாயுக்களு மிருக்கின்றனவென்று கூறப்படுகின்றது. அவை உள்ளம் (ஆகாயத்தி னமிசமாய்—ஆகாயம் எல்லாவற்றிற்கு மிடங்கொடுத்துக்கொண் டிருப்பதுபோல மனம் முதலிய அந்தக்கரணங்களுக்கு இடங் கொடுத்துக்கொண் டிருப்பது உள்ளம். இதனையும் கூட்டி அந்தக்கரணங்கள் ஐந்து என்றும் கூறுவர்) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களை யியக்குவதாய் அதனால் ஜீவசம்பந்த முடையதா யிருத்தலால் ஜீவசம்பந்த வாயுக்களெனப்படும். இவையும் முற்கூறிய நாகன் முதலிய உபவாயுக்களும் பிராணவாயுவின் பிரிவுகளேயாம். அப்பிராணவாயு தன் வெவ்வேறு வகைப்பட்ட தொழில்களால் வெவ்வேறு பெயர்களுண்டாயின வாகலின் யாவும் அதனுள் ளடங்கியவையேயாம் என்பது அறியத் தக்கதாம்.)

---

ஒன்றிய காதலர் வன்றவ மில்லறம்.

"சாற்றின்வ யிரம்பன்முக் கியன்பிரபஞ் சனனந் தரியாமி
யொடுமகாப் பிராணனெனும் பெயர்கொள்—காற்றிவைகள்
சீவசம் பந்தமாயேயுட் கரணங்க ளியக்கி விடும்"

வைரம்பன்—முக்கியன்—பிரபஞ்சனன்—அந்தரியாமி — மகாப் பிராணன் என்னும் இவ்வைந்து வாயுக்களும் ஜீவசம்பந்த முடையவைகளாய் அந்தக் கரணங்களை யியக்கும்.

## பஞ்சபூதங்களின் வியாபார முதலியவை

வியாபாரங்களாவன:—"மண்முத லைந்திற்கும்—பாற்றிகழும் வியாபாரம் பொறைபிண்டீ கரணம் விரகமிடங் கொடையாகும்"

பிருதிவி—அப்பு—தேயு—வாயு—ஆகாசம் என்னும் பூதங்கள் ஐந்தனுள் பிருதிவியி (நிலத்தி)ன் வியாபாரம் தாங்குதலாம். அப்புவி (நீரி)ன் வியாபாரம் திரட்டுதலாம். தேயுவி (தீயி)ன் வியாபாரம் பாகஞ் செய்தலாம். வாயுவின் வியாபாரம் சஞ்சரித்தலாம். ஆகாசத்தின் வியாபாரம் இடங்கொடுத்தலாம்.

தருமங்களாவன:—"தரும—மாற்றலுறு திண்மைநெகிழ் வழற்சிபரி வெளியாம்"

பிருதிவியின் தருமம் (தன்மை) கடினம். அப்புவின் தருமம் நெகிழ்ச்சி. தேயுவின் தருமம் அழற்சி (வெப்பம்.) வாயுவின் தருமம் பரிசம். ஆகாசத்தின் தருமம் வெளி.

அதிதேவதைகளாவன:—"அய னெடரி யரனீசன் சதாசிவன் தேவதைகள்"

பிருதிவிக்கு அயனும், அப்புவுக்கு அரியும், தேயுவிற்கு அரனும், வாயுவிற்கு மகேசுவரனும், ஆகாசத்திற்குச் சதாசிவனும் அதிதேவதைகளாம்.

குணங்களாவன:—"கந்தமுத லாயினவே"

கந்தம் (வாசனை) முதலாயின. (பிருதிவிக்குக் கந்தமும், அப்புவிற்கு ரசமும், தேயுவிற்கு உருவமும், வாயுவிற்கு பரிசமும், ஆகாசத்திற்கு சத்தமும் குணங்களாம். அவற்றுள்,

(1) ஆகாயத்திற்கு:—"ககனத்திற்கொலி யொன்றே" ஆகாயத்திற்கு ஒலி ஒன்று மாத்திரமும்,

(2) வாயுவிற்கு:—"வளிக்கிரண்டு றுடனே" அந்த சத்தத்துடன் பரிசமும் சேர்ந்து இரண்டும்,

(3) தேயுவிற்கு:—"அந்தழலுக் கொளியொடு மூன்று" சத்த பரிசங்களோடு உருவமும் சேர்ந்து மூன்றும்,

(4) அப்புவிற்கு:—"அறற்கிரதமொடு நான்கு" சப்த பரிச உருவங்களோடு ரசமும் சேர்ந்து நான்கும்,

(5) பிருதிவிக்கு:—"ஐந்து மணமொடு புவிக்கென் றறிக" சப்த பரிச ரூப ரசங்களோடு கந்தமும் சேர்ந்து, ஐந்தும் குணங்களாம்.

---

அறிவு மொழுக்கமும் அமைவுற வாழு.

# மேனாட்டு விழுச் செல்வம்

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

1. பலர் சம்பாஷிக்கக் கூடும் பொழுது பிறரைப் பேசவிடாமல் தாமே எப்பொழுதும் பேசிக்கொண் டிருப்பவர் இருவகைப்படுவர்:

   தங்கள் குரல் தொனியைக் கேட்க விரும்புபவர் ஒரு வகையர். தங்கள் குரல் தொனி இப்படியிருக்கும் என்று அறியாதவர் மற்றோர் வகையர். செஸ்டர்டன்.

2. எந்தக் காலத்திலும் பிறரால் அழிக்கப்பட்டவரினும் தம்மைத் தாமே அழித்துக் கொண்டவரே அதிகமாவர்.

   எந்தக் காலத்திலும் புயற்காற்றாலும் பூமி யதிர்ச்சியாலும் அழிந்தவற்றைவிட வீடுகளும் நகரங்களும் மனிதர் கையாலேயே அதிகமாக நாசமடைந்திருக்கின்றன. ஆவ்பரி.

3. ஆன்மா ஆளவில்லையானால் அது தோழனாயிருக்க முடியாது. அது ஆளவேண்டும் அல்லது அடிமையா யிருக்கவேண்டும். அவ்வளவே. வேறெதுவாயுமிருக்க முடியாது. ஜெரிமி டெய்லர்.

4. நீ யாருடன் வசிக்கிறாய் என்பதைச் சொல்லு. நான் நீ எத்தகையவன் என்பதைச் சொல்லிவிடுகிறேன். ஸ்பானிஷ் பழமொழி.

5. நீ சாமர்த்தியமான—மறக்க முடியாத—ஆனால் பிறர்க்குத் துன்பந்தரக் கூடிய கடிதமொன்றை எழுதிவிட்டால் அதை அனுப்பாமல் மறுநாள் வரை வைத்திரு. அப்படிச் செய்தால் அநேகமாக அது ஒருநாளுமே வெளிச் செல்லாதிருந்துவிடும். ஆவ்பரி.

6. நீ கொடுக்கச் சக்தியுடையதில் எல்லாம் உன் நண்பர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் உன்னிடம் கடன்கேட்க அவர்களுக்கு உரிமை கிடையாது. ஆவ்பரி.

7. நல்லவரோடு தோழமை கொள்; அப்படிச் செய்தால் நீ அவர்களில் ஒருவனாய்விடுவாய். ஜார்ஜ் ஹெர்பர்ட்.

8. இழிந்தோர் காதல்கொண்டால் அவர்களுக்கு இயற்கையில் இல்லாத ஒரு உயர்ந்த குணம் அவர்களிடம் தோன்றிவிடும். ஷேக்ஸ்பீயர்.

9. பணத்திற்காகவும் மணஞ் செய்யாதே; பணம் கையில் இல்லாமலும் மணஞ் செய்யாதே. ஆவ்பரி.

---

சாதகம் செய்தலே ஓதலின் பயனும்.

10. அநேகர் தம் ஐஸ்வரியத்தையும் ஆற்றலையும் நன்கு அறியாதவர் போல் காணப்படுகின்றனர். தாம் வைக்க வேண்டியதைவிட முன்னதில் அதிகமாகவும் பின்னதில் குறைவாகவும் நம்பிக்கை வைக்கின்றனர். பேக்கன்.

11. என்னிடம் "தொல்லை" என்னும் மொழியைச் சொல்ல வேண்டாம். காரியத்தை எப்படி செய்யவேண்டும், எப்படிச் செய்வது சரியாயிருக்கும் என்பதைச் சொல்லுக. என்னால் கூடுமானால் நான் அதைச் செய்து முடிப்பேன். விக்டோரியா.

12. எவ்வளவு பெருமை வாய்ந்ததாயினும் சரி—வீரச்செயல் எதையும்விட துன்பத்தைச் சகித்துக் கொள்ளும் சக்தியே மனிதனுடைய உயர் குணத்திற்குரிய சிறந்த சோதனையாகும். ஆவ்பரி.

13. மனோ தைரியத்தை இழந்துவிட்டால் மனிதன் எல்லாவற்றையும் இழந்தவனே. அவன் பிறவாமலே இருந்திருந்தால் நலமாயிருக்கும். கதே.

14. அவன் விஷயத்தில் அவசரப்பட்டு ஓர் முடிவுக்கு வந்துவிடாதே. அவன் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் உன்னால் அறிய முடியாது. உன் மங்கிய பார்வைக்கு வழுவாய்த் தோன்றுவது கடவுளின் ஒளி மிகுந்த பார்வையில் வடுவாய் மட்டுமே காணப்படலாம். அவ்வடுவும் நீ சென்றிருந்தால் சோர்ந்து தோல்வியுறக்கூடிய போர்க்களத்தில் அவன் அடைந்த வெற்றியின் பயனாகவும் இருக்கக் கூடும். பிராக்டர்.

15. நீ வெகு முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய நல்லபிப்பிராயம் ஒன்றுண்டு. உன்னுடையதே அது. ஆவ்பரி.

16. சாத்தானுடைய பந்துக்களில் ஒருவரை வீட்டுக்குக் கூட்டிச் சென்றால் போதும், குடும்பம் முழுவதுமே குடிபுகுந்துவிடும். ஆவ்பரி.

17. நீ விரும்பும் வண்ணம் உன்னை ஆக்கிக் கொள்ள உன்னால் முடியவில்லையானால், நீ விரும்பும் வண்ணம் பிறரிருக்க வேண்டுமென்று நீ எவ்வாறு எதிர்பார்க்க இயலும்? ஆக்கம்பிஸ்.

18. மனிதர் அறிய நீ விரும்பாதது எதையும் கடவுளிடம் கேட்காதே. கடவுள் அறிய நீ விரும்பாதது எதையும் மனிதனிடம் கேட்காதே.—ஸெனீக்கா.

19. ஜனங்கள் சமயத்திற்காகச் சண்டையிடுவர், வாதம் புரிவர், வசை பகர்வர், அபலாரைத் துன்புறுத்துவர், அனலிலும் இடுவர், உயிரைத் துறக்கவும் செய்வர்—சமயத்திற்காக எல்லாம் செய்வர். ஆனால், சமய வாழ்வு வாழமட்டும் செய்யார். சிலரேனும் வாழ முயலாவது வேண்டாமோ, அதுகூடக் கிடையாது. பிரிஸ்வெல்.

20. தன்னைப் பூரணமாக்க அதிகமாக முயற்சி எடுத்துக் கொள்பவனே உயர்ந்தவன். தன்னைப் பூரணமாக்குவதாக அதிகமாக உணர்பவனே ஆனந்த புருஷன். ஆவ்பரி.

21. என்னை நகைக்கச் செய்வன நம் அறியாமைகள் அல்ல. நம் அறிவுகளேயாகும். மாண்டேய்ன்.

ஐம்பொறி யவித்தோன் அரும்பெரும் புலவன்.



22. என் உத்தியோகத்தில் தவறினாலும் தவறுவேன், என்னில் மட்டும் ஒரு நாளும் தவற விரும்பேன். மாண்டேய்ன்.

23. ஒரு சிறிதும் அறியாதவொன்றைத் துவேஷிப்பது அதிகத் தீமை எதையும் உண்டுபண்ணிவிடாது. எவ்வளவாகிலும் அறிந்தவொன்றைத் துவேஷிப்பதே நமது நல்லியல்பை நாசமாக்குவதாகும்.—செஸ்டர்டன்.

24. புதிதாக நிர்மாணம் செய்வதற்காக எதிர்ப்பவனிடம் அனுதாபம் உண்டாகும். ஆனால் ராஜியின் பெயரால் எதிர்ப்பவனிடப் வெறுப்பே ஏற்படும். செஸ்டர்டன்.

25. நமது கல்வி நம்மில் ஒரு பாகமாகும். கல்வி கற்பிக்க ஒவ்வொருவரிடமும் ஒரு மாணவனாவது இருக்கவே செய்கிறான். ஆவ்பரி.

26. அநேக சந்தர்ப்பங்கள் நாம் தீமையென்று கூறுவது தவறியோ அல்லது மிதமிஞ்சியோ ஏற்பட்ட நன்மையாகும். மனோ தைரியம் மிதமிஞ்சினால் மடமையாகும். பட்சம் மிதமிஞ்சினால் பலவீனமாகும். சிக்கனம் மிஞ்சினால் லோபமாகும். ஆவ்பரி.

27. அதிகச் சொத்தோடு பிறப்பதில் பெருமை பேசிக்கொள்வதற்கு யாதொன்றும் இல்லாதது போலவே, சாமர்த்தியத்தோடு பிறப்பதிலும் பெருமை பேசிக்கொள்வதற்கு யாதொன்றுங் கிடையாது. சொத்தும் சரி, சாமர்த்தியமும் சரி, நன்றாய் உபயோகித்தால் மட்டுமே பெருமை தரும். ஆவ்பரி.

28. இம்மொழிகளைத் தவிர வேறெதையும் இளஞ்சிறார் கேட்கலாகாது:—

"உனக்கு வேண்டியதை நீயே சிருஷ்டித்துக் கொள்ளலாம். நீ பட்டினி யிருப்பதும் இல்லாததும் உன் முயற்சியையே பொறுத்ததாகும்" மெல்போர்ன்.

29. ஒருவார வேலையைவிட ஒருநாள் சஞ்சலமே அதிகத் தளர்ச்சியைத் தரும். சஞ்சலம் நமதுடம்பு முழுவதையும் தலைகீழாக்கிவிடும். வேலை அதை ஆரோக்கியமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கும். ஆவ்பரி.

30. என் அறிவு வளையவோ குனியவோ ஆக்கப்பட்டதன்று. அவற்றிற்கு ஏற்பட்டவை என் முழங்கால்களே. மாண்டேய்ன்.

31. அநேகர் தங்கள் காலத்தில் அதிக பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். லாபுரூயர்.

32. ஒருவன் தன் ஒளியில் தான் நிற்கும்பொழுது உண்டாக்கும் நிழலே அவன் வாழ்வில் அதிக இருளுடையதாகும். ஆவ்பரி.

33. நீ விரும்பியவண்ணம் ஆவாய். உண்மையாக நாம் எதுவாக விரும்புகிறோமோ அதுவேயாக நாம் ஆகிவிடுவோம். அவ்வளவு வன்மை பெற்றது நம் மனவுறுதி. அதுவும் ஆண்டவன் இச்சையோடு சேர்ந்துவிட்டால். ரிக்டர்.

இரக்கமிருப்பின் இகல்வினையில்லை.

34. இன்பங்களைப்பெற முயல்வதினும் இலட்சியங்களைப் பெருக்க முயல்வதே நலம். ஆவ்பரி.

35. தன் சக்தி எவ்வளவு உயர்ந்ததாயும் எவ்வளவு அளவொத்ததாயும் அபிவிருத்தியடைய முடியுமோ அவ்வளவு அபிவிருத்தியும் அடைவதே ஒவ்வொருவனுடைய இலட்சியமா யிருக்கவேண்டும். ஹம்போல்ட்.

36. நீ அடைந்துள்ள பாக்கியங்கள் அனைத்தையும் அனுபவிக்க முயல்க. அப்பொழுது ஒரு சமயம் அவை நீ நினைத்ததைவிட அதிகமா யிருக்கத் தெரிந்து கொள்வாய். ஆவ்பரி.

37. சுமுகமா யிருத்தல் என்பது விலையின்றிக் கிடைக்கும். ஆனால் அதைக் கொண்டு அனைத்தையும் வாங்க முடியும். மான்டேகு.

38. பிறர்க்குச் சந்தோஷம் பிறப்பிக்கவுள்ள ஆசையுடைமை பிறர்க்குச் சந்தோஷம் பிறப்பிக்குஞ் செயலில் செம்பாதி செய்து முடித்து விட்டதாகும். செஸ்டர் பீல்டு.

39. ஆடம்பரம் அதிகச் செலவு தேவையுள்ளதாகும். ஒரு தீய வழக்கத்தால் செலவாகும் பணம் இருகுழந்தைகளை வளர்க்கப் போதுமானதா யிருக்கும். பிராங்க்லின்

40. நம்பிக்கை பூரணமாய் இருக்கவேண்டும். ஆனால் அது குருட்டுத்தனமானதாய் இருக்கக் கூடாது. ஆவ்பரி.

41. "செல்வம்"—அதை உன் அறிவில் வைத்திரு. அன்பில் வைத்திராதே. ஸ்விட்.

42. அநேகர் தாம் இருந்ததைவிட அதிகநாள் வாழ்ந்திருக்கலாம். சீக்கிரம் இறந்தற்குக் காரணம் அவர்களுடைய அகம்பாவமும் கவலையுமே யாகும். பூவாங்.

43. அறியாமை ஆண்டவன் சாபம். அறிவு அமரருலகு அடைவிக்கும் சிறகு. ஷேக்ஸ்பியர்.

44. கல்வி எதற்காக?-மனிதனை நல்ல தொழிலாளி ஆக்குவதற்கே. ஆவ்பரி.

45. நூலை உண்டாக்கியவருடைய ஆன்மாவைப் போலவே நூலும் உயிராற்றல் உடையதாகும். மில்டன்.

46. நாம் வழக்கமாய் எப்பொழுதும் நல்ல உணர்ச்சிகளோடும் அறிவான எண்ணங்களோடும் இருப்பது நம் ஆனந்தத்திற்கும் கடமைக்கும் வெகு முக்கியமானதாகும். மார்லி.

47. குற்றங்கள் பிறக்கும் இடங்களில் முக்கியமானவை குடியும் அறியாமையுமே. ஆவ்பரி.

சீற்ற மவிப்பது செந்தண் மொழியே.



48. சால்பின் குணங்கள் எவை? குறையாப் பொறுமை; சந்தர்ப்பங்களைச் சீர்தூக்கும் சிந்தை; தவறான செய்கைகளைப் பலமாய்க் கண்டனம் செய்யும் பான்மை; ஆனால் தவறியவர்களிடம் தயை யுடைமை. மாதியூ அர்னால்டு.

49. கார்காலத்திற்குப் பின் கோடைகாலம்; இரவுக்குப்பின் பகல். புயலுக்குப் பின் சாந்தம். ஆக்கம்பிஸ்.

50. இரவில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அநேக சமயங்களில் காலையில் எல்லாம் சரிப்பட்டுப் போகும். ஆவ்பரி.

51. நூல் கற்பவன்—அவன் எந்தத்தேசத்திலும் இருப்பான்; எல்லாக் காலங்களிலும் வாழ்வான், அவனுக்காகவே உலகமும் ஆக்கப்பட்டுள்ளது. ஹெர்ஷல்.

52. சொந்தக்காரியம் பொதுக்காரியம் எல்லாவற்றையும் நியாயமாயும் சாமர்த்தியமாயும் பெருந்தன்மையாயும் செய்யக் கற்றுக்கொடுப்பதே பரிபூரணமான கல்வி யாகும். மில்டன்.

53. அறிவு தரும் கல்வியிலும் அறியாமைக்கே செலவு அதிகம். ஆவ்பரி.

54. செல்வமுள்ளவனா அல்லனா என்று தீர்மானிப்பது எது? தேடுவது எது என்பதன்று; செலவு செய்வது எது என்பதேயாகும். ஒருஜானி.

55. மதுபானம்—இப்போது அறிவுள்ளவன்; சிறிது போதில் முட்டாள்; பின்னர் விலங்கு என்று கூறுகிறார் ஷேக்ஸ்பியர். ஆனால் இங்ஙனம் கூறுவது விலங்கிற்கு இழிவு கற்பிப்பதாகும். ஆவ்பரி.

56. நான் அதிகமாய் அஞ்சுவது அச்சத்தையே. துன்பப்பட அஞ்சுபவன் துன்பப்பட்டாய் விட்டது, அவன் அஞ்சுவதே காரணம். மாண்டேய்ன்.

57. வாழ்வு யோசிப்பவனுக்கு இன்ப நாடகம்; உணர்பவனுக்குத் துன்ப நாடகம். வால்போல்.

58. செல்வம் சன்மார்க்கத்தில் அடையப்படவில்லை என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆதலால் உண்மை யாதெனில் வறுமையும் சன்மார்க்கத்தில் அடையப்படுவது அபூர்வம் என்பதே. ஆவ்பரி

59. வறிஞர் என்பவர் கொஞ்சமாக உடையவர் அல்லர்; அதிகமாக விரும்புபவரே யாவர். ஆவ்பரி.

60. ஒரு பொழுதும் தவறு செய்யாதவன் ஒன்றும் செய்யமாட்டான். ஆவ்பரி.

யோகமும் பணியும் ஒன்றிடின் நன்று.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியன், M. A.)

(465-ம் பக்கத் தொடர்ச்சி)

பிளேட்டோவின் முக்கிய தத்துவம் யாதென ஆலோசிப்போம். இவ்வுலகத்தில் மானிடராய்ப் பிறப்போர் எதை எல்லாவற்றிலும் மேலானதாகக் கொண்டாடி அடைய விரும்புகிறார்கள்? பொதுவாக இன்பம் அல்லது சுகம் எனலாம். ஆனால் சுகம் நன்மை தீமை இரண்டையும் பயக்கும் தன்மையது என்று எல்லோரு மறிந்த விஷயம். சிற்றின்பத்தில் ஈடுபட்டிருப்போர் சொல்லொணுத் துயரடைவது கண்கூடு. அன்றியும் துக்கமின்றிச் சுகமும் சுகமின்றித் துக்கமும் இருப்பதில்லை. சுகத்தை அறியத் துக்கத்தை முதலில் அறிந்திருக்க வேண்டும். வெய்யிலின் அருமை மழை பொழியும்போதும் மழையின் அருமை கோடை வெப்பத்திலும் தெரியுமல்லவா? சுகம் மாத்திர மிருந்தால் போதாது. அதை மிதமாக அனுபவிக்க புத்தியும் இருக்க வேண்டும். புத்தி யில்லாவிட்டால் சுகமாகக் கருதப்படும் எந்த விஷயமும் நம்மைத் துன்பக் கடலில் ஆழ்த்தவல்லதென்பது திண்ணம். மதியீனன் கையில் எது அகப்பட்டாலும் சீக்கிரத்தில் துயரத்திற் குள்ளாவான். ஆகையால் புத்தி அவசியம் இருத்தல் வேண்டும்.

ஆயின் புத்திதான் பிரதானம், சுகம் அவசியமில்லை என்று சொல்லக் கூடுமா? புத்தி துயரத்தோடு கூடியதாக இருந்தால் மனிதர் அதை விரும்பார். பிளேட்டோவிற்கு சிற்சில சமயங்களில் சுகதுக்கக் கலப்பற்ற புத்தியையே மனிதர் விரும்ப வேண்டுமென்ற அபிப்பிராயம் இருந்ததாகத் தோன்றுகிறது. ஆனால் அப்படிப்பட்ட ஞானத்தை விரும்பும் மனிதர் வெகுசிலரே யென்றும் பிளேட்டோ அறிந்திருந்தார். விருப்பம் என்னும் பதத்திற்குத் தாத்பரியமே, விரும்பும் பொருளினால் சுகமடைய உத்தேசம் என்பதல்லவா? ஆகவே ஞானம் சுகம் இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும். சுகமென்பது அனேக பொருள்களைக் குறிக்கும். சிற்றின்பத்தை விரும்புவர் அடையும் சுகம் வேறு. ஞானிகள் கல்விக் கடலின் அக் கரையைக் கண்டு களிக்கும் சுகம் வேறு. சித்தம் தவறியவன், உலகத்திற்குத் தானே அரசன், ஏனைய ஜனங்கள் தன் சொற்படி நடக்க வேண்டும் என்று நினைத்து அடையும் சுகம் வேறு. எந்தச் சுகம் எல்லோராலும் விரும்பப்பட வேண்டியது? இதற்குப் பிளேட்டோ உலகத்தையும் சுக துக்கத்தையும் நன்கறிந்த நிபுணர்களின் அபிப்பிராயத்தின்படி நடக்க வேண்டுமென்றார். மூடனும் சிற்றின்பத்தில் புத்தியைச் செலுத்துபவனும் இந்திரியங்களை அடக்கி ஆள்வதின் சுகத்தை யறிந்திலர். ஆனால் ஞானியோ, சிற்றின்பம் பேரின்பம், இவ் விரண்டின் தன்மையை அறிந்து சிற்றின்ப வாழ்க்கையைத் தவிர்த்து முக்திபெறும் முறைகளை அனுசரித்துப் பேரின்

அன்பும் அறமுமே அமைதியாக்கும்.



பத்தை அடைகிறான். இதுவே நிரந்தர சுகம். சிற்றின்ப சுகம் துன்பத்துடன் கலந்தது. ஆகையால் ஞானத்தோடு கலந்த இன்பமே இன்பம். அது தேகத்தால் உண்டாகாமல் மனத்தால் அடையவேண்டியது.

ஆனால் ஒரு விஷயம். நாமெல்லோரும் ஞானிகளல்ல. ஞானிகளுக்கு யுக்தமாகத் தோன்றுவது ஏனையோருக்கு அயுக்தமாகத் தென்படலாம். சுகம் இன்னதென்று ஞானிகளுக்குத் தோன்றுவதற்கு முற்றும் மாறாக மற்றவருக்குத் தோன்றுவதால் போபிஸ்ட்கள் சொன்னபடி அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறு நடக்கலாமென்று ஆகிவிடுகிறது. இதற்குச் சாமாதானமாக பிளேட்டோ நம் மனத்திற்கு எது சுகமாகத் தோன்றினாலும் சன்மார்க்கத்தையே மேலானதாகக் கருதுவது முக்கிய கடமை என்றார். ஞானிகளுக்கும் நிபுணர்களுக்கும் எது யுக்தமென்று தோன்றுகிறதோ அதை மற்றோரும் அடைய விரும்ப வேண்டும். ஆகையால் இக் கடமை சுகத்தைவிட மேலானதென்று ஏற்படுகிறது. இக் கடமையினால் நமக்கு நன்மை ஏற்படுகிறது. யாருக்கு நன்மை? ஞானிகளுக்கும் உலகத்தை நன்கறிந்த பெரியோருக்கும், இந் நன்மை யென்பது என்ன? பொதுவாக நீதி (*Justice*) யென்று சொல்லலாம். நீதி வழுவாமல் வாழும் மாந்தர் உலகத்தில் மேன்மை யடைவார்கள் என்பது எல்லோருடைய கொள்கை. இது காரணம்பற்றியே நியாய முறைகளைச் சிறுவர்களுக்குப் பெரியோர் போதிக்கின்றனர். இம்மையிலும் மறுமையிலும் மேன்மை யடையச் செய்வது நீதி.

ஆனால் சிற்சில இடங்களில் அநீதியாக நடக்கும் மானிடர் மேன்மை பெற்றிருப்பதையும் நியாய முறையை யனுசரிப்போர் தாழ்ந்த நிலையி லிருப்பதையும் பார்க்கிறோமே. அக்கிரமத் தொழில்களைச் செய்வோர் தழைத்து ஓங்குகின்றனர். தெய்வ பக்தியுடன் நடக்கும் மனிதர் துன்பத்திற் குள்ளாகிறார்கள். ஆயினும், பிளேட்டோ நியாயமே நமக்கு இகத்திலும் பாத்திலும் சுகமனுபவிக்கச் செய்யும் என்றார். பாபச் செயல்களை யுடையவன் மேம்பட்டிருப்பினும் அவனுடைய மனமே அவனைப் பொசுக்கும். நியாயத்தைக் கடைப்பிடித்திருப்பவன் அடையும் துன்பமே குறைவற்ற இன்பம்.

ஒரு ராஜ்யத்தில் நியாயமென்பதென்ன? தேசவாசிகள் சண்டை சச்சரவு இல்லாமல் ஒருவர் பொருளை யொருவர் அபகரிக்காமல் வாழ்வதே நியாய முறை. அப்படி தேசம் ஒழுங்காக நடப்பதற்கு, ஜனங்களுக்குள் எவர் எதைச் செய்யவேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். அதற்குப் பிளேட்டோ, தேசவாசிகளை தொழிலாளர், போர் வீரர், ராஜ்யத்தை நடத்துபவர் என மூன்று வருணத்தாராகப் பிரித்தார். தொழிலாளர் என்போர் மற்றவரிட்ட ஊழியங்களைச் செய்யவும் அவர்கள் உண்ண உடுக்க சாமக்கிரியைகளைத் தயாரிக்கவும் வேண்டும். அவர்களுடைய முக்கிய குணங்கள் அமைதியும் கீழ்ப்படிதலும், போர் வீரருக்குத் தேசத்தினுள்ளே கலகங்களின்றிப் பார்த்துக் கொள்வதும் வெளியி லிருந்து சண்டைக்கு வருவோரை எதிர்ப்பதும் தொழில். அவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய குணம் தைரியம். ராஜ்யத்தை நடத்துபவருக்கு புத்தியே பிரதானம். ஏனெனில் தேசீய விஷயங்களைச் செவ்வனே நடத்த புத்திசாலிகளே அவசியம். நியாயம், இம்மூன்று வகுப்பினரும் தத்தம் அனுஷ்டானங்களைக் குறைவறச் செய்துவிடின், தேசத்தில் தலையெடுத்து நிற்கும். ஒவ்வோர் அங்கமும் தன்வரையில் ஒழுங்காக இருப்பின் தேசம் மேன்மை பெறும்.

நமது தேகம் ஒரு ராஜ்யத்தைப் போன்றது. தேகத்திலும் மூன்றுவித குணங்க ளிருக்கின்றன. நமது தேச தத்துவ ஞானிகள் சத்துவ ரஜ தமோ குணங்க ளென்று பிரித்தது போலவே பிளேடோவும் மூன்றுவகை குணங்களாகப் பிரித்திருக்கிறார். விஷயேச்சைகள் தமோ குணத்தையும், பகுத்தறிவு சத்துவ குணத்தையும் குறிக்கின்றன. இவ் விரண்டிற்கும் மத்தியில், அதாவது, சத்துவ குணத்திற்குக் கீழ்ப்படிந்தும் தமோ குணத்திற்கு மேற்பட்டுமிருப்பது ரஜஸ். இதைப் பிளேடோ ஒருவித சக்தியாகப் பாவிக்கிறார். இச் சக்தியை ஜாக்கிரதையாகவும் முன் யோசனையுடனும் உபயோகித்தால் தமோ குணங்களை அடக்கி ஆள்வதோடு மனத்திற்கும் கீழ்ப்படிந்த தொண்டனாக இருந்துவரும், இம் மூன்று குணங்களும் சம்பந்தமற் றிருக்கின்றன. எல்லாம் ஒற்றுமையுட னிருப்பின் அனேக சந்தர்ப்பங்களில் மனத்திற்கும் தமோ குணங்களுக்கும் உண்டாகும் போர் நடக்காது. மனமே நமது ஆத்மா, தமோ குணங்களின் ஏவலாட்கள் நமது இந்திரியங்கள். தமோ குணங்களின் இருப்பிடம் மார்பு. சத்துவ குணங்களின் இருப்பிடம் தலை. ரஜோ குணத்தின் இருப்பிடம் கழுத்துக் கருகாமையில்.

இம் மூன்றும் முற்றிலும் சம்பந்தமற் றிருக்கின்றன வென்பதில்லை. சிருஷ்டியிலேயே தமோகுணங்கள் சத்துவத்திற்குக் கீழ்ப்படிந் திருக்கவேண்டிய ஏற்பாடு இருக்கிறது. நமது தேகம் ஆத்மாவிற்காகத்தான் இயற்றப்பட்டது. தேகம் ஆத்மாவின் நிலயம். இதற்கு உபமானமாகத் தற்காலத்தில் புகை வண்டியைச் சொல்லலாம். நீராவியானது மேலெழும்படியான வஸ்து. அதைத் தடுக்கப் பாரமான வண்டி யொன்று இருக்கிறது. ஆனால் நீராவியின் சக்தி எப்படியாவது பிரயோகிக்கப்பட வேண்டும். ஆகையால் வண்டி நகருகிறது. ஒழுங்காகச் செல்வதற்காகத் தண்டவாளங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கு நீராவியே தமோ குணம். வண்டியே ரஜஸ். தண்டவாளமே சத்துவ குணம்.

பிளேடாவின் உபமானம் கொண்டாடத் தக்கது. நம் தேகம், இரண்டு இறக்கையுள்ள குதிரைகள் பூட்டிய ரதத்தைப் போன்றது. ஓர் அசுவம் சத்துவ குணத்தைக் குறிக்கின்றது. இது எப்போதும் வான் நோக்கிக் கிளம்ப முயல்கின்றது. மற்றொன்று தமோ குணத்தைக் குறிக்கிறது. இது சதா மண்ணிலேயே யிருக்க முயல்கின்றது. மனம் பரலோகத்தையும் அதன் திவ்ய ஸ்வரூபத்தையுமே நினைத்துக்கொண் டிருக்கிறது. தேகம் உலகத்தையும் அதன் இன்பங்களையுமே மதிக்கின்றது. ராஜ்யத்தில் மூன்று ஜாதியாரும் ஒழுங்காக நடப்பதற்கு ஒற்றுமை இருக்க வேண்டியதுபோலவே ரதமும் ஒழுங்காகச் செல்வதற்கு மனத்திற்குத் தேகம் கீழ்ப்படிந்ததாக இருக்க வேண்டும். தனக்குள் அமைதி யேற்பட்டிருக்கும் மனிதனே செய்வதை யெல்லாம் யோசித்தும் நியாயமாகவும் செய்வான். இந்தச் செயல்களோடு கூடினதும் இவைகளைத் தூண்டுவதுமே நியாயம். மனிதன் யுக்தமான முறைகளை அனுசரிப்பதன் காரணம் உதாரகுணமே. மிருகங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. உதாரகுணமே மனத்திற்கு வலிமை. அது இல்லாத மனம் வியாதியுள்ள தென்றே சொல்லவேண்டும். அக்கிரமாதிகளைச் செய்பவன் தேகம் அமைதியற்றது. அவன் தன்னைப்போல் ஸ்வதந்திரமுள்ளவனில்லை யென்று நினைத்தாலும் அவனிலும் அடிமை யொருவருமில்லை. அவ

குடிகளைப் பார்த்து கோலை மதி.



னுடைய இந்திரியங்களுக்கும் அவன் அடிமை யாவதால், நீதியையே அனுசரிப்பவன் உலகத்தில் கஷ்டப்பட்டாலும் அவனைவிட அதிக சந்தோஷமுள்ளவனாகக் கருதவேண்டும். பாபத் தொழிலைச் செய்பவன் ஒரு காலத்தில் துன்பமடைந்தே தீருவான்.

பிளேடோ எழுதிய நூல்களில் முக்கியமானது 'ரிபப்ளிக்' (Republic) அல்லது 'குடியாசு' என்பது. அதில் ராஜ்யம் எப்படி நடக்க வேண்டுமென்று விவரித் திருக்கிறார். ஜனங்கள் பொதுநலத்திற்காகவே பாடுபடவேண்டும். சுயநல மென்பதே யிருத்தல் கூடாது. மனிதனுக்கு ராஜ்ய மன்னியில் வேறெதிலும் கருத்து செல்லலாகாது. அவன் ஸ்வதந்திரத்தை ராஜ்யத்தினிடம் இழந்து விடவேண்டும். மனிதனுக்கு ஸ்வதந்திரமே கிடையாது. அவனுக்கு ஸ்வதந்திர மிருப்பது அபாயகரம். ஏனெனில் சத்து அசத்து இவைகளைப் பரிசோதிக்கும் பகுத்தறிவு இருக்கு மென்பதிற்கில்லை. ராஜ்யமே அவனுக்கு நயத்தாலும் பயத்தாலும் நன்னெறியைக் காட்டும். குடியாசு என்றபோதிலும் எல்லா மனிதரும் சம நிலையை யுள்ளவ ரல்லர். சிலர் புத்தியில் பெரியவர். இவரே ராஜ்யபாரம் வகிக்கவேண்டும். ஞானிகள் நடத்தும் ராஜ்யமே மனிதருக்கு ஹிதத்தைப் போதித்து நன்மையைச் செய்யும். அந்த ராஜ்யவாஸியே மேன்மையடைய முடியும்.

குழந்தைகள் பிறக்கும்போது அவைகளைப் பரீக்ஷித்து பலஹீனமானவைகளைத் தொலைத்துவிட வேண்டும். மற்றவைகளுக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே வெகு ஜாக்கிரதையாகக் கல்வி கற்பிக்க வேண்டும். விளையாட்டுச் சாமான்களும் ஜாக்கிரதையாகத் தேர்ந் தெடுக்கவேண்டும். இவைகளை யெல்லாம் செய்வது பெற்றோரல்ல, ராஜ்யமே. குழந்தைப் பருவத்திலிருந்து கடைசிவரையில் மனிதனின் பாதுகாப்பு ராஜ்யத்தின் பொறுப்பு. ஏனெனில் பிளேடோ, மனிதனின் அந்தரங்க நடவடிக்கைகளைக் கவனிக்காவிட்டால் பஹிரங்கமான நடவடிக்கைகளுக்குச் சட்டம் ஏற்படுத்திப் பயனில்லை யென்று அபிப்பிராயப்பட்டார்.

போர் வீரருக்கு நியமங்கள் அதிகக் கடினமானதாக இருக்கவேண்டும். அவர்கள் தமது என்று பொருள்களை வைத்திருக்கக் கூடாது. அத்தியாவசியமாக வேண்டிய வஸ்துக்கள் தவிர வேறெதுமீதும் மனம் போகக் கூடாது. வருஷத்திற்கு இவ்வளவு என்று சம்பளம் பெற்று திருப்தியடைய வேண்டும். பொன் வெள்ளி அவர்களுக்கு வேண்டியதில்லை. அவர்கள் உண்பதும் வசிப்பதும் ஒரே இடத்தில்தான். அவர்கள் குழந்தைகளைத் தகப்பன் தாய் யாரென்று தெரிவிக்காமல் ராஜ்யமே வளர்க்க வேண்டும்.

இப்படி மனிதருக்குச் சுதந்தரமும் என்னுடையது அவனுடையது என்ற வேறுபாடும் இல்லாதிருப்பின் சண்டையும் மனஸ்தாபமும் உண்டாகா வென்பது பிளேடோவின் கருத்து. வெளிநாடுகளோடு சேர்க்கை கூடியவரையில் இருக்கக்கூடாது. சங்கீதம், நாடகம் முதலியன ராஜ்யத்தின் மேற்பார்வைக்குட்பட் டிருக்கவேண்டும். புஸ்தகங்களும் கவிகளும் நிபுணர்களால் பார்வையிடப்பட்டு, மனிதருடைய நடத்தையைக் கெடுக்கக் கூடியவையாயிருந்தால் தள்ளப்படவேண்டும். கவிகள் நன்னடத்தையின் மேன்மையையும் தேவதைகளைக் குறித்துமே இருத்தல் வேண்டும். மதமும் ராஜ்யத்தின் பொறுப்பாக இருத்தல் இன்றியமையாதது. (தொடரும்.)

தாய்மொழி மதிக்கத் தன்னறிவுயரும்.




## "காசி யாத்திரைப் பலன்."

காசி க்ஷேத்திரம். கங்காநதி தீரம். ஒருவன் மனைவியோடு புண்ணிய தீர்த்த ஸ்நானத்துக்குப் போனான். அங்கு யாத்திரையாகச் செல்லும் ஒவ்வொருவரும் தங்களுக்கு இஷ்டமான பதார்த்தத்தை விட்டுவிட வேண்டும் என்பது சம்பிரதாயம். அதனால் அங்கிருந்த பிராமணர்கள் அத்தம்பதிகளை நோக்கி நீங்கள் எதை விட்டுவிடுகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு யாத்திரைவாசி சற்றே யோசனைசெய்து கூறுகிறான் :



"இதுவரைக்கும் யாரும் விடாத வஸ்துவை நான் விட்டுவிடுகிறேன்—அதுதான் விசேஷமாகும். சிறுவயதிலிருந்து என்னிடம் குடிகொண்டிருந்த மானம்—வெட்கத்தை அடியோடு விட்டுவிடுகிறேன்."

அங்கிருந்தவர்கள் எல்லாரும் அவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு மெச்சிக்கொண்டார்கள். அவனுடைய மனைவியைக் கேட்டபோது அவள் கூறுகிறாள்:

"நான் என் புருஷனையே விட்டுவிடுகிறேன். எல்லாவற்றிலும் மேலான பொருளை விட்டுவிடுவதுதானே விசேஷம்—புருஷனை விட உலகத்தில் விசேஷமான பொருள் என்ன இருக்கிறது? மானம்-வெட்கத்தை உதிர்த்துவிட்டுப் புருஷனை நீக்கிவிடுவதே மேல் என்று நினைக்கிறேன்."

பாவம் புருஷன் என்ன செய்வான்?—காசியாத்திரையின் பலனே பலன்!

⁂

புருஷன்:—"கேட்கிறவர்களுக்கெல்லாம் சோறு போடுகிறாயே, அரிசி சும்மாவருகிறது என்று எண்ணிக் கொண்டாயா?"

மனைவி:—"சாப்பாடு நன்றாயில்லை என்று சொல்லாதவர்களைக் கண்டால் எனக்கு அளவு கடந்த சந்தோஷம். அதனால் போடுகிறேன்."

⁂

நடிகன்:—"விருந்துச் சீனில் எனக்கு உண்மையாகச் சாப்பாடும் பலகாரமும் கொடுக்கவேணும்."

மானேஜர்:—"ஆனால் மரணச் சீனில் உண்மையாக விஷங் கொடுக்கவேணும் என்றுங் கேட்கிறாயா?"

---

பஞ்சாயத்தே பண்புறு மன்றம்.



## "புருஷன் இருக்க முண்டை"

பொம்மன் ஓடோடியும் வந்து திம்மனைக் கண்டு "அடே! பாவீ! உனக்கும் இந்தக் கதி நேரலாமா? உன் பெண்டாட்டி தாலி அறுத்து—முண்டையாகிவிட்டாளாமே" என்று அழுதான். திம்மனுக்குத் தலை கிறு கிறுத்துவிட்டது. அந்த வார்த்தை இடிவிழுந்த மாதிரியாகிவிட்டது. உடனே கோவென்று அலறித் தலையிலடித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினான். இவனது பரிதாபத்தைக் கண்ட வழிப்போக்கர் ஒருவர் அவனை அழைத்து உண்மை தெரிந்துகொண்டு கூறுகிறார்: "அடே மடையா? நீ இருக்கும்போது உன் பெண்டாட்டி எப்படி முண்டையாவாள் என்ற அறிவு உனக்கு ஏன் இல்லாமல் போய் விட்டது? இது தெரியவேண்டாமா?"



திம்மன்:—"நீர் ஒரு பெரிய பைத்தியக்காரர்! உமக்கென்ன தெரியும்? நான் இருக்கும்போதே—என் கண்ணெதிரில் எத்தனை பேர் முண்டைகளாக வில்லை? என் பெண்டாட்டியும் ஏன் முண்டையாயிருக்கக் கூடாது?"

⁂

## "வாலாட்டுகிறது."



சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் ஓயாமல் டிக் டக் என்று அடித்துக்கொண்டிருந்தது பையனுக்கு வெகு ஆச்சரியமாகிவிட்டது. இதனால் அவன் சதா அதையே கூர்மையாகப் பார்ப்பது வழக்கம். இவ்விதம் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் தாயார் வந்து கேட்கிறாள்.

"என்ன கண்ணே! கடிகாரம் நடக்கிறதா?"

பையன்:—(அவள் முகத்தை நோக்கி) இல்லை அம்மா! அது சும்மா நின்றுகொண்டுதான் இருக்கிறது. ஆனால் வாலாட்டுகிறது."

⁂

கடைக்காரன்:—"காசு கொடுக்காமல் மாம்பழம் எடுத்துக்கொண்டு போகிறாயே, ஏன்?"

ஒருவன்:—"ஏழு பழம் ஆறணாவானால் ஆறு பழம் ஐந்தணா ஆகிறது. ஐந்து பழம் நாலணா. நாலு பழம் மூன்றணா, மூன்று இரண்டணா, இரண்டு பழம் ஒரு அணா. ஒரு பழம் சும்மா கிடைக்கிறது. அதனால்தான் எடுத்துக் கொண்டு போகிறேன்."

---

தன் மனையிருக்கப் பிறர் மனை எருதல் கூடாது அதனால் எத்தனை உயிர்கள் நாசமாகிவிட்டன?

## "புத்தியுள்ள தூதன்."

ஒரு பெரிய நூல் மில்லில் தொழிலாளர்கட்குக் கூலி கொடுக்கும் விஷயத்தில் ஒரு மாறுதல் செய்யப்பட்டது. அதாவது வாரத்துக் கொருமுறை சம்பளம்கொடுக்கும் வழக்கத்தை மாற்றிப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது தொழிலாளர்கட்கு அசௌகரியமாயிருந்தபடியால் எல்லாரும் சேர்ந்து மானேஜரிடம் ஒரு பிரதிநிதியை தூது அனுப்பினார்கள். நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துப் பார்த்துக் கடைசியில் ஒரு நாள் மானேஜரைக் கண்டான் பிரதிநிதி.




மானேஜர்:—"என்ன முத்தையா? எங்கே வந்தாய்?"

முத்தையன்:—"நம்ம தொழிலாளர்கள் எல்லாரும் என்னைத் தங்களிடம் தூது அனுப்பினார்கள். கூலி கொடுக்கும் விஷயத்தில் தாங்கள் கொஞ்சம் தயவு காட்ட வேணும்."

மானேஜர்:—(ஆச்சரியத்தோடு) சரி! விஷயம் என்ன? என்ன செய்ய வேணும்?"

முத்தையன்:—"வேறொன்றும் இல்லை. பதினைந்து நாள் சம்பளம் ஒவ்வொரு வாரமுங் கொடுக்கத் தயவு காட்டவேணும் என்பது தான் எங்கள் கோரிக்கை."

***

திம்மன்:—"டாக்டர் ஐயா எனக்கு வியாதியாயிருக்கிறது மருந்து கொடுங்கள்."

டாக்டர்:—"என்ன வியாதி?"

திம்மன்:—"ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு தஸ் புஸ் என்று ஓட்டோட்டமாய் ஓடிவந்ததினால் ஆயாசமாயிருக்கிறது."

டாக்டர்:—"சாப்பிட்டவுடன் ஓடக்கூடாது என்று உனக்கு எத்தனை தடவை சொல்லுவது?"

திம்மன்:—"இன்றைக்குக் கட்டாயம் ஓடவேண்டி நேர்ந்தது."

டாக்டர்:—என்ன சங்கதி?"

திம்மன்:—சாப்பிட்ட பிறகு ஓட்டல்காரனுக்குக் கொடுக்கக் கையில் பணம் இல்லை. அவன் பின்னாலே துரத்தி யடித்தான்—நான் தலை கத்தரிக்க ஓடிவர வேண்டியதாயிற்று!"

---

சிநேகஞ் செய்து குடி கெடுக்கும் ஆசாமிகளை நீ சில நாளைக்குள் உணரலாம். அங்கொருகுத்தலும் அங்கொரு குடைச்சலுஞ் செய்து வேடிக்கைப் பார்த்து நிற்பான். அப்போதே அவனுறவை யகற்று.



## "குற்றம் என்ன."

பாலுவின் தாயார் கடைத் தெருவிலிருந்து வீட்டுக்குவந்து அவனைப் பேர் சொல்லி அழைத்தாள்.



பையன்:—"ஏன் அம்மா?"

தாயார்:—"நீ நேற்றுப் பள்ளிக்கூடத்தில் பிரம்படி வாங்கியதை ஏன் என்னிடம் சொல்லவில்லை. இப்பொழுது வாத்தியாரல்லவா அந்தச் சங்கதியைச் சொன்னார்."

பையன்:—"........................"

தயார்:—(அன்பு ததும்பும் குரலில்) "ஏன் என்னைப் பெற்ற கண்ணே!—அடி வாங்கினாய்?"

பையன்:—"நேற்று வாத்தியார் சோம்பலின் தன்மையைப் பற்றி ஒரு வியாசம் எழுதும்படி எங்கள் வகுப்புப் பிள்ளைகளைக் கேட்டார். நான் வெறுங் காகிதத்தைக் கொண்டுபோய் வைத்தேன். அதனால் அடித்தார்."

***

## "உன்னால் முடியுமா?"

காளியண்ண கவுண்டர் ஒரு கருநாடக ஆசாமி. பெரிய பணக்காரர். கோர்ட்டு விஷயமாய்ப் பட்டணத்துக்குப் போயிருந்தார். "சென்ட்ரல் ஸ்டேஷன்" மேல் மாடியில் அவருடைய வக்கீல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். கவுண்டர் ,எங்கோயோ போய்விட்டு ஸ்டேஷனுக்கு வந்தார். கவுண்டருக்கு அந்த ஸ்டேஷனைக் கண்டாலே நடுக்கம்.



எப்படி வக்கீலிடம் போவது என்று விசாரித்தார். "மின்சாரத் தூக்கி"(Lift)ல் தான் போகவேண்டும் என்று தெரிந்தார். அந்தத் தூக்கு இருக்கும் இடத்துக்குப் போனார். அங்கே இருந்த ஒரு பையன் அன்போடு கேட்கிறான்.

"என்னாங்கோ நீங்க மேலே போகணுமா?"

கவுண்டர்:—(புன்சிரிப்போடு) ஆமாடா அப்பா! ஆனால் நீ குழந்தைப் பையனாயிருக்கிறாயே! என்னை எப்படி மேலே தூக்கிக்கொண்டு போவாய்? உன்னால் முடியுமா?"

---

உலகாநுபவம் ஒரு பெரும் புத்தகம். அதில் எவனொருவன் அநுபவசாலியோ அவனிடம் ஏமாற்று முடியாத காரியம்.

## "கண் வைத்தியர்."

யாரும் திக்கில்லாத ஒரு ஸ்திரீக்குக் கண்ணோய் கண்டது. கண்கள் தெரியவில்லை. ஒரு கண் வைத்தியனை அழைத்துச் சௌக்கியம் ஆனால் முப்பது ரூபாய் கொடுக்கிறேன் என்று முடிவு செய்தாள். வைத்தியன் தினந்தோறும் வந்து மருந்து போடத் தொடங்கினான். இவளுக்குக் கண்கள் தெரியாதிருந்தமையால் அந்த வைத்தியன் நாள் தவறாமல் அவள் வீட்டிலிருந்த சாமான்களில் ஒவ்வொன்றாகக் கைவைக்கத் தொடங்கினான். இந்தச் சங்கதி அவளுக்கும் தெரிந்துவிட்டது. இப்பொழுது ஏதாவது சொன்னால் கண்களுக்கு ஆபத்து உண்டாக்கினால் என்ன செய்கிறது என்று அஞ்சி வாயை மூடிக்கொண்டிருந்தாள். கண்கள் சௌக்கியம் பெற்றன. வைத்தியன் பேசியபடி பணங்கேட்டான். என் கண்கள் சௌக்கியம் ஆகவில்லை. நான் ஒன்றும் கொடுக்கமாட்டேன் என்றாள். வைத்தியன் ராஜாவிடம் பிராது கொடுத்தான்.



ராஜா:—"ஏன் வைத்தியருக்குப் பணம் கொடுக்கமாட்டேன் என்கிறாய்?"

ஸ்திரீ:—ஸ்வாமீ என் கண்கள் என்ன சௌக்கியம் பெற்றதோ எனக்குத் தெரியவில்லை. இந்த வைத்தியம் செய்வதற்கு முன்பு வீட்டில் இருந்த சாமான்கள் எல்லாம் என் கண்களுக்கு நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தன. இப்பொழுது எனக்கு ஒரு சாமானாவது கண்ணில் படவில்லை."

ராஜா உண்மை தெரிந்து கொண்டார். வைத்தியனுக்குத் தகுந்த மரியாதை நடத்தினார்.

***

ஒரு புருஷனும் பெண்சாதியும் வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். வழியில்—சமீபத்தில் கழுதைகள் கத்தின.

புருஷன்:—"உன் பந்துக்கள் உன்னை அழைக்கிறார்கள், கேட்டாயா?"

பெண்சாதி:—"அவர்கள் எனக்கு மாமியார் வர்க்கத்தைச் சேர்ந்த பந்துக்கள். என்ன இறங்கி சங்கதி என்று விசாரித்துவிட்டு வாருங்கள்."

***

புருஷன்:—"ஆடவர், பெண்களைப் புத்தியில்லாமல் கலியாணம் செய்துகொள்ளுகிறார்கள்."

பெண்சாதி:—வாஸ்தவமான பேச்சு! பெண்கள் இன்னொருவரைக் கலியாணம் செய்துகொள்வதற்கு வகையில்லாமல் தான் ஆடவர்களையே செய்துகொள்ளுகிறார்கள்."

---

பசி என்று உன் படி ஏறி வந்தார்க்கு உன்னால் இயன்ற அளவு கொடுத்துப் பசியை யாற்றி அனுப்பு.



## "சாதுரியம்."

ஒரு பண்டாரம்—பெரிய வேஷதாரி. கடவுள் பேரால்—கோவிலின் பேரால் ஜனங்களை ஏமாற்றிக் காலக்ஷேபம் செய்பவன். ஒரு பெரிய திட்டம் போட்டான். தான் பத்தடுக்குகள் பொருந்திய கோபுரம் கட்டப்போவதாகச் சொல்லி எல்லோரிடமும் பணம் வசூல் செய்யத்தொடங்கி வயிற்றுப் பிழைப்பை நடத்திவந்தான். ஒரு நாள் ஒரு கோமுட்டி செட்டியாரைப் போய்க் கண்டான். விஷயம் தெரிவித்தான். செட்டியார் உண்மை தெரிந்துகொண்டு பதில் கூறுகிறார்:—



"ஐயா! மஹா புண்ணிய கைங்கரியம். கட்டாயம்செய்யவேண்டியது. இவ்வளவு மகத்தான காரியத்துக்கு இருபத்தைந்தும் ஐம்பதும் கொடுப்பதில் என்ன பிரயோஜனம்? கொஞ்ச காலமாவது பூமியில் பேரும் புகழும் தங்கவேண்டாமா? ஒன்பது அடுக்குகளையும் தாங்கள் கட்டி முடித்துவிட்டு என்னிடம் வாருங்கள். பத்தாவது அடுக்கை நானே கட்டி முடித்துவிடுகிறேன்."

***

குப்பன்:—"அவன்தான் உன்னை அடிக்கவில்லையே ஏன் கீழே விழுந்து புரண்டாய்?"

சுப்பன்:—"அவன் மனதில் இருந்த சங்கதியைத் தெரிந்துகொண்டு அடிப்பதற்கு முன்பே கீழே விழுந்தேன். இதைப் பார்த்து என்னை அடிக்காமல் போய்விட்டான்."

***

பையன்:—"அப்பா! வாத்தியாருக்கு என்னைக் கண்டால் அசாத்திய பிரியம்."

தகப்பன்:—" எப்படித் தெரிந்தது?"

பையன்:—"நான் போட்டிருந்த கணக்குகளின் மீதெல்லாம் கீறல் போட்டிருந்தார்."

***

தாயார்:—"நீயும் தம்பியும் என்ன விளையாடினீர்கள்?"

பையன்:—"மோட்டார் வண்டி விளையாட்டு. நான் ட்ரைவர்."

தாயார்:—அவன் வாயில் சீசாவிலிருந்து என்னமோ ஊற்றினாயே, அது என்ன?"

பையன்:—"தம்பி மோட்டார் வண்டி. அது ஓடுவதற்கு பெட்ரோல் ஊற்றினேன்."

—வி. ரா.

---

கடன்காரர்கள் வந்து தொந்தரை செய்யும் போது வரும் கோபத்திற்கு அளவேயில்லை ! பின்னும் கடன் வாங்காமலாவது இருக்கிறார்களா? அதுவும் இல்லை !!

பொங்கற் புதுநாள் அல்லது

# சங்கராந்திப் பண்டிகை.

(பண்டித-பா். பக்கிரிசுவாமி செட்டியார்.)

“புண்ணிய பூமி” எனப் புனைந்தழைக்கப்படும் நம் நாட்டிலே கொண்டாடப்படும் நோன்புகள், பண்டிகைகள் பல. அவற்றுள் சங்கராந்தி முக்கியமான தொன்று என்பதை அனைவரும் அறிவர். இந்தப் பண்டிகை ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதக் கடைசி நாளிலே தொடங்கி தை மாதம் முதல் தேதியன்று கொண்டாடப்படுகின்றது. பிற பண்டிகைகளெல்லாம் நட்சத்திரங்களையும், திதிகளையும் பற்றிவர, இப்பொங்கல் பண்டிகை மட்டும் தேதியை அனுசரித்து வருகிறது. இத்தகைய பொங்கற் புதுநாள் நிகழும் பிரமோதூத வருஷம் தைமாதம் முதல் தேதி 1931-ம் வருஷம் (ஜனவரிமாதம் 14-ந்தேதி) புதன்கிழமை யன்று வருவதால் இதைப்பற்றிய ஆதி வரலாற்றின் விவரங்களை அறிந்துகொள்ள அன்பர்கள் ஆசிப்பார்களென்பதற்கு ஐயமில்லை. ஆகவே, இதைப்பற்றி ஆராயவேண்டியது அவசியமெனக் கருதி அப்பணியிற் புகுவோம்.

## போகி பண்டிகை.

மார்கழி மாதக் கடைசிநாட் காலையில் போகிப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது. போகி யென்பது போகத்தை யுடையவன்; அதாவது சகல சௌக்கியங்களையு முடையவனெனப் பொருள் படும். தேவர்க்கதிபனான தேவேந்திரனே போகியென்பதற்குப் பொருத்தமானவன். அவனே அமரர் அனைவரும் கையுறை செலுத்தி காத்திருக்கவும், ஆரோகணிக்க ஐராவதமிருக்கவும், அனவரதமும் சப்தகன்னியர் நடனமாடிச் சூழ்ந்திருக்கவும், விரும்பியவற்றை விரும்பியாங்குதவும் கற்பகத்தரு சொந்தமாகவு முடையவன். ஆகவே போகிப்பண்டிகையென்பது போகியாகிய இந்திரனை நோக்கிக் கொண்டாடப்படும் ஒரு பெருநாளாகும். போகிப் பண்டிகை யென்பது இந்திரவிழாவெனப் பண்டைக் காலத்திலேயே நம் நாட்டில் நடைபெற்றதென்பதற்குப் பழந்தமிழ் நூல்களில் ஆதாரங்கள் பல காணக் கிடைக்கின்றன. இலக்கியப் பொருள் நிறைந்த சிலப்பதிகாரத்தே புகார் நகர (காவிரிப்பூம் பட்டின)த்தில் இந்திரவிழாக் கொண்டாடப்பட்டதாகக் கூறுகிறதும், ஆயர்பாடியில் இருந்தவர்கள் யமுனாநதி தீரத்தில் பொங்கலிட்டுப் பூஜை செய்ய, பார்த்த பரந்தாமன் அதனைத்தடுக்கவே, அதனால் வெகுண்ட தேவர்கோன் சப்த மேகங்களை ஏவ, அடாத மழை விடாது பெய்ததால் ஆயர்கள் அல்லலுறுவது கண்ட கண்ணன்,

தாய் போன்று அரிய தயவுடையவர் யாருமில்லை. சிலர் புதியவரோடு கூடி (இல்லாளோடு கூடி) தாயைக் கை கால் சலிக்க அடிக்கின்றார்கள்.



கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து அவர்களைக் களிப்பித்தாரென ஸ்ரீமத் பாகவதம் பகருகிறதுமான பண்டிகைகள் இப்போகிப் பண்டிகையையே குறிப்பிடுகின்றன.

போகிப் பண்டிகை யன்று வீடுகள் ஒவ்வொன்றிலு முள்ள பழைய மட்பாண்டங்கள், தட்டு முட்டுச் சாமான்கள் இவற்றைக் கழித்து, புதியன கொள்வர். இப்பண்டிகையானது புத்தர் காலத்திலிருந்து உண்டானதாகச் சிலர் புகல, மற்றும் சிலர் வெவ்வேறு விதமாகவும் உரைக்கின்றனர். எக்காரணங்களும் பழந்தமிழ் நூல்களில் இந்திரவிழா நிகழ்ந்ததாகக் கிடைக்கும் ஆதாரங்களுக்கும், புராண ஆராய்ச்சியினால் புலனாவதற்கும் முற்றிலும் முரண்படுகின்றன.

## சங்கராந்திப் பண்டிகை.

தேவரது இரவு தட்சணாயன மெனவும், பகல் உத்தராயண மெனவும் கூறப்படுகின்றது. உத்தராயண புண்ணியகாலம் தைமாதம் முதல் நாளிலே ஆரம்பமாகிறதாதலால் அன்றைய தினம் பொங்கலிட்டு சூரியனை ஆராதிப்பது அடைபு என்பர். இனி, மருதநில (வயலும், வயல்சேர்ந்த நிலம்) மக்கள் மார்கழி மாதக் கடைசியில்தான் தாங்கள் பன்னாள் உழுது, பல்வேறு பாடுபட்டு அதன் பயனாய்க் கிடைத்த தானியங்களை அறுவடை செய்து வயல்களினின்றும் வீட்டிற்குக் கொண்டுவந்து மனமகிழ்வர். தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த தானிய வகைகளையும், பிற உணவுப்பொருள்களையுங் கொண்டு அவை விளைவதற்கு ஆதாரமான ஆதித்த (சூரிய)னுக்குத் தைமாதம் முதலிலே படைப்பார்களெனக் கொள்வது பொருத்தமாக இருக்கும். சூரியனை ஆராதிப்பதற்குத் தக்க காரண மில்லாமலில்லை. உலகத்தில் சூரியனே கண்கண்ட கடவுள். அண்டத்துயிர் கட்கும் விளைவே ஆதாரம். விளைவுக்கு மழையே காரணம். அம்மழையின் உற்பத்திக்கு சூரியனே ஆதி பூதம். தவிரவும் பயிர்களுக்குச் சூரியனது வெம்மை முக்கியமானது. ஆகவே பயிரிடுங் குடிகள் தாங்கள் கைக்கொண்ட கிருஷித்தொழிலுக்கு அத்தியாவசியமான ஆதித்த (சூரிய)னுக்குத் தங்களுக்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு ஆராதனைசெய்து பண்டிகை கொண்டாடுகிறார்கள். சூரியனையே ஒரு காலத்தில் ஆரியர் முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டார்களென இருக்கு வேதத்தால் அறியக் கிடக்கின்றது. இக்காலத்தில் பல இடங்களில் சூரியனை நவக்கிரகங்களின் நடுநாயகமாய் வைத்து வணங்கி வரக் காணலாம்.

நிற்க, தைமாத முதல் தினமாகிய பொங்கல் நாளன்று எல்லா வீடுகளும் அலங்காரமாய் விளங்கும். இதற்கு முன்னரே வீடுகளனைத்தும் வெண் சுண்ணம் பூசப்பட்டும், பலவித வர்ணங்கள் தீட்டப் பெற்றும் திகழும். அன்று அதிகாலையில் மாதர்கள் தங்கள் மனைகளில் மாக்கோலம், செம்மண் பட்டை முதலிய சித்திரங்களால் தரையை அலங்கரிப்பார்கள். முற்றத்தில் ஒரு பகுதி சிங்காரிக்கப்பட்டு இருமருங்கிலும் வாழைக் கன்றுகள், கரும்புக் கோல், இஞ்சிச் செடி, மஞ்சள் கொத்து முதலியவை கட்டப்படும். அங்கு நிருமாணித்து வைக்கப்படும் விநாயகரின் முன்னே அதுசமயம் புதிதாகக் கிடைக்கும் நாளு

சும்மா உட்கார்திருந்தால் தூக்கம் வருகிறதென்று ஒரு புத்தகத்தை வைத்துப் படிக்கிறார்கள். அப்போதுதான் அதனுடைய மும்முரமும் அதிகமாகிறது.

விதக் காய்கறிகளை வைப்பார்கள். பின்னர் புதுப்பாண்டத்தில் பொங்கலிட்டுக் கணபதிக்குப் பூசை, நைவேத்தியம் நடைபெறும். பிறகு விரிசுடரு (சூரியனு)க்கு ஆராதனை செய்துவிட்டுத் தம்மக்களோடு மனமகிழ்ந்துண்பார்கள். பெரும்பானையில் பொங்கலிடுவதால் இதைப் 'பெரும் பொங்கல்' என்று கூறுவது முண்டு.

பொங்கலன்று சாயங்காலம் அனைவரும் ஆலயமடைந்து ஆண்டவனை வழிபட்டு வருவார்கள்; இன்றையதினம் கோயிலுக்குப் போவதென்பது பண்டு தொட்டே வந்த பழக்கமாகும். அரிய பெரிய தலங்களாகிய மதுரை, ஸ்ரீரங்கம், சிதம்பரம், முதலிய இடங்களில் பொங்கலன்று பெரும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆலவாயில் ஆண்டவன் சோமசுந்தரக் கடவுள் அருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் ஒன்றாகிய கல்யானை, கரும்பு அருந்திய உற்சவம் இப்பொழுதும் பொங்கல் தினத்தன்றுதான் நிகழ்கின்றது. அவ்வைபவத்தின் விவரம் திருவிளையாடல் புராணத்தால் தெரிந்துக் கொள்ளலாம். அதன் சாரமாவது:—"மதுரையை யாண்ட பாண்டிய மன்னன் ஒருவன், சங்கராந்திப்பண்டிகை யன்று தன்பரிவாரங்களோடு சோமசுந்தரனைச் சேவித்து வரக் கரும்புமுதலிய அன்றைய ஆராதனைப் பொருள்களோடு கோயிலுக்குள் வலம் வருகையில், வழியில் சித்தர் ஒருவர் அமர்ந்திருப்பதைப் பார்த்து பரிஜனங்கள் விலகும்படி அவரைப் பலவாறு கேட்டுக்கொண்டும், சித்தர் அசைய வில்லை. இவற்றைக்கண்ட காவலன் சினங்கொண்டவனாய். "என்ன நீர் மிக்க சக்தி வாய்ந்தவரோ? சத்தியுடையவரானால் கம்பத்திலுள்ள கல்யானை இக்கரும்பை யருந்துமாறு செய்யும் பார்க்கலாம்" என்று பரிகாசமாக வினவினான். அத்தருணமே கல்யானை தன்னிடத்தி லிருந்தபடியே தும்பிக்கையை நீட்டிப் பாண்டியன் கையிலிருந்த கரும்பைப்பற்றி யிழுத்துத் தின்றது. சித்தரும் உடனே மறைந்தார் என்பதாகும். ஆகவே இவ்வரலாற்றால் அக்காலந் தொட்டே அரசர்முதல் அனைவரும் பொங்கல் தினத்தன்று ஆலயஞ் செல்லுதலைக் கடமையாகக் கொண்டு இருந்தனர் என்பதைப் பரக்கத் தெரிந்து கொள்ளலாம்.

## மாட்டுப் பொங்கல்.

மறுநாள் மாட்டுப் பொங்கலெனும் பண்டிகை முக்கியமாய் வேளாளர்களாலும், பார்ப்பன ரொழிந்த ஏனைய வகுப்பினராலும் கொண்டாடப்படுகின்றது. மாட்டுப்பொங்கலை. 'கோபூஜை' யென்று கூறுவதுமுண்டு. "மகா சங்கராந்திக்கு அடுத்த தினமாகிய தைமாதம் இரண்டாந்தேதி சுபலட்சணமுள்ள பசுவைப் பூசித்தால் எல்லா நன்மையுமுண்டாகும். முன்னர் மாந்தாதா என்னும் சூரியகுல மன்னன் பசுக்களைப் பூஜித்து அதன்பயனாகத் தன் பகைவரை வென்று சகல பாக்கியமும் பெற்றான். அதுமுதல் தான் மாட்டுப் பொங்கலெனும் கோபூஜையைச் செய்ய முற்பட்டன" ரென பழைய புராணங்கள் கூறுகின்றன. இன்னும் பசுக்களின் பெருமையையும், அவற்றின் உற்பத்தி விசேஷத்தையும் பற்றிப் பற்பல விநோதக் கதைகளுமுண்டு. பசுவின் ஒவ்வொரு பாகத்திலும் தேவர்கள் வாசஞ் செய்வதாக சாஸ்திரம் கூறுகிறது. இவை யெவ்வாறிருப்பினும் பசு பிராணிகளில் சிறந்த தென்பதை

---

நம்மை யறியாது ரூபாய்களை எத்தனை விதமாக செலவு செய்துவிடுகிறோம்! அறிவு விருத்திக்காகப் பல நற்போதனைகளைப் புகட்டும் "ஆனந்த"னை வரவழைத்தல் ஏன் கூடாது? ஒரு வருஷத்தில் ரூபாய் ஒன்று தான்.



அனைவரும் ஒப்புக் கொள்வர். பசுவினால் பால், தயிர், நெய் முதலிய உணவுக்கு மிகவும் உபயோகமான பொருள்கள் கிடைப்பதோடு அதன் தோல், எலும்பு, கொம்பு முதலிய வஸ்துக்களும் பயன்படுகின்றன. "மன்றுள் நடம் புரியும் நாயனார்க்குத் திருமுடிமேல் விரும்பி யாடி யருளுதற்குத் தூய திருமஞ்சன மைந்தும் அளிக்கு முரிமைச் சுரபிகள்தாம்" என்ற திருத்தொண்டர் புராணச் செய்யுட்படி கோமயம், விபூதி முதலிய பஞ்சகவ்யங்கள் பசுவினாலேயே கிடைக்கின்றன. ஆகவே இத்தகைய பசுவைப் பூஜிப்பதால் குற்றமில்லை. இப்பொழுது மாட்டுப் பொங்கலன்று பசுக்களை மட்டு மன்றி மற்ற ஆடு மாடுகளையும் கொண்டாடுகிறார்கள். முதல்நாள் உலகத்திற் காதாரமான மழையை அளித்த ஆதித்தனை வழிபட்டு, மறுநாள் "ஏரினையிழுத்தும் எருவினை யளித்தும் சீரியபால் முதற்றீம்பொருள் உதவியும்" அரும் பயனளித்த ஆடு மாடுகளைத் திருந்திய வகையில் குளிப்பாட்டுதல் முதலிய சிறக்கச் செய்து உணவு நிறைய உதவி, அவை ஆனந்த மடையுமாறு பல்வேறு செய்வர். ஓடவிட்டு வேடிக்கைப் பார்ப்பர். இன்று எல்லோரும் புது ஆடைகளை யணிந்துகொண்டு கோயிலுக்குப்போய்க் கடவுளைத் தொழுவர். பிறகு தம் உறவினர், நண்பர் வீடுகளுக்குச் சென்று விசாரிப்பது வழக்கம். மாட்டுப் பொங்கலன்று வேலையாட்கள் தங்களிடம் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்து தங்கள் எஜமானர்களிட மிருந்து வெகுமதி பெற்றுப் போவார்கள்.

## கண்ணுப் பொங்கல்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுதினம் கணுவென்று பெயர். இதைக் கண்ணுப் பொங்கலென்று சொல்வதுண்டு. அன்றையதினம் ஒரு சிறு கலயத்தில் பொங்கலிட்டுப் பறவைகளுக்குப் போடுவது பழங்காலத்து வழக்கம்.

பொதுவாகச் சங்கராந்திப் பண்டிகையும் பிறவும் மேலே கூறியாங்கு கொண்டாடப்படுகின்றன. சிலாது வீடுகளில் இக்காரியங்கள் வித்தியாசப் பட்டும் நடை பெறும்.


## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.


---

கதை கேட்கவேண்டுமென்று காலக்ஷேபத்திற்குச் சென்றால் அப்போது நித்திரை வருகிறது. வீட்டிலிருக்கும்போது கண்களை எவ்வளவு இறுக்கமாக மூடிப் படுத்தாலும் நித்திரை வருவதில்லை யென்கிறார் ஒருவர்.

# காலத்தின் அருமை

(ஆசிரியர்-ப. காளியண பிள்ளை.)

காலமானது, இறந்தகாலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூவகைப்படும். ஆனால், ஈண்டைக்கு இறந்தகாலத்தைப் பற்றிய பேச்சு வேண்டுவதில்லை. வருங்காலத்தின் தொடர்பும், நிகழ்காலத்தில் அடங்கி யிருப்பினும், நிகழ்காலமே இங்கு குறிப்பிடுவது. நிகழ்காலம், என்றால் நடந்துகொண் டிருக்கும் பொழுது என்று பொருள்.

அருமை யென்றால், அரியதன்மை, எளிதாய்க் கிடையாதது, சிறப்பு, மேன்மை என்பவைகளைக் குறிக்கும். காலத்தின் அரியதன்மையையும், அதை நல்வழியில் உபயோகித்துக் கொண்டால் நாம் பயனடையலாம் என்பது பற்றியும் சுருக்கமாக எழுதி இவ் வியாசத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

காலத்தின் அருமை யுணர்ந்தவரே, மனிதப் பிறவியின் பெருமை யுணர்ந்தவர்: இகத்திலும் பரத்திலும் எல்லா நலனு மெய்துபவர்—யோகி, ஞானி. இவ்வளவேன்? சுருங்கக் கூறின், உலகமே அவர் வயப்பட்டு நிற்கு மென்பதில் ஐயமில்லை. மனிதப் பிறவியே யருமையானாலும், இப் பிறவி யடைந்து தவறிவிட்டால், புண்ணியவசத்தால் மறுபடியும், இவ்வுடல் கிடைத்தாலும், கிடைக்கும். காலமோ சென்றுவிட்டால், சென்றகாலம் எத்தனை தவமிருந்தாலும் மீண்டும் வரவே வராது! ஆனதுபற்றியே, "போனகாலம் வராது". என, ஆங்கிலத்திலும் ஒரு பழமொழி வழங்குகிறது. இன்று ஒரு வேலைசெய்யக் கிடைக்கும் காலம் நாளைகிட்டுவது அருமை. இது பற்றியே நமது "வருங்கால மறிந்து நடத்தவல்ல வள்ளுவ" ராய பெரு நாவலரும் பொது மறையாய திருக் குறளினிடத்தே,

"பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்கும் கயிறு."

"அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்."

என்று விளக்கி யுள்ளார். ஒவ்வொரு விநாடியையும் பொன்னேபோற் போற்றிப் பயன் படுத்திக் கொள்வர் அறிஞர். சிலர் வீண்காலம் போக்கித் தேசத்திற்கும், அவர் குடும்பத்திற்கும் வறுமையைத் தேடிக் கொள்ளுகிறார்கள். காலத்தின் அருமை யுணர்ந்ததாலல்லவோ மேல்நாட்டார் இன்று உலகிலேயே தீர்க்க

---

கணவன் தனித்திருக்குஞ் சமயம் பார்த்து ஒரு ரூபாய் கேட்கவேண்டுமென்று மனைவி நினைத்துக் கொள்ளுகிறாள். ஆனால் சந்தர்ப்பமே வாய்ப்பதில்லை! எந்த நண்பரேனும் ஒருவர் அவருடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே யிருக்கிறார்.



தரிசிகளாகவும், குபேரர்களாகவும் வாழ்கின்றார்கள். நாம் ஒருவேளை வயிறார உண்ண உணவுமின்றி, உடுக்கத் துணியுமின்றி, அலைகின்றோம். இளமையிற் கல், அனந்தலாடேல், பருவத்தே பயிர்செய், என்ற ஔவைப் பிராட்டியாரின் அமுத மொழிகள், காலத்தின் அருமையை யுணர்த்த எழுந்த அமுதமொழிகளன்றோ! காலத்தை யமனூர்ந்து வரும் வாகனமாகச் சொல்லலாம். அவ் வாகனமேறி யமன் நம்மைநோக்கி, இடைவிடாது வந்து கொண்டிருக்க, அந்தோ! இவ் வருமைக் காலத்தை, வீணாகச் செலவழிக்கின்றனர் சிலர். என்னே! இவர்தம் மதி யிருந்தவாறு!

நம் நாட்டில், 100-க்கு 90-பேர் படிக்கத் தெரியாமலும், ஒருதொழிலும் செய்யத் தெரியாமலும், சிலர் பிச்சையேற்று உண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டும் இருக்கு மிக் காலத்தில், மடங்களிலிருக்கும் சந்நியாசிகளாவது, அல்லது வேலைநீக்கம் பெற்றிருக்கும் பிரபுக்களாவது, அவர்களுக்கு கல்விகற்பிக்க முயற்சியும், கைத்தொழில்செய்து பிழைக்க வழியும் செய்தால் நம் நாடு முன்னேற்ற மடைவதில் தடையிராது. ஒவ்வொருவரும் அவரவர் ஓய்வுகாலங்களில் குடிசைத் தொழிலாம் கைராட்டினம் ஒவ்வொரு வீடுகளிலும் சுற்றச் செய்தும், தாங்களும் முன்னணியில் நின்று வேலைசெய்தும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் போதியவளவு கல்வி கற்பித்தும் வந்தால், வருங்கால இளஞ்சிறார்கள் நம் நாட்டில் மேன்மையுற்று விளங்குவார்கள்.

ஆகவே, காலமாகிய யமன் நம்மை நெருங்கி வராமுன்னமே நம்நாடு சிறப்படைய, நாம் செய்வன செய்து, காலத்தை வீண் போக்காமல் கல்விக்கும் கைத்தொழிலுக்கும் முயற்சி செய்து, பயனடைய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பனாக.

---

பத்திராதிபர்:—"இந்த மாதிரியான குப்பை கூளங்களை யெல்லாம் எங்கள் பத்திரிகையில் வெளியிட முடியாது."

கவிராயர்:—"நீ என்ன ஐயா இவ்வளவு கர்வமாய்ப் பேசுகிறாய்? என் பாட்டுக்களை வெளியிடமுடியாது என்று திருப்பி யனுப்பியவர் நீர் ஒருவர் மாத்திரமில்லை; இதுவரை அநேக பத்திரிகாசிரியர்கள் இப்படியே சொல்லி யிருக்கிறார்கள்; நீர் ஒன்றும் கர்வம் கொள்ளத் தேவை இல்லை."

***

வேடிக்கையாகக் கணவன்:—ஒரு பெரிய ஸ்டோரில் அதிகமான சாமான்களை உன் தாயாருக்காகப் பொங்கல் வெகுமதிதர வாங்குவதுபோல் நேற்றிரவு கனவு கண்டேன்.

மனைவி:—உண்மையிலா? நகைகள் விற்குமிடத்திலா வாங்கினீர்கள்?

கணவன்:—இல்லை. நான் விஷபதார்த்தங்கள் விற்கும் ஸ்டோரில் இருந்ததாக ஞாபகம்.

---

ஹரிச்சந்திர நாடகத்தைப் பார்க்க ஆவலடைகின்றனரே யொழிய, அதன்படி நடந்துகொள்வதற்கு விருப்பமடைகிறதில்லை; நாடகத்தைப் பார்த்த மறுதினமே நூறு பொய்யைக் கூறுகின்றனர்.

# கம்பர் கவிநயம்.

(பண்டிதர், ரா. திம்மப்ப ஐயர்.)

'எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்'

பெருந்தவத்தோனாகிய விஸ்வாமித்திர முனிவனது வேள்வியைத் தசரத மகாராசனது மைந்தர்களாகிய இராம லக்ஷ்மணர்கள் மிக்க சிரத்தையுடன் பரிபாலித்தார்கள் என்ற விடயத்தைக் குறித்துக் கூறுவதாகும். இப்பாசுரம், எமது நண்பர்களிலும் மாணவர்களிலும் பலபேர் இப்பாசுரத்திற்கு விரிவுரை நிகழ்த்தவேண்டுமெனப் பன்முறையுங் கேட்டுக்கொண்டனராகலின் அவர் தம் வேண்டுகோட் கிணங்கி யவ்வாறே விரிவுரை யெழுதுவான் றொடங்கி முதற்கண் பொழிப்புரைத்துப் பின்னரகலவுரை வரைவே மாயினேம்.

(பொழிப்புரை) பூமண்டலத்தை யரசாள்கின்ற தசரத சக்கரவர்த்தியினது மைந்தர்களாகிய ஸ்ரீராம லக்ஷ்மணர்கள், விசுவாமித்திரர் தேவர்கள் பொருட்டு ஆறுநாட்களில் புரிந்த (பிறரால் செய்ய) நினைத்தற்கும் செய்தற்கும் அருமையுடையதான யாகத்தை, கண்ணைக்காப்பாற்றுகின்ற இமைகள் போலக் காத்திடுவாராயினர் என்பதாம்.

'எண்ணுதற்காக் கரிது' என்ற தொடர், விஸ்வாமித்திரனது வேள்வியின் அருமையைக் குறிப்பதாகும். எண்ணுதல் மனத்தின் றொழில்—ஆக்குதல்-தேகத்தின் றொழில். இவ்விரண்டினாலும் செயலருமை கூறப்படவே, சொல்லுதலு மரிதென்ற வாக்கின் றொழிலும் பெறப்பட்டது. இங்ஙனம் பெறப்படுவதனை உபலட்சண மென்பர். உபலட்சணமாவது ஒருமொழி சொல்லா தொழிந்த தன் இனத்தையும் குறிப்பதாம். 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே' என்பது சூத்திரம். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றனுள், இத்தொடரிற் குறிக்கப்பட்ட மனம், காயம் என்ற இரண்டும் கூறுதொழிந்த வாக்கையுந் தழுவிக் கொண்டமை காண்க. செய்தலாகிய காயத்தின் றொழிலினும் சொல்லுதலாகிய வாக்கின்றொழிலினும் நினைத்தற் றொழில் மிக எளிதாயினும், இம்முனிவன் வேள்வியை நோக்க அதுவும் இயலாதென்பார் அதனை முற்கூறினார். எனவே, திரிகரணங்களாலும் புரிதற்கரிய கௌசிகமுனிவனது வேள்வியினருமை கூறப்பட்டதாயிற்று. இத்தொடரில் எண்ணுதற்கும் ஆக்குதற்கும் அரிது என இரண்டிடத்தும் விரிதற்குரிய உம்மைகள் தொக்கு வந்தமையால் இது வினைச்செவ்வெண் எனப்படும். இனி, எண்ணுதற்கு ஆக்குதற்கு அரிது என விரித்து நான்கனுருபாகிய (கு) என்பதை ஆக்கு என்பதனுடன் சேர்த்துப் பொருள் கொள்வதும்



ஒன்று ஆக்குதல் என்ற தொழிற் பெயரில், (தல்) விகுதி குன்றிப் பகுதியாகிய ஆக்கு என்பதே தொழிற் பெயராக நின்றதனால் இது முதனிலைத் தொழிற் பெயராயிற்று. இனி, எண்நுதற்கு—எட்டுப் புருவங்களை (அதாவது நான்கு முகங்களை) உடைய பிரமதேவனுக்கும் செய்தற்கரியது என்று உரை கொள்வாரு முளர். (எட்டு+நுதல்=எண்ணுதல்) பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. நுதல் என்பது நெற்றியையும் புருவத்தையும் குறிக்கும் சொல்லாம். இங்கே புருவமென்ற பொருளைக் குறித்தது. (எண்ணு+தன்+கு+ஆக்கு+அரிது) எனப் பதப்பிரிவு செய்து, (யாவராலும் சிறந்த முனிவனென) மதித்தற்குரிய தனக்கும் செய்தற்கரியதெனப் பொருள் கொண்டார் கம்பராமாயணப் பிரசாரகராகிய மோசனூர் வே. கோவிந்தராஜ ஐயங்கார். சாபானுக்கிரக சக்தி படைத்துச் சர்வவல்லமை தான் பெற்றிருப்பினும் யாகம் புரியத் தீட்சித்துக்கொண்ட பின்னர் இடையூறுகள் நிகழுநேரின் அவற்றைப் பொறுத்திடல், பிறரைக்கொண்டு காவலையைச் செய்வித்துக் கோடல் முதலியன கொள்ளவேண்டுமேயன்றிச் சிறிது வெகுண்டாலும் அவ்வேள்விப்பயன் ஒரு சிறிதும் தனக்கெய்தா தாகலின் வேள்விபுரியப் புக்க அந்நிலையில் அது தன்னாலும் செயற்கரிய தாயிற்றென்பது இப்பொருளின் நேர்ந்த கருத்தாகும்.

இனி 'இரண்டு மூன்றுநாள்' என்ற தொடரை நோக்குவோம். இரண்டாகிய மூன்று என விரிந்து ஆறென்ற பொருளைத் தந்தது. இப்பொருளில் இரண்டு மூன்றென்பது பண்புத்தொகையாம். விஸ்வாமித்திரன் ஆறுநாள் வேள்வி புரிந்தானென வான்மீகனார் முதனூலிற் குறித்துள்ளதனால் அதற்கேற்ப இவ்வாறு பொருள் கொள்ளப்பட்டது. இதனை உம்மைத்தொகையாகக்கொண்டு இரண்டும் மூன்று மாகிய ஐந்து நாளென்றும், இரண்டு அல்லது மூன்றுநாள் எனவும், இரண்டு மூன்று என்பனவற்றை எண்களைக் குறித்தனவாகக் கொள்ளாமல் சிலநாள் என்றும் பொருளமைய உரைத்தலும் உண்டு. இனி நாள் என்பதை நாளைக் குறிக்கின்ற நட்சத்திரங்களுக்கு ஆகுபெயரெனக்கொண்டு, (தன் கட்டளையினாற் பூதவுடம்புடனே சுவர்க்கலோகத்திற்குச் சென்ற திரிசங்குவேந்தனை யவமதித்த) தேவர்களைச் செருக்கடக்கக்கருதி (அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்) என்னும் ஐந்து நட்சத்திரங்களைத் தென்திசையில் விளங்கும்படி) செய்த விஸ்வாமித்திரரது என்று பொருள் கூறினும் பொருந்தும். இவ்வரலாற்றை மிதிலைக்காட்சிப் படலத்தில்,

'அரசமா தவன்நீ யாதி யைந்துநாட் டென்பால் வந்துன்
புரைவிளக் கிடுக, வென்னுக் கடவுளர்போய பின்னர்
நிரைதவன் விரைவினேகி நெடுங்கடற் கிறைவன் வைகும்
உரவிட மதனை நண்ணி யுறுதவ முஞற்றுங்காலை'

(இதன்பொருள்) (நீ சிறந்த ராஜரிஷியாவாய்; வடக்கேயுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களுள்) ஐந்து நட்சத்திரங்கள் தெற்குத்திக்கில் வந்திருந்து உனது பெருமையைத் தெரிவிக்கக்கடவன என்று சொல்லி (இந்திரன் முதலிய) தேவர்கள் புறப்பட்டுப்போன பின்பு, ஒழுங்காகிய தவத்தையுடைய கௌசிகர் விரைவாகச்சென்று பெரியகடலுக்குத் தலைவனாகிய வருணன் (திக்குப் பாலகனாகத்) தங்கப்பெற்ற வலிய மேற்குத் திசையினிடத்தை அடைந்து மிக்க தவத்தைச் செய்யும் பொழுதிலே.)

என்ற செய்யுளிற் றெள்ளிதிற் காண்க. மைந்து—இளமை, வலிமை, அழகு. அதனை யுடையவர் மைந்தர். கள் விகுதிமேல் விகுதி. இவர்களுக்கு மூல மூர்த்தியான ஸ்ரீமகாவிஷ்ணு ரூபத்தில் மாத்திரமேயன்றி, இவ்வவதார விசேஷத்திலும் 'காத்தற்றொழில்' இயல்பாதல் தோன்ற 'மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்' என்றார். மன்னன் மைந்தர்கள் வேள்வியைக் காத்தனர் என இயையும். இனி 'மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்' என்ற தொடரை (மண்+நினைக்க+ஆக்கின்ற+மன்னன்+மைந்தர்கள்), எனப் பிரிவுசெய்து 'இச்சாமாத்ராப்ரபு ஸ்ருஷ்டி:' என்ற வடமொழிக் கருத்துக் கிணங்க இப்பூமியை நினைத்த மாத்திரத்தால் சிருட்டித்துக் காக்கவல்ல மகாவிஷ்ணுவாகிய மன்னனது அம்சாவதாரமாகிய இராமலக்ஷ்மணர்கள் என்று பொருள் கொள்வர் கம்பராமாயண பிரசாரகராகிய மோகனூர் வே. கோவிந்தராஜ ஐயங்கார் ஸ்வாமிகள். இரண்டு மூன்றுநாள் விண்ணவர்க்காக்கிய முனிவன் எனத் திரிசங்குவேந்தன் காரணமாக முனிவனுக்குண்டாய பெருமையைக் குறித்த கம்பநாட்டாழ்வார் இராமலக்ஷ்மணர்களது ஒப்புயர்வற்ற வாற்றலைக் கூறுதிரார். அவ்வாற்றலைக் குறித்தற்காகவே இங்ஙனம் பொருளமைய வைத்தார் என்பது ஷை ஸ்வாமிகளது கருத்தாகும். இப்பொருளில் (நினைக்க+ஆக்கின்ற=நினைக்க வாக்கின்ற (ஏனையுயிர்வழி வவ்வும்) எனப் புணரற்பாலது, அங்ஙனம் புணராமல், நினைக்காக்கின்ற என்றாயிற்று. நினைக்க என்ற வினை யெச்சத்தி னீற்றிலுள்ள ககரத்திலுள்ள அகரங்கெட்டது தொகுத்தல் விகாரம்.

இனி, 'கண்ணினைக்காக்கின்ற இமையிற் காத்தனர்' என்ற தொடர்க்கணுள்ள அரியபொருளை யாராய்வோம். இமை கண்ணைக் காத்தலாவது, புழுதி முதலியவை வந்து விழாதபடி தடுத்தலாம். மைந்தர்கள் வேள்வியைக் காத்தலாவது—அரக்கர்களால் தீங்கு நிகழாமற் காத்தலாம். மேலிமை, கீழிமை என்னுங் கண்ணிமை இரண்டில் மேலிமை பெரியது, கீழிமை சிறியது. அன்றியும் மேலிமை அசைந்து கொண்டிருப்பது, கீழிமை அசையாமலிருப்பது. மேலிமைபோலப் பெரியவனாகிய இராமன் நிலைபெயர்ந்து கௌசிகமுனி யாச்சிரமத்தின் நாற்றிசையிலும் அரக்கர்கள் வந்து இடுக்கண் புரியாவாறு சக்கரஞ்சுற்றுவது போலச் சுற்றித்திரிந்து காவல் செய்தான்; கீழிமைபோலச் சிறியவனாகிய இலக்குமணன் உள்ளே ஒருவரும் பிரவேசியா திருக்கும் பொருட்டு ஆச்சிரமத்தின் வாயிலில் அசையாது நின்றபடி காவல் செய்தான்; இவ்விதமாகக் காவல் புரியும் அவ்விருவரில் இராமன் ஆச்சிரமத்தின் புறத்திற் சுற்றிவரும் போதெல்லாம், மேலிமை கீழிமையை இமைத்திமைத்துத் தீண்டுவதுபோல, வாயிலில் இருக்கிற இலக்குவனைக் கையினால் அடிக்கடி தட்டி 'லக்ஷ்மணா ஜாக்கிரதை' என்று எச்சரித்துக்கொண்டே வந்தான் என்று இத்தொடர்க்கு விசேடவுரை காண்பர் பெரியோர்.

இக்கவியின் பின்னர், அந்தாதித் தொடரமைய,

'காத்தனர் திரிகின்ற காளை வீரரில்
மூத்தவன் முழுதுணர் முனியை முன்னி நீ
தீத்தொழி லியற்றுவ ரென்ற தீயவர்
எத்தருங் குணத்தினாய்! வருவதென் றென்றான்'

என்ற கவியைக் கம்பநாடர் பெய்துள்ளார்.



இக்கவியின் முதலடிக்கு ஆற்றுநீர்ப் பொருள்கோட் கியைய உரைகாணுமிடத்து அவ்வுரை, முற்கவியின் ஈற்றடிக்குக்கொண்ட விசேடப் பொருளுடன் முற்றும் முரண்படுகின்றதாகலான், முற்கவியிலுள்ள இறுதித்தொடரின் விசேடப் பொருள்களியாவும் வெறுங்கற்பனை மாத்திரமே யாமெனக்கூறி யொதுக்குவர் இதனை நன்காராயாத சிற்சில போலிப் புலவராயினர். கொண்டு கூட்டுப்பொருள்கோ ளிலக்கணத்தை யன்னார் கவனித்திருப்பின் இங்ஙனங் கூறச் சிறிதும் மனந்துணியார். ஆகவே அவர்தமக்கும் கருத்தொக்குமாறு விவரமாகத் தெரிக்குதும். ஓர் செய்யுட்கண் எந்த அடியிலிருந்தேனும் எப்பதத்தை யேனும் வேறெந்த அடியிலுள்ள எப்பதங்களுடனேயும் பொருட்கியையுமாறு பொருந்த வைத்துப் பொருள் காண்டலே கொண்டு கூட்டுப் பொருள்கோளின் இலக்கணமாகும். இது

'அகன்று பொருள் கிடப்பினும்அணுகிய நிலையினும்
இயன்றுபொருண் முடியத் தந்தனருரைத்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்'

என்று தொல்காப்பியனார் கூறிய மாட்டேற்றிலக்கண வமைதியை யொருவாறு ஒப்பதாகும். இனி யிப்பொருள்கோளின் தன்மையை இக்கவியில் அமைத்துக் காட்டுவாம். 'காத்தனராகிய காளைபோன்ற வீரர்களிருவரிலே திரிகின்ற மூத்தவனாகிய இராமன்' எனப் பொருள் கொண்டால் முற்கவியின் ஈற்றடி விசேடப் பொருளுடன் ஒரு சிறிதும் முரண்படாதாம். இக்கவியின் முதலடியில் இரண்டாவது சீரில் உள்ள திரிகின்ற என்ற பெயரெச்சம் இரண்டாவது அடியிலுள்ள முதற் சீரிலுள்ள மூத்தவன் என்னும் பதத்துடன் சென்று கூட்டப்படுவதால் இதுகொண்டு கூட்டுப்பொருள் கோளாயிற்று. 'யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை, ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே' என்ற சூத்திரத்தால் இப்பொருள்கோளின் றன்மை யினிது விளங்கும். 'எண்ணுதற்காக்கரி' தென்பதனைக் காத்தன ரென்பதனோடு இயைத்து, (இவர் செய்கின்ற காவல் பிறரால்) எண்ணுவதற்கும் செய்வதற்கும் அரிதாகுமாறு காத்தனரெனப் பொருள் கொள்ளுதலும் ஒரு வழியாம். 'இரண்டு மூன்றுநாள் விண்ணவர்க்காக்கிய முனிவன் வேள்வியை, மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள், கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர். (அக்காவல்) எண்ணுதற் காக்கரிது என இயைத்து அரிதென்பதனை முற்றாக்கிப்பொருள் கொள்ளலும் ஒரு வகையாம். இவ்வுரையிற் பெரும்பாலன உரையாசிரியச் சரபங்களாகிய வை. மு. சடகோபராமானுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் முதலியவர்கள் பாலகாண்டத்துக் கெழுதியுள்ள உரைகளிற் குறிக்கப்பட்டனவாகுமாகலின் அப்பெரியார்க்கு எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

---

நாலணாவை லாட்டரி கட்டிவிடில், இரவும் பகலும் அதே நினைவிலிருக்கின்றனர் சிலர்; வேறு சிலர் அதை அடியோடு மறந்து போகின்றனர். இப்படி மறப்போருக்கே முதல் பிரைஸும் விழுகிறது.

# வீர மொழிகள்

டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.

1. ஜலத்தின் துளிகள் விழுவதினாலேயே ஒரு ஜல பாத்திரம் நிறைந்திருக்கிறது. ஒரு மூடன் தீமையை சிறிது சிறிதாக சேர்ப்பதினாலேயே தீமை நிறைந்தவனாகிறான்.

2. நியாயத்திற்காக சண்டை செய்பவர்கள், பிறரிடம் நியாயமாக நடந்து கொள்ளவேண்டும்.

3. நன்மையாக உள்ளதை, மந்தமாக செய்வதனால் அவனுடைய மனம் தீமையில் மகிழ்வுறுகின்றது.

(காந்தி)

4. நாம் எதை வேண்டுமாயினும் இழந்துவிடலாம்; ஆனால், நாம் நமது கௌரவத்தை இழக்க நாம் இடந்தரலாகாது.

5. நமது மன சாட்சிக்கு விரோதமாக நாம் நடந்துகொள்வோமானால் நம்மை சிருஷ்டித்தவருக்கு விரோதமாகப் போக நேரிடும்.

6. குற்றமற்றவரை—ஒன்று மறியாதவரை, நிராகரித்து கண்டிப்பது எவ்வளவு வெட்கக்கேடான காரியம்.

(ஸக்கராத்)

7. அறியாக் காலத்தில் நம்பிச் செய்வதெல்லாம் பக்தி என்றும், பிறகு அறிந்து செய்வதெல்லாம் ஞான மென்றும் சொல்வர்.

8. மனித வாழ்க்கையை அன்பு இல்லாமல் நடத்துதல் கஷ்டம்.

9. பின்பற்ற முடியாதவை அவசியம் ஆதரிக்கப்படவாவது வேண்டும்.

(ஷேக்ஸ்பியர்)

10. ஒரு மனிதன் தன் மனிதர்களால் செய்யப்பட்ட சட்டங்களை அநுசரித்து நடப்பதைவிட, தன் மன சாட்சிக்குட்பட்டு முதல் முதல் நடக்க வேண்டும்.

---

கோழி யொன்றைக் கட்டிப்போட்டிருக்கும் தூணருகிலேயே குள்ளவாத்தின் கழுத்தை.........அப்போது கோழியின் இருதயம் எப்படித் துடிக்குமோ !



187505

11. அநீதமாக சிறையிலடைக்கும் அரசாங்கத்தின் கீழ் நியாயமாக இருக்கும் மனிதனுக்கு தகுந்த இடம் சிறையே.

(தோரோ)

12. தியாகிகளின் உதிரமின்றி சுதந்திரக் கோயில் கட்ட முடியாது.

13. எங்கே துன்பமிருக்கின்றதோ, அங்கே பேரின்பவீடிருக்கிறது.

(ஆஸ்கார் ஓயில்ட்)

14. சத்தியாக்கிரகம் (சாத்வீக எதிர்ப்பு) மனித கஷ்டங்களைப் போக்குவதற்கு சிறந்த கைக் கோல்.

(விக்டர் ஹியூகோ)

15. அடிமையை யொழித்து சுதந்தர மடைவதே மனித வாழ்வின் லட்சியம்.

(கீதை)

16. அநேக கோடி யுகம் உலகில் வாழ்ந்து, வாழ்க்கையின் சுலபமான அமிர்த ரசத்தைப் பருகி, சுகத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல செய்கைகளைச் செய்துகொண்டு நமது பாரதத்தில் வாழ்வோம்.

(தாபட்டகர்)

17. உதய மலையில் சூரியன் உதயமாகிறான். பட்சிகள் பாடி ஆடுகின்றன. புத்துயிர் அமிர்தம் அளாவி புனிதமான காற்று வீசுகின்றது. உன்னுடைய கருணையான அருண ராகத்தினால் தூங்கியிருக்கும் பாரதம் விழிக்கட்டும்.

(ரவீந்திரர்)

18. நான் தேசம் முன்னேற்றம் அடையும் என்ற நம்பிக்கையினால், கஷ்டத்தை சுகமாகவும், சாந்தமாகவும், தைரியமாகவும் சகிப்பேன்.

(திலகர்)

19. சந்தர்ப்பங்கள் வாய்க்காவிட்டால் நானே சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்வேன்.

(நெப்போலியன்)

20. நமது ஜீவிய காலத்திற்குள் சுதந்தரத்தைப் பார்க்கமுடியாமற் போனாலும், அதன் அஸ்தி வாரத்தில் நமது எலும்புகளைப் போட்டு சுதந்தரமாகிய சுவரை எழுப்புவோம்.

(மொத்திலால்)

---

ஒரு சிலர், நாட்டில் பஞ்சம் என்று கூறுகின்றனர். வேறு சிலர் பஞ்சமென்பதே கிடையாது என்று அறைகின்றனர். யாருடைய மொழியைக் கேட்பது ?




# மௌலானா மகமதலியின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

மௌலானா மகமது அலி ஜனவரி மாதம் 4-ந் தேதி காலை 9–30 மணிக்கு லண்டனில் காலமானார். அவருடைய பிரேதம் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படும். அவர் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு முள்ள வித்தியாசங்களை ஒழித்து இந்தியத் தேசியத்தை வளர்க்கத் தமது கடைசி யோசனைகளைக் குறித்து ஜனவரி மாதம் 3-ந் தேதி நடு இரவு வரை பரிசீலனை செய்து கொண்டிருந்தார். பிறகு அவர் காலை 5-மணி முதல் பிரக்ஞையற்ற நிலைமையிலிருந்தார். அவர் திடீரென மரண மடைந்ததற்கு அவரது இரத்தக் குழாய்கள் உடைந்துவிட்டதே காரணமென்று அறியப்படுகிறது. அவரது பிரேதம் கெட்டுப்போகாமல் பெட்டிக்குள் வைத்து அடக்கம் செய்ய இம்மாதம் 4-ந் தேதியன்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலஞ்சென்றவரின் ஞாபகார்த்தமாக வட்டமேஜை மகாநாட்டு பிரிட்டிஷ் இந்திய டெலிகேட்டுகள் எல்லோரும் அவர் தங்கிவந்த ஹோட்டலுக்கு வந்து தங்களுடைய மரியாதையைச் செலுத்தினார்கள். அவரது மரணம் இந்தியாவுக்கு பெரும் நஷ்டமென்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

கன்சர்வெடிவ் கட்சி டெலிகேட்டுகளின் சார்பாக லார்டுபீலும், ஸ்ரீ. வெட்ஜ்வுட்பென், ஸ்ரீ. லான்ஸ்பரி ஆகியோரும் தங்களுடைய சகாக்களில் ஒருவரை இழந்துவிட்டதற்கு வருந்தி மௌலானா ஷவுகத்அலிக்குக் கடிதங்கள் அனுப்பியிருக்கின்றனர்.

## ஸ்ரீ. மகமது அலியின் ஜீவிய சரித்திரம்.

மௌலானா மகமதுஅலி இந்தியத் தாயின் முதன் மக்களில் ஒருவர். ஸ்ரீ. காந்தியைப் போன்று அலி சகோதரர்களும் ஒரு இந்திய சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய முன்னோர்கள் மோரோதாபாத்தில் வசித்துவந்தார்கள். மௌலானாவின் பாட்டனாராகிய ஸ்ரீ. அலிபக்ஷ்கான் ராம்பூர் சமஸ்தானத்தில் உயர்ந்த உத்தியோகம்வகித்தவர். அவர் ராம்பூர் நவாப்புக்கு வலதுகையைப்போல் உதவி செய்து வந்தார். இந்தியாவில் 1857-ம் வருஷம் சிப்பாய்க் கலகம் ஏற்பட்டபோது ஸ்ரீ. அலிபக்ஷ் பிரிட்டிஷாருக்கு மிகுந்த உதவியாயிருந்தார். அவருடைய ஊழியத்தைப் பாராட்டி அவருக்குப் பல வெகுமதிகள் அளிக்கப்பட்டன. மௌலானா மகமது அலியின் தகப்பனாராகிய ஸ்ரீ. அப்துல் அலிகானும் ராம்பூர் சமஸ்தானத்தில் ஒரு உயர்ந்த உத்தியோகம் வகித்தார். ஆனால் அவர் இளவயதிலேயே காலராவில் மரணமானார். அவருடைய மனைவிக்கு வயது அப்போது 27. அவர் இறக்கும்போது மௌலானா ஷவுகத் அலி 2-வயது பையனாகவும், மௌலானா மகமது அலி ஒரு கைக் குழந்தையாகவு மிருந்தார்கள். அப் பையன்கள் பின்பு தங்களுடைய தாயின் சொந்தப் பொறுப்பில் வளர்ந்து வந்தார்கள். அத்தாய் தாமே அவர்களுக்குக் கல்வி போதித்து வந்தார். அவர் தமது பந்துக்களின் ஆக்ஷேபங்களையும் பொருட்படுத்தாமல் அப்பையன்களை அலிகாருக்கு அனுப்பி, கல்வி கற்கும்படி செய்தாள். அவர்கள் அலிகார் காலேஜில் பி. ஏ. வரை படித்தார்கள். அலி சகோதரர்கள் மற்ற மாணவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டனர். பின்பு மௌலானா மகமது அலி சீமைக்குப் போய் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் சேர்ந்து கொண்டார். அவர் லிங்கன்ஸ் கல்லூரியில் 1898 முதல் 1902ம் வருஷம் வரை வாசித்தார். அவர் அங்கு இலக்கிய விஷயங்களிலும் மற்றும் பல துறைகளிலும் அக்கரை செலுத்தியதால் அவர் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேற முடியாமல் போய்விட்டார். மௌலானா ஷவுகத் அலி பி. ஏ. பரீட்சையில் தேறியதும் ஒரு உத்தியோகம் ஏற்றுக்கொண்டு இங்கிலாந்திலுள்ள தமது சகோதரருக்கு ஆதரவளித்து வந்தார். 1902-ல் ஸ்ரீ. மகமது அலி இந்தியாவுக்குத் திரும்பி பரோடா சிவில் சர்விஸில் சேர்ந்தார். ஆனால் ஸ்ரீ. மகமது அலி போன்றவருக்கு சமஸ்தானம் போதுமான ஊழியம் செய்ய இடமளிக்கவில்லை. அவர் தமது சமூகத்துக்கு உழைக்கவேண்டுமென விரும்பினார். அதனால் அவர் ரஜா எடுத்துக் கொண்டு கல்கத்தாவில் "காம்ரேட்" என்று வாரப் பத்திரிகையைத் தொடங்கி நடத்திவந்தார். பின்பு இந்திய தலைநகரம் டில்லிக்கு மாற்றப்பட்டபோது அவர் தமது ஆபீஸையும் 1912 செப்டம்பரில் டில்லிக்கு மாற்றிக்கொண்டார். அவர் மற்றப் பத்திரிகைகளுக்கும் நிருபங்கள் அனுப்பிவந்தார். அவர் மிண்டோமார்லி சீர்திருத்தத்தின் மீது எழுதிய வியாசங்கள் மீது அவருக்கும் ஸ்ரீ. கோகலேக்கும் மிகுந்த விவாதம் உண்டாயிற்று. அவர் பத்திரிகைத் தொழிலில் வெற்றியடைந்தார். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைக் குறித்து அடிக்கடி எழுதிவந்தார். அவர் ஜாவோரா சமஸ்தான முதன் மந்திரி ஸ்தானத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். 1906-ம் வருஷம் முஸ்லீம் லீக் ஸ்தாபித்தவர்களில் ஸ்ரீ. மகமது அலியும் ஒருவர். 1912-ம் வருஷம் ஸ்ரீ. மகமது அலியும், டாக்டர் அன்சாரியும் துருக்கிக்கு அனுப்ப ஒரு ஆம்புலன்ஸ் தூதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீ. மகமது அலி தற்போதுள்ள கல்வி முறையைக் கண்டித்து வந்தார். கல்வியைத் தேசிய முறையில் ஏற்படுத்த பெரிதும் வேலை செய்தார். அவர் கடல் மடை திறந்தாற்போல் பேசுகிறவர்களில் ஒருவர். அவர் மிகவும் தைரியமாகப் பேசுபவர். அவர் உயிர்போனாலும் பொய் சொல்லமாட்டார். உலக

---

பெட்டியைக் காலியாக வைக்கலாகா தென்றெண்ணி ஓர் காலணாவைப் போட்டு வைத்தால், வீட்டிலிருக்கும் பையன் அதைச் "சுளையம்" வைத்து விடுகிறான்.



---

மேலதிகாரியான துரையை அவசரமாகப் பார்த்துப் பேசவேண்டும்; மணி பர்ஸிலோ காலணா கிடையாது. கீழிருக்கும் பட்ளர் அவர்களுக்கு காணிக்கை செலுத்தினால்தானே மேலே போக விடுவார். என் செய்வது?

சமாதானத்தையே நான் விரும்புகிறேன் என்று அவர் ஒரு தடவை கூறினர். அவர் உயர்ந்த பத்திரிகை யாசிரியர்களில் ஒருவர். அவர் தமது கருத்துக்களைத் தாராளமாகவும் ஸ்பஷ்டமாகவும் வெளியிட்டு வந்தார். அவர் ஒரு கவியுமாவர். கன்னெஞ்சமும் கரையும்படி கூறும் தன்மை அவரிடமிருந்தது. அவர் ஒருபோதும் சர்க்காருக்கு விரோதமாக வேலை செய்யவில்லை. அவர் யுத்தத்தின்போது துருக்கியை நேசித்ததால் சர்க்கார் அவருடைய பத்திரிகைகளைப் பறிமுதல் செய்ததுடன் அவரையும் 1914-ம் வருஷம் சிறையிலடைத்தனர்.

அவருடன் ஸ்ரீ. ஷவுகத் அலியும் சிறை சென்றார். பின்பு அவர்கள் 1919 டிசம்பர் 25-ந் தேதி விடுதலை யடைந்தனர். அவர் பின்பு கிலாபத் வேலைகளில் இறங்கி வைசிராயுடன் பேட்டி கண்டு இங்கிலாந்துக்கும் ஒரு தூதுக் கூட்டத்தின் தலைவராகச் சென்றார். அதில் எவ்விதப் பலனும் ஏற்படாததால் அவர் 1921-ம் வருஷம் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து தேச விடுதலைக்காகப் பாடுபட்டார். அவர் ஸ்ரீ. காந்தியுடன் தேச முழுவதும் சுற்றி திலகர் நிதிக்கு ஒரு கோடி ரூபா வசூலித்தார். கதருக்காகவும் உழைத்தார். கிலபாத் மகாநாடுகளுக்குத் தலைமை வகித்தார். தலைவர்கள் தீவிரமாக வேலை செய்யவே அதிகாரிகள் திகிலடைந்தனர். அதனால் செப்டம்பர் மாதம் 24-ந் தேதி அவர் ஸ்ரீ. காந்தியுடன் பெஜவாடாவில் கைதியாயினர். மௌலானா ஷவுகத் அலியும் பம்பாயில் கைதியானார். நவம்பர் 1-ந் தேதி ஸ்ரீ. மகமது அலிக்கு 2-வருஷம் தண்டனை யளிக்கப்பட்டது. பின்பு ஸ்ரீ. மகமது அலி காங்கிரஸ் தலைவரானார். சிறையிலிருந்து திரும்பியபின் அவர் அரசியலில் அதிகமாகக் கலந்து கொள்ளாமலிருந்தார். 1930-ல் ஸ்ரீ. காந்தி சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பித்தபோது அவர் அதில் கலந்துகொள்ளவில்லை. பின்பு அவர் வட்டமேஜை மகாநாட்டு டெலிகேட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் வட்டமேஜை மகாநாட்டில் பேசிய பிரசங்கம் பிரிட்டிஷாருக்குத் திகில உண்டாக்கிற்று. இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்காவிட்டால் தாம் இந்தியா திரும்பப்போவதில்லை யென்றும், பிரிட்டிஷார் தமக்கு லண்டனிலேயே கல்லறை தயாரிக்கவேண்டுமென்றும் கூறினர்.

மௌலானா மகமது அலி ஸ்தூல சரீரத்தையும், நெடிய உருவத்தையும், பயங்கர பார்வையையு முடையவர். அவர் லண்டனுக்குத் தமது மனைவியுடனும் சகோதராருடனும் சென்றார். அங்கு சில நாட்களாக வியாதியாயிருந்தார். ஹிந்து முஸ்லிம் சமரஸத்துக்காக பல யோசனைகளை வெளியிட்டு உழைத்துவந்தார். குயவனுக்கு ஒருநாள் வேலை தடிகாரனுக்கு அரை நிமிஷ வேலை யென்பதற்கொப்ப இந்திய தாய் இத்தனை காலமாக வளர்த்து ஊருக்கு உழைக்கவிட்டிருந்த ஸ்ரீ. மகமது அலியை எமன் சிறிதும் ஜீவகாருண்யமின்றி சீக்கிரத்தில் அழைத்துவிட்டதற்காக இந்திய மக்கள் பெரிதும் வருந்துகின்றனர்.

---

மழை பெய்யுங்காலத்தே வெய்யிலின் அருமை தெரிகிறது. கொடுமையான வெய்யில் காயும்போதே மழையின் நன்மை விளங்குகிறது.




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(478-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

அம்மாது உடனே பேரிடிவிழுந்த நாகம்போல் ஆவிசோர்ந்து நிற்க முடியாமல் அருகிலிருந்த ஆசனத்தில் அடியற்ற மரம்போல் சாய்ந்து விட்டாள்.

ஆனந்தஸிங் அவளை நோக்கி, "ஆயினும் பயப்படாதே. உன்வரையில் காப்பாற்றிக் கொள்ள உனக்குப் பிரியம் இருக்கும்பட்சத்தில் உடனே என்னைக் கற்பகம் இருக்கும் அறைக்கு அழைத்துக் கொண்டுபோ!' என்றான்.

அம்மாது:—"அந்தோ! அவள் இங்கில்லையே சத்தியமாய்க் கூறுகிறேன்" என்று பாசாங்கு செய்தாள்.

ஆனந்த:—"சரி தயவு செய்து என்னை வீட்டிற்குள் வழிகாட்டு. என் மனத் திருப்திக்குப் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் அம்மா! நான் முன்னாடியே கூறிவிடுகிறேன். நான் மிக்க அக்கரையோடு இதில் வேலை செய்கிறேன். நீ ஏதாவது எனக்குத் துரோகம் செய்தாயோ, மறுநிமிடம் என் உயிர் எப்படியானாலும் எனக்கு ஒரு துரும்பு மாதிரியே. ஆனால் நீ துரோகம் நினைத்த அந்த நிமிடமே யுன்னைச் சவமாய் வீழ்த்தி விடுவேன் என்பது நிச்சயம் என்பதைப் பூரணமாய் நம்பு" என்றான்.

அம்மாது:—சத்தியமாய்க் கூறுகிறேன் அப்பெண் இங்கில்லை.

அவள் வார்த்தையால் ஆனந்தஸிங் சற்று கலக்க மடைந்தாலும், "ஆயினும் நான் சோதித்த பின்பே உன் வார்த்தையைப் பூரணமாய் நம்புவேன்" என்று உறுதியாய்க் கூறினான்.

அதற்குமேல் அவள் வழிகாட்ட ஆனந்தஸிங் அவ்வீடு முழுமையும், அதன் கீழ் அறையும்கூட நன்றாய்ச் சோதித்துப் பார்த்தான். கற்பகத்தின் வாசனைகூட எங்கும் காணப்படவில்லை. அவன் மிக்க கோபமடைந்து,

"அவள் எங்கு ஒளித்து வைக்கப்பட் டிருக்கிறாள்?" என்று கேட்டான். அம்மாது உண்மையில் எனக்குத் தெரியாது என்றாள்.

ஆனந்தஸிங்:—'மேட்டுத் தெருவிலிருக்கும் வீட்டிலிருந்து உன் கணவனும் மற்றவர்களும் புறப்பட்டபோது, அவளைக்கூடத்தானே கொண்டு வந்தார்கள்?" என்றான்.

---

ஒவ்வொரு காய்கறி வகையிலும் ஒரு கெட்ட குணம் இருந்துகொண்டேதானிருக்கும் அதற்காக வெறுஞ் சோற்லைப் புசிப்பாருண்டா?

*அம்மாது:*—"ஆம். ஆனால் அவள் எப்படியோ தப்பித்துக் கொண்டு போய் விட்டாள்" என்றாள்.

*ஆனந்தஸிங்:*—"சரி, அவள் இங்கு காணப்படவில்லை. உன் புருடன் வந்ததே அப் பெண்ணின் உரோமங்களில் ஒன்றுக்குக் கெடுதி சம்பவிக்கும் பக்ஷத்தில் பத்தாயிரம் மடங்காய் அவன்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்வேன் என்று நான் கூறியதாய்க் கண்டிப்பாய் அவனிடம் கூறு. அதோடு என்னிடம் அவன் தப்ப முடியாதென்றும், நான் எந்த நிமடத்தில் நினைத்தாலும் அவனைப் பிடிக்க என்னால் முடியும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கொள்ள வேண்டாம் என்றும் நான் கூறியதாய் அவனிடம் கூறு" என்றான்.

*அம்மாது:*—ஓ அய்யா! தாங்கள் இங்கு வந்ததாகவே நான் அவனிடம் கூறமுடியாது. உண்மையாய்க் கூறுகிறேன். அவன் உடனே என்னைக் கொன்றே போடுவான்.

ஆனந்தஸிங்குக்கு அம்மாது மனப்பூர்வமாகவே அவ்வாறு கூறுகிறாள் என்று மனதிற்பட்டது. ஆகையால் தான் அங்கு வந்ததே யவனுக்குத் தெரியாமலிருப்பது நல்லதே யென்று சிந்தித்துக்கொண்டு "இவள் கற்பகத்தைப் பற்றி யுண்மையே கூறினாள். கற்பகம் இத் துஷ்டர் கையிலிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு போய்விட்டாள். இனி யிவ் வீட்டில் நமக்கு ஒரு வேலையும் இல்லை" என்று தீர்மானித்துக்கொண்டு அதைவிட்டுப் புறப்பட்டான்.

இப்போது ஆனந்தஸிங்குக்கு இரண்டு முக்கிய விஷயங்கள் நன்றாய் விளங்கின. அவை எவையெனில், அந்தப் புது வீட்டின் அமைப்பு நன்றாய்த் தெரிந்து விட்டது. இரண்டாவது கிட்டுவின் மனைவி யவனுக்கு நடுக்குவதோடு அவனை வெறுக்கிறாள் என்பவைகளே.

## 19-வது அத்தியாயம்

ஆனந்தஸிங் சற்றுநேரம் இன்னும் இவ்வீட்டில் கண் வைத்துப் பார்த்திருந்து, இன்னும் ஏதாவது விஷயம் அகப்படுகிறதா பார்ப்போம் என்று நினைத்தான். ஆனால் இப்போது நடந்த விஷயங்களால் அவர்களனைவரும் தன்னைப்பற்றி மிக்க ஜாக்கிரதையா யிருப்பார்களென்று சிந்தித்து, நேராய்த் தன் வாசஸ்தலத்திற்குச் சென்று சயனித்துக் கொண்டான்.

ஆனந்தஸிங் மறுநாட்காலை புதிதா யொரு மாறுவேட மணிந்துகொண்டு கற்பகம் முதலில் அடைக்கப்பட் டிருந்த வீட்டை நோக்கிச் சென்று அதன் எதிரில் மறைவான விடத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கருத்தாவது, முன்னாள் கள்ளர் அவ் வீட்டை விட்டு ஓடிவிட்டாலும் இன்று எப்படியும் வருவார்கள் என்று கருதி, அவர்கள் நடவடிக்கைகளைக் கவனித்து அறியக்கூடிய விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பிறகு மேட்டுத்தெரு வீட்டிற்குச் சென்று கற்பகத்தைத் தேட முயலவேண்டும் என்பதே.

---

சிகரெட்டுகள் மட்டுமே அன்னிய நாட்டிலிருந்து வருகிறதென்றும் சுருட்டுகளைக் குடிப்பதில் தோஷமில்லை என்றும் கூறுகிறார் ஒரு தேசியத் தொண்டர்.



முதலிலேயே கற்பகத்தைத் தேடலா மென்றால் விவகாரம் அடியோடு கெட்டுப்போகு மென்பது அவன் அபிப்பிராயம். அவன் நெடுநேரம் காக்க வேண்டியதா யிருந்தது. சுமார் இரண்டு மணி நேரங்கழித்து கிட்டு அவ் வீட்டி லிருந்து வெளியில் வந்தான். வீதியில் நின்று முன்னே முன்னும் பின்னும் பார்த்து விட்டுப் பிறகு நெடுகச் சென்றான். ஆனந்தஸிங் இவனைத் தொடர்ந்து செல்லவேண்டும் என்று அவன் மனதில்பட்டது.

"கிட்டு அக்கள்ளக் கூட்டத்தின் தலைவன். இவன் இன்னும் என்ன சதியாலோசனை செய்கிறானோ? ஆகையால் இவன் செய்கையை முன்னம் அறியவேண்டியது நல்லது என்று கருதினான். உடனே இதுதான் சரி யென்று அவ்வாறே செய்யத் துணிந்தான்.

உடனே அவன் தொடர்ந்து சென்றான். சுமார் ஒரு மணிநேரம் சென்ற பின், "கிட்டுக்குத் தன்னை யாரோ பின்தொடர்ந்து வருவதாய்த் தெரிந்தே நடக்கிறான் என்று அவன் மனதில்பட்டது. அப்படியானால் நாம் ஏமாற்றப் படுகிறோம் என்று அவன் புத்தியிற்பட்டது. "சரி நாம் இங்கு வந்திருப்போம் என்று உத்தேசித்தே, வீட்டி லிருப்போர் தன் ஏற்பாட்டிற்குத் தகுந்தபடி நடக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறான்" என்று அவன் மனதில் நன்றாய்ப் பட்டுவிட்டது.

அதன்மேல் மனவருத்தத்தோடு, கிட்டுவைப் பின் தொடர்வதை விட்டு 4-வது நம்பர் போலீஸ் ஸ்டேஷனுக் கருகி லிருக்கும் தபாலாபீஸுக்குச் சென்று தனக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா வென்று விசாரித்தான்.

உடனே யொரு கடிதம் அவன் கையிலளிக்கப்பட்டது. அதன் மேல் விலாசத்தின் பக்கத்தில் சாமிநாத னிடமிருந்து என்று குறித்திருப்பதைக் கண்டதே யவனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவே யில்லை. உடனே யதைப் பிரித்துப் பார்த்தான். அதில் கீழ்க்கண்டபடி வரையப்பட் டிருந்தது:—

"சுந்தரஸிங் அவர்களுக்கு—உம்முடைய உண்மைப் பெயரை யறிந்து கொள்ள வேண்டுமென்று எனக்கு மிக்க ஆவல். ஆயின் நான் ஆத்திரப்படவில்லை. எனது அதிசயமான துப்பறியும் சிங்கம் என்றே அடிக்கடி நினைத்துக் கொண்டிருக்கிறேன். எவ்வளவு சீக்கிரம் வரக்கூடுமோ அவ்வளவு சீக்கிரமாய் வந்து என்னைப் பார்க்கவேண்டும். நான் சில நாழிகைகளுக்கு முன்பே யவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்டேன். இப்போது நான் பூரண க்ஷேமமாகவும் பத்திரமாகவும் இருக்கிறேன். இப்போது அர்த்த இராத்திரி. நான் க்ஷேமமா யிருக்கிறேன் என்று உமக்குத் தெரிவிக்குமட்டும் என் மனம் நிலைப்படவில்லை. ஏனெனில் இரவு நடந்த பயங்கர சம்பவங்களுக்குப் பின் என்னைப்பற்றி யுமது மனம் பெரிய வேதனைப்பட்டுக் கொண்டிருக்குமென்று எனக்குத் தெரியும். தங்கள் துணையில்லாதிருந்தால் இப்போது நான் உயிரோடிருக்க மாட்டேன். இப்போது தாங்கள் முன் தங்களுக்குச் செய்த உதவிக்கு பூரணமாய்ப் பதில் செய்து விட்டீர்கள். தயவுசெய்து எவ்வளவு சீக்கிரத்தில் வரக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வாருங்கள். ஏனெனில் நான் தங்களுக்குச் சொல்லவேண்டிய அப்படிப்பட்ட அதிசய சங்கதிக ளிருக்கின்றன. இப்போது யாவும் தங்களுக்குக் கூறக்கூடும். இங்கு என்னைப் பார்க்க வரும்போது தங்கள் பெயர் சுந்தரஸிங் என்று கூறுங்கள். ஏனெனில் எனக்கு அடைக்கலந் தந்திருக்கும் உத்தம மாது ஒருவருக்கும் நான் இங்கிருப்பதையே கூறமாட்டாள். ஆ! அவள் மிக்க உபகாரி. நேரில்

யாவும் கூறுவேன். ஓ! அந்தப் படுமோசமான சதியாலோசனையைப்பற்றி நான் எவ்வளவோ கூறவேண்டிய திருக்கிறது. அப்படிப்பட்ட விஷயத்தில் நான் எங்கேனும் சம்பந்தப்பட் டிருப்பேனா வென்பது அப்போதுதான் உமக்கு விளங்கும்—கற்பகம்.''

கற்பகம் தன்னைக் காப்பாற்றியவர்களுடைய விலாசத்தை அக் கடிதத்தின் அடியில் வரைந்திருந்தாள். அந்த விடம் மேட்டுத் தெருவின் சமீபத்திலேயே இருந்தது. ஆனந்தலிங் உடனே ஒரு வாடகை வண்டியிலேறி அவ் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான். ஒரு மரியாதையான மாது வந்து கதவைத் திறந்தாள்.

ஆனந்:—''அம்மா நான் கற்பகத்தைக் காணவேண்டும்'' என்றான்.

அம்மாதும் அவள் பக்கத்திலிருந்த வேலைக்காரியும் உடனே திடுக்கிட்டு, ''அய்யோ! கற்பகத்தைக் காணவேண்டுமா—ஏன்?'' என்றாள்.

ஆனந்தலிங் புன்சிரிப்போடு ''என் பெயர் சுந்தரம்'' என்றான்.

இதைக் கேட்டதே இரண்டு மாதர்களும் ஏக காலத்தில் ''அய்யோ சுந்தரமா?'' என்று கூவிக்கொண்டே முகம் வெளுத்து ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள்.

ஆனந்த:—''நாம் கற்பகத்தைக் காணவேண்டும். இதோ அவள் எழுதிய கடிதம்'' என்றான்.

அம்மாது மிக்க திகிலோடு ''அய்யோ அவள் ஒரு மணி நேரத்திற்கு முன்தான் போய்விட்டாளே. நீதானா நிச்சயமான சுந்தரம் என்பவன்!'' என்றாள்.

ஆனந்தலிங் திடுக்கிட்டு திகிலடைந்து மனக் குழப்பத்தோடு,

''ஆம் ஆம். உன் புண்ணியத்திற்குச் சீக்கிரம் கூறு. யார்கூடச் சென்றாள்?'' என்றான்.

அம்மாது:—அய்யோ அவன் வந்தது முதல் ஏதோ பிசகு நடக்கிறதென்று எனக்குப் பயமாகவே யிருந்தது.

ஆனந்:—அவனா?—ஆடவன் கூடவா சென்றாள். அவன் எப்படி யிருக்கிறான்?

அம்மாது:—இல்லை யில்லை அவள் ஒரு ஸ்திரீயோடு கூடச் சென்றாள். அய்யோ கற்பகம்! அம்மாது அப்படியானால் உன் தாயாரல்லவோ?

ஆனந்த:—அய்யோ என் தாயா? அவள் இறந்து இருபது வருடங்கள் கடந்தனவே. முதலிருந்து நடந்த சங்கதியைக் கூறு சீக்கிரம் அவள் எப்படி யிருக்கிறாள்?

உடனே அம்மாது தடுமாற்றத்தோடும் கலவரத்தோடும் நடந்த விஷயத்தைக கூறினாள். ஆயினும் ஆனந்தலிங் வந்தவள் கிட்டுவின் மனைவி யென்று தெரிந்துகொண்டான். அக்கள்ளர் இவள் இருக்கும் இடத்தை யெப்படி யறிந்து கொண்டார்கள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. இவர்கள் முதலில் அவளை யெப்படிக் காப்பாற்றினார்கள் என்கிற சங்கதியை யறிந்தால் அதன் மூலமாய் ஒரு சமயம் யாவும் தெரிந்து கொள்ளலாமென்று கருதி அம் மாதை நோக்கி,

''அம்மா! நீங்கள் கற்பகத்தை முதலில் எப்படிக் காப்பாற்றினீர்கள். அச் சம்பவத்தை விவரமாய்க் கூறு!'' என்றான்.




**280-பவுன் விலையுள்ள பட்டாக் கத்தி:**—ஸ்காத்லாந்து தேசசுதந்தரப் போராட்டத்தில் தலைமை பெற்று விளங்கிய சர். வில்லியம் வாலஸ் என்பவரின் பட்டாக் கத்தியைச் சமீபத்தில் ஏலம் போட்டதில் அது 280 பவுனுக்கு விலை போயிற்று. அதை ஸ்காத்லாந்தில்தான் வைத்திருப்பார்கள். பெரியோர்களுடைய சாமான்களை விற்கும்போது இவ்வாறு போட்டி போட்டு வாங்குகிறார்கள். ஆனால் சரித்திர சம்பந்தமான சாமான்களை வாங்குவாரில்லை. இங்கிலாந்து, ஸ்காத்லாந்து ஆகியவற்றின் பார்லிமெண்டுகளைப் பிணைத்த உடன் படிக்கையை எழுதிய இறகு பேனாவை ஏலம் போட்டதில் அது 31-பவுனுக்குத்தான் விலை போயிற்று.

**மண் முதலியவற்றைத் தின்போர்:**-தென் அமெரிக்காவில் ஆண்டஸ் மலையிலிருந்து ஓடும் ஓரினோகோ என்னும் பெரிய ஆற்றின் கரையில் வசிக்கும் ஜனங்கள், அவ்வாற்றில் வெள்ளம் புரண்டு வடிந்த பின்னர் அதில் படியும் ஒருவகை மண்ணை எடுத்து சூரிய கிரணத்தில் உலர்த்தி வைத்துக் கொள்கிறார்கள். அதற்கு அவர்கள் 'போயா' எனப் பெயர் கொடுத்திருக்கின்றனர். அவர்கள் பலஹீனத்தை யடையும்போது அவ் வுருண்டைகளைத் தண்ணீரில் கலந்து சாப்பிட்டு விடுகின்றனர். அதில் ஜீவதாது பலமடைவதற்குத் தக்க சத்து ஏதோ இருப்பதாக சையன்ஸ் அறிஞர்கள் கூறுகின்றனர். பட்சிகளின் கூடுகளைத் தின்னும் ஜாதியாரும் சீனத்தில் சிலர் இருக்கின்றனர். ஆபிரிக்கர்களில் ஒரு வகையார் வாசனை சோப்புகளைத் தின்கின்றனர்.

**பூமி வளத்தைத் திருடுவோர்:**—கானடாவைச் சேர்ந்த ஆன்டாரியோவில் ஒரு விவசாயி ஒரு மாத காலம் வெளியூருக்குப் போயிருந்தார். பிறகு வந்து பார்த்ததில் யாரோ திருடர்கள் சுமார் 18-அங்குல ஆழம் வரையுள்ள நிலவளத்தை யெல்லாம் சுரண்டி எடுத்துக் கொண்டுபோய் விட்டிருந்தனர். அதனால் அப் பூமி பயிரிடுவதற்கே தகுதியற்றதாகப் போய் விட்டதாம்.

**10-அடுக்குமாடி யமைந்த முதல் நகரம்:**—முதல் முதலாக இவ்வுலகில் பத்து அடுக்கு மாடிவீடு கட்டப்பட்ட நகரம் அமெரிக்காவைச் சேர்ந்த சிகாகோவே யாகும். அக் கட்டடம் 1885-ம் ஆம் வருஷத்தில் கட்டப்பட்டது. இப்போது பல இடங்களிலும் அதைவிட உயரமான கட்டடங்களைக் கட்ட ஆரம்பித்து விட்டனர். அமெரிக்காவில் மட்டும் 20க்கு மேற்பட்ட அடுக்குகளையுடைய 377-கட்டடங்கள் இருக்கின்றன. லண்டனில் எண்பது அடி உயரம்தான் அளவாகக் கொள்ளப்பட் டிருக்கின்றது.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரமோதூத௵ மாசிமீ—கலியுகாதி 5032, சாலிவாகனம் 1853,
பசலி 1340, கோல்லமாண்டு 1106, ஹிஜரி 1349,
இங்கிலீஷ் 1931௵ பிப்ரவரிமீ—மார்ச்சுமீ

| மாசிமீ | பிப்ரவரிமீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | வியா | தச8-8 | கே9-15 | பிர9-15சி | கும்பரவி நா-22-48 |
| 2 | 13 | வெ | ஏகா10-43 | மூல13-13 | அ13-13பி | சர்வ, மத்வ ஏகாதசி |
| 3 | 14 | சனி | து14-18 | பூரா18-10 | சித்60 | சனிப் பிரதோஷம் |
| 4 | 15 | ஞா | திர18-58 | உத்24-5 | அமி60 | மஹா சிவராத்திரி |
| 5 | 16 | திங் | சது24-20 | திரு30-38 | அ30-38சி | தானியம் செலவிட |
| 6 | 17 | செவ் | அ●30-15 | அவி37-50 | சி37-50மா | சர்வத்திர அமாவாசை |
| 7 | 18 | புத | பிர36-48 | சத45-28 | சி45-28அ | பால்குண சுத்தம் |
| 8 | 19 | வியா | துதி43-30 | பூர53-18 | சித்60 | சந்திர தரிசனம் |
| 9 | 20 | வெ | திரி50-15 | உத்60 | சித்60 | திருதின ஸ்பிருக் |
| 10 | 21 | சனி | சது56-33 | உத்0-35 | சி0-35மா | மாச சதுர்த்தி விரதம் |
| 11 | 22 | ஞா | பஞ்60 | ரே8-20 | அமி8-20சி | மருந்துண்ண, உழவுசெய்ய |
| 12 | 23 | திங் | பஞ்1-58 | அஸ்14-48 | சித்60 | சஷ்டி; சுப முகூர்த்தம் |
| 13 | 24 | செவ் | சஷ்6-8 | ப✕19-55 | சித்60 | கிருத்திகை, மாடு வாங்க |
| 14 | 25 | புத | சப்8-33 | கிரு23-23 | அ23-23சி | |
| 15 | 26 | வியா | அஷ்9-3 | ரோ24-58 | மா60 | |
| 16 | 27 | வெ | நவ7-30 | மிரு24-20 | சித்60 | |
| 17 | 28 | சனி | தச3-55 ஏகா58-28 | திரு21-50 | சித்60 | |
| | 1931௵ மார்ச்சுமீ | | | | | |
| 18 | 1 | ஞா | து51-15 | புன17-28 | சித்60 | |
| 19 | 2 | திங் | திர42-48 | பூச11-43 | சித்60 | |
| 20 | 3 | செவ் | சது33-38 | ஆயி4-48 மகம்57-20 | சித்60 | |
| 21 | 4 | புதன் | ○24-8 | பூரம்49-45 | அமி60 | |
| 22 | 5 | வியா | பிர14-43 | உத்42-23 | மா42-23சி | பால்குண பகுளம் |
| 23 | 6 | வெ | துதி5-48 திரி57-35 | அஸ்35-50 | அ35-50சி | அவமாகம், சாதுர்மாஸ்ய துவிதியா |
| 24 | 7 | சனி | சது51-3 | சித்30-25 | ம30-25அ | சங்கடஹர சதுர்த்தி |
| 25 | 8 | ஞா | பஞ்45-55 | சுவா26-23 | சி26-23மா | சுப முகூர்த்தம், விவாகம் |
| 26 | 9 | திங் | சஷ்42-38 | விசா24-13 | மா24-13சி | தானியம செலவிட |
| 27 | 10 | செவ் | சப்41-5 | அனு23-23 | சி23-23மா | வியாதியஸ்தர் குளிக்க |
| 28 | 11 | புதன் | அஷ்41-33 | கே25-15 | சி25-15மா | கிணறு வெட்ட |
| 29 | 12 | வியா | நவ43-45 | மூல28-30 | சித்60 | தானியம் செலவிட |
| 30 | 13 | வெ | தச47-15 | பூரா33-15 | பி33-15சி | கணிதாரம்பம் செய்ய, ஆயுதம் உபயோகிக்க |

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | குரு |
| சூரி — புத | 15-கும்ப-புத 16-மக-சுக் | | செவ் — |
| சனி சுக் | | | கே |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.


# ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும்.

(நான்காம் பதிப்பு.)

(ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவர் மனைவியாராகிய சாரதாமணி தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் உருவப் படங்களோடு கூடியது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.)

*சாரதாமணி தேவியார் சரித்திரமும் சேர்க்கப்பட்டது; உயர்ந்த சீமை காலிகோ பைண்டுள்ளது;* **இதன் விலை ரூபா 1 12 0**

சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தாவிலே ஞானமே திரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்று தோன்றி, சகல வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் ஓதாதுணர்ந்து, அறியாப் பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்துமதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்து மதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்துவந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளுக்கு இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இங்ஙனம் அவர்க்கும் இவர் குருவாயிருந்தனரென்றால் இவருடைய மகிமை அளவிடற்கரிதாமென்பதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ; இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிக்வும் அற்புதமானது. இவர் உலகப்பற்றைத் துறந்த உத்தமஞானி. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பல விதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக் கூடியவைகள்.

# பாரத வீரர்.

இது புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தில் மானம், குலம், கல்வி, பரோபகாரம், ஊக்கம் முதலிய மேன்மைபொருந்திய குணங்களிற் சிறந்து விளங்கிய நவ வீரர்களின் திவ்விய சரித்திரங்களைக் கொண்டது; இனிய செந்தமிழில், எளிய நடையில், யாவரும் மனோற்சாகத்துடன் படித்தானந்திக்கும்படி எழுதப்பட்டது; முத்தைப்போன்ற அச்செழுத்துக்களில், 113 பக்கங்கள் கொண்ட கிரௌன் சைவில், வெகு அழகாக அச்சிடப்பட்டது. மக்கள் உயர்தர ஒழுக்கங்களில் சிறந்து விளங்குவதற்கு இது ஓர் அனுகூலமான நூல். இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-31 வரை விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# மனமோகன மாணிக்கம்

அல்லது மஹா விந்தையான மாயச் செய்கை.

(மூன்றும் பதிப்பு) இரண்டு பாகங்கள் விலை ரூபா 1-8-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-31 வரை விலை ரூபா 1

## ஸ்ரீ மஹா பாரதம்

## விராடபர்வம். (இதன் விலை ரூபா 1-4-0)

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 28-2-31 வரை விலை அணு 14.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வ தேவதா வசியம்

(பீஜாக்ஷர யந்திரங்களடங்கியது.)

மனிதர், பேய் பிசாசுகளால் வருந்துன்பங்களினின்று நீங்கி, பகைவர் செய்யும் பில்லி சூனியம் மாரணம் முதலியவை தங்களிடம் ஏறுதபடி செய்தும், நோய் நொடிகள் அணுகாமல் தடுத்தும், தேவதைகளையும் மனிதர்களையும் வசப்படுத்தியும், எவ்விடத்தும் எக்காரியத்திலும் ஜெயம் பெற்றும், மிகுந்த ஐசுவரியத்தையும் செல்வாக்கையும் அடைந்தும் வாழ்வதற்கே பிரியப்படுவார்கள். இவற்றை எல்லாம் எளிதில் அடையக்கூடிய மந்திர யந்திரங்களும், அவற்றை அனுஷ்டித்துச் சித்திபெறக்கூடிய மார்க்கங்களும் இதில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் ஒவ்வொரு தேவதைக்கு முரிய மந்திரங்களும், மூல மந்திரங்களும், யந்திரங்களும், பூஜைகளும், தண்ணீர் மந்திரித்தல். வேப்பிலை மந்திரித்தல், விபூதி பிடித்தல், பிசாசு விளக்கல், கழிப்புக் கழித்தல், மந்திரங்கட்டல் முதலியவைகளும், நக்ஷத்திர பலாபலன்களும், அவற்றிற்குச் சாந்திகளும் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. முதல் பாகமும் இரண்டாம் பாகமும் சேர்ந்து விலை ரூபா 1.

இராஜலட்சுமி கம்பெனி, சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

---

**1931.** 24-வது பதிப்பு. **1931.**

# "ஸ்ரீ வித்யா"

ஜேம், ஜென்ட்ஸ், பாக்கெட், பிஸினஸ், பாபுலர் & அபீஷியல்

# டைரிகள்.

தென் இந்தியா முழுவதும் நன்கு மதிக்கப்பெற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

பப்ளிஷர்ஸ் :—ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம், (தென் இந்தியா.)

---

# 1-கல் போட்டோகிராப் மோதிரம்.

இந்த மோதிரமானது எலக்டிரிக் தங்கத்தினல் செய்து மேல் பக்கத்தில் ஊதா, பச்சை அல்லது வெள்ளைக் கல் வைத்திருக்கும்.



